
# ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணி

## முதலாவது தரங்கம்



**ஸ்ரீ நாராயண தீர்த்தர்**

ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகள்

அருளிய

# ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணீ

## முதலாவது தரங்கம்

**( "வேங்கடேச ப்ரியை" என்ற தமிழ் உரையுடன் கூடியது. )**


உரையாசிரியர் :

ஆத்ம வித்யா பூஷண, ஸாஹித்ய விசாரத,
ஸாஹித்ய வேதாந்த சிரோமணீ, ப்ரஸ்தான த்ரய வித்வான்,
வேதாந்த துரீண, திருவனந்தபுரம், அரசு ஸம்ஸ்க்ருத
கல்லூரியில் ஸம்ஸ்க்ருத பேராசிரியராக இருந்து ஓய்வு
பெற்ற, பாரத ராஷ்ட்ரபதி ஸம்மானம் பெற்ற

**வரகூர் பிரும்மஸ்ரீ குருஸ்வாமி சாஸ்த்ரிகள்**

பதிப்பாசிரியர்கள் :

பாஷ்ய பாவக்ஞ, ஸாஹித்ய விசாரத, ஸாஹித்ய வேதாந்த
சிரோமணீ, சாஸ்த்ரபோதன சதுர, சென்னை விவேகாநந்தா
கல்லூரி ஸம்ஸ்க்ருத ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்ற,
பாரத ராஷ்ட்ரபதி ஸம்மானம் பெற்ற

**வரகூர் பிரும்மஸ்ரீ கல்யாணஸுந்தர சாஸ்த்ரிகள்**

**மற்றும்**

**வரகூர் ஸ்ரீ ஸ்ரீகண்டன் அவர்கள்**



நான்காவது பதிப்பு வெளியிடுவோர்

**வரஹுர் ஆடிட்டர் வைத்தீஸ்வர அய்யர் குடும்பத்தினர்**
**பு. எண். 50 (ப. எண். 107) ராமசாமி தெரு,**
**மண்ணடி, சென்னை – 600 001.**
[illegible]



**THE KARNATIC MUSIC BOOK CENTER**
New 23A, Sripuram First Street,Royapettah,
Chennai 600 014. ☎ 2811 1716, 2811 3253
E-mail : kmbc@vsnl.net Website: www.carnaticbooks.com

முதல் பதிப்பு : 1986
இரண்டாம் பதிப்பு : 1995
மூன்றாம் பதிப்பு : 2005
நான்காவது பதிப்பு : 2008

© Sri Narayanatheertha Educational and Charitable Trust, Chennai

**Copies can be had from :**

1) Sri V. Krishnamurthy,
No.1, 9th Cross Street,
Indira Nagar,
Chennai - 600 020.
Phone : 2442 3521

2) Sri G. Nilakantan
J895, J Block 18th Street,
Vaigai Colony, Anna Nagar West,
Chennai - 600 040.
Phone : 2616 4090

3) Sri K.S. Mallikarjuna Bhagavathar,
New No.22 / Old No.32,
Annai Jaishree Apartments,
Ramakrishnapuram 3rd Street,
West Mambalam, Chennai - 600 033.
Phone : 24745761 / 23700921

4) Sri V.V. Mani
No.50, (Old No.107) Ramasamy Street,
Mannady, Chennai - 600 001.
Phone : 2524 4408

---

Printed by: K.K. Karthikeyan,
Proprietor,
LKM Computer Printers,
Old No.15/4, New No.33/4, Ramanathan Street,
T. Nagar, Chennai - 600 017.
Phone : 24361141

# நான்காவது பதிப்பு வெளியிட்டோரின் முன்னுரை

ஸ்ரீ நாராயண தீர்த்த கல்வி மற்றும் அறக்கட்டளை யின் அனுமதியுடன், ஒன்று முதல் ஆறு முடிய தரங்கங்களை தமிழாக்கம், தமிழ் உரையுடன் நான்காவது பதிப்பாக வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். எங்களுக்கு அனுமதி வழங்கிய ஸ்ரீ நாராயண தீர்த்த கல்வி மற்றும் அறக்கட்டளையினருக்கு, எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

சேங்காலிபுரம் ஸ்ரீஸ்ரீ விட்டல்தாஸ் ஜயகிருஷ்ண தீக்ஷிதர் அவர்கள் நடத்தி வரும் பக்தி ரஸம் கொண்ட "தரங்கிணீ" கீத நாமசங்கீர்த்தன உபன்யாஸ மகிமையால், பக்தர்கள் தாங்கள் பிரவசனத்தில் கேட்டு மகிழ்ந்ததை, படித்து, ரஸிக்க, ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணீ புத்தகங்களை வாங்கி படித்து பயன் பெற்றுள்ளார்கள். அச்சிடப்பட்ட புத்தகங்களின் இருப்பு குறைந்து, மறுபதிப்பு அச்சிடும் அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆகையால் இதுவரை தரங்கிணீ புத்தகங்களைப் பெறாத பக்தர்களின் தேவையை பூர்த்தி செய்ய நான்காம் பதிப்பாக தரங்கிணீ ஒன்று முதல் ஆறு முடிய பாகங்களை, மூன்று புத்தகங்களாக, சம்ஸ்க்ருதம், அதன் தமிழாக்கம், தமிழில் உரையுடன் கூடியதாக அச்சிட்டு வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஸ்ரீ ஸ்ரீ விட்டல்தாஸ் ஜயகிருஷ்ண தீக்ஷிதருக்கு அவர்கள் ஆற்றிவரும் தெய்வத் தொண்டினை பாராட்டி யும், தரங்கிணீ கீதங்களை மேலும் பிரபலப்படுத்தியும் வருவதற்கு எங்கள் நமஸ்கார பூர்வ நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன், வரஹூர் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் அருளாலும், சத்குரு ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகளின் கிருபையாலும், அம்மகானின் புகழ் மேலும் ஓங்க பிரார்த்திக்கிறோம்.

பக்தர்களின் விருப்பத்திற்கிணங்கி, சுலபமாக உபன் யாசகரின் விளக்கங்களை உபன்யாசத்தின் பொழுதும், பிறகும் படித்து மகிழவும், நற்பலனும் அடைய கையடக்க

பிரதிகளாக, 6 தரங்கங்களையும் 3 புத்தகங்களாக வெளியிடுகிறோம். பக்தர்கள் இப்புத்தகங்களை பெற்று, படித்து, வரஹூர் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள், ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகளின் கிருபையையும், அருளையும் பெற்று, எல்லா நலன்களையும் அடைய பிரார்த்திக்கிறோம்.

எங்களுடைய இந்த முயற்சியில் வரஹூர் ஸ்ரீ V. கிருஷ்ணமூர்த்தியின் அனுபவமிக்க ஆலோசனையும், உதவியையும் பாராட்டி, நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்புத்தகங்கள் அச்சிட, அச்சுப்பிழை திருத்தி உதவிய 'பாகவத சிரோமணி' ஸ்ரீ மல்லிகார்ஜுனன் மற்றும் வரஹூர் வயலின் வித்வான் முத்துசாமி அய்யரின் மாப்பிள்ளை ஸ்ரீ G. நீலகண்டன் ஆகியோருக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறுகிய காலத்தில் நல்ல முறையில் இப்புத்தகங்களை அச்சிட்டுக் கொடுத்த ஸ்ரீ K.K. கார்த்திகேயன், LKM Computer Printers, Chennai-17 அவர்களுக்கும் எங்களுடைய நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வெளியிட்டோர்

**வரஹூர் ஆடிட்டர் வைத்தீஸ்வர அய்யர் குடும்பத்தினர்**

விலாசம்: ஆடிட்டர் V.V. மணி,
பு.எண். 50 (ப.எண். 107),
ராமசாமி தெரு, மண்ணடி,
சென்னை – 600 001.

ஸ்ரீ

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்யர்களான ஸ்ரீமத் சங்கர பகவத்பாதர்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் அதிபதிகளும் ஜகத் குருவுமான ஸ்ரீமத் சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமி களுடைய உத்திரவை அனுசரித்து காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீமஜ்ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளால் நாராயணஸ்மரணம் செய்யப் படுகிறது.

அத்வைத வேதாந்த குருபரம்பரையில் மிகவும் முக்கிய மான ஸ்தானத்தை அலங்கரிப்பவர்களான ஸ்ரீசிவராம வர்ணி என்று புகழ்பெற்ற ஆசார்யர்களின் சிஷ்யர்களும் மிக்க புகழ்பெற்ற ஸ்ரீ பிரும்மாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளின் குருவாகவும் இருப்பவர்களுமான ஸ்ரீநாராயண தீர்த்த ஸ்வாமிகள், சோழமண்டலத்தில் விளங்காநிற்கும் வரகூர் (வரகாபுரீ) என்ற புகழ்பெற்ற கிராமத்தில் கோவில் கொண்டிருக்கும் பகவான் ஸ்ரீவேங்கடேசப் பெருமாளின் திருவருளால், வயிற்றுவலி என்ற நோயிலிருந்து விடுபட்டவர்களாய், அவரைத் துதித்து ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணீ எனப்படும் நூலை இயற்றியுள்ளார்கள்.

ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணீ என்ற நூலில் ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய திருவவதாரம், பாலலீலைகள், பசுக்களை யும் கன்றுகளையும் காப்பாற்றுதல், கோவர்தன மலையை தாங்கியிருத்தல், ராஸலீலை, கம்ஸன் முதலியவர்களை நாசம் செய்தல், த்வாரகை எனப்படும் பட்டணத்தை தோற்றுவித்து அதனில் குடிபுகுதல், ஸ்ரீருக்மணீ விவாஹம் முதலான ஸ்ரீமத் பாகவத புராணத்தில் கூறப்படும் விஷயங்கள், கத்யங்களாலும், பத்யங்களாலும், பலவிதமான ராகங்களில் அமைந்த அழகிய கீர்த்தனங்களாலும்

வருணிக்கப்படுகின்றன. ஆங்காங்கு தைத்தரீய உபநிஷத், சாந்தோக்ய உபநிஷத் பிருஹதாரண்யகோபநிஷத் முதலிய உபநிஷதங்களில் சிறந்ததாகக் கூறப்படும் தத்துவங்கள் நன்கு விளக்கப்படுகின்றன.

பகவத் பஜனம் செய்யும் பாகவதர்களின் சம்பிரதாயத்தில் மிக முக்கியமாக பாடப்படும் இந்த கிருஷ்ண லீலா தரங்கிணீ என்ற நூலுக்கு வரகூர் கிராமத்தைச் சேர்ந்தவரும் ஆத்மவித்யாபூஷணம் என்ற பிருதைப் பெற்றவருமான ஸ்ரீகுருஸ்வாமி சாஸ்திரிகளால் தமிழ் மொழியில் இயற்றப்பெற்ற 'வேங்கடேசப் பிரியை' எனப்படும் உரையானது, நூலில் அடங்கியுள்ள பொருள்களை நன்கு தெளிவாக விளக்குகிறது.

ஸ்ரீநாராயணதீர்த்த (ஸநாதன) வித்யா தர்ம ஸமிதி எனப்படும் ஸ்தாபனத்திலிருந்து வெளியிடப்படும் வேங்கடேச பிரியை எனப்படும் தமிழுரையுடன் கூடிய கிருஷ்ணலீலா தரங்கிணீ எனப்படும் நூலை, ஆஸ்திகர்கள் அனைவரும், குறிப்பாக தமிழ் மொழி அறிந்தவர்கள், நன்கு படித்து, ஸ்ரீ கிருஷ்ண பக்தியை மேலும் மேலும் அபிவிருத்தி செய்து கொண்டவர்களாய், பகவத் கீதையின் உபதேசத்தை அனுசரித்து, தங்கள் தங்கள் கடமைகளை கடைப் பிடிக்கின்றவர்களாய், சர்வேச்வரனுடைய, திருவருளால் எல்லாவிதமான நலன்களையும் அடையுமாறு ஆசீர்வதிக் கின்றோம்.

**நாராயணஸ்ம்ருதி**

யாத்ராஸ்தானம்,
மைலாபூர் (சென்னை)
ரக்தாக்ஷி வருஷம்
பங்குனி மாதம்
சுக்லபக்ஷ த்விதீயை

## PUBLISHER'S FOREWORD

Sri Narayana Theertha Educational and Charitable Trust (Regd) have great pleasure in presenting to the public a new edition of the most precious work, SRI KRISHNA LEELA THARANGINI composed by the great Krishna Bhaktha, eminent scholar and Saint SRI NARAYANA THEERTHA.

We place our reverential pranams at the feet of the Acharyals of Sri Kamakoti Peetam who have blessed our endeavour with a SRIMUKAM for successful completion of the publication.

Sri Krishna Leela Thrangini was composed and sung by the great Saint in the temple of LORD VENKATESA PERUMAL of Varagur village, Thanjavur district. It is set to music and dance. The songs are well known for their devotional content and spiritual ecstacy to the exponents and disciples of Bhagavatha Sampradaya. Earlier publications of this work were in Grantha, Devanagari or Telugu scripts and copies of these are also not available.

In the week-long celebrations of Sri Narayana Theertha Jayanthi held in Madras last year, we had the privilege of hearing and exhaustive and illuminating discourse on the philosophical contents of Sri Krishna Leela Tharangini, given by Varagur Brahmasri V.S.V. Guruswamy Sastrigal, which inspired and crystalised our long cherished desire to bring out an edition with commentary in Tamil. When we expressed our desire to publish this book, Brahmasri Sastrigal readily agreed to write the Tamil commentary. With his full cooperation and good wishes, we are now publishing Vol. I consisting of Tharangams 1 to 6, in Devanagari script with Tamil transliteration and commentary in Tamil.

Brahmasri V.S.V. Guruswamy Sastrigal is an illustrious son of Varagur village, an erudite scholar and unique exponent of Advaitha Philosophy. (For more details, see 'The Author'). This work of Sastrigal, Tamil commentary—'VENKATESA PRIYA'—on Sri Krishna Leela Tharangini is a monumental one.

He has given full meaning of the poems, prose-pieces and songs, delving deep into the full import of expressions employed by the author. He has done it not only with the treasure of his literary knowledge, but essentially with a devotional fervour. His explanatory foot-notes, are by themselves highly educative and instructive.

Mere words of thanks are too inadequate to express our deep sense of gratitude to him. We sincerely pray from the bottommost recesses of our hearts to Lord Venkatesa Perumal to bestow on him long life and robust health.

Another illustrious son of Varagur with equal scholarship in Sanskrit literature and philosophy and holder of identical Birudus, Brahmasri V.R. Kalyanasundara Sastrigal has made significant contribution by scrutinising the proof, correcting a word here or a phrase there, realigning a sentence or recasting a clause wherever necessary, thus giving delicate embellishment to the book in its entirity. While expressing our feelings of gratitude to him, we pray for his long life and good health.

Sri. K. Srikantan (Retd. Assembly Reporter) of Varagur, prepared the manuscript for the press, rendering the original Grantha script into Devanagari script and writing the transliteration in Tamil along with the commentary in Tamil made by Brahmasri Guruswamy Sastrical. He also prepared the Indexes, a new feature in this publication. He was in full charge of the task of getting the work done at the press. We fully appreciate his hard, dedicated and untiring work in bringing out this book.

We also record with pleasure the good service rendered by Varagur Sri. V.A. Balakrishnan (Ambuja) in proof correction and giving valuable suggestions.

We express our thanks to Sri V.T. Rajan of Ramani (Brothers) Printers, Abhiramapuram, Madras-18 for their interest in printing this book.

We are very grateful to all the donors who have made voluntary monetary contributions to defray printing expenses.

This is the first edition of Sri Krishna Leela Tharangini being published with Tamil transliteration and also Tamil

commentary Now the First Volume consisting of Tharangams 1 to 6 is released and the Second Volume consisting of 7 to 12 is also under print. We appeal to all devotees to help the Trust with donations to release the Second Volume also as early as possible. With the help of donors we also hope to publish some of the work of Sri Narayana Theertha which are still not printed.

The book can be had from the Trust.

**SRI NARAYANA THEERTHA**
**EDUCATIONAL & CHARITABLE**
**TRUST (Regd)**

**PUBLISHERS**

D-19, Ramakrishna Nagar,
R.A.Puram,
Madras-600 028/
*April 30, 1986.*

***Founder Trustees:***

1. SRI M.R. SEETHARAMAN
2. SRI V.V. MANI
3. SRI. V. KRISHNAMURTHY
4. SRI R. VENKATACHALAM
5. SRI M.S. GOPALAKRISHNAN

## THE AUTHOR OF TAMIL COMMENTARY

Brahmasri Varagur Sankarasiva Vaidyanatha Iyer Guruswamy Sastrical was born on 12th December 1911, at Varagur, a sacred place in Thanjavur District.

While very young he took to the study of Sanskrit. Soon after passing the Sahithya Siromani examination from Madras Sanskrit College, the College conferred on him the title of Sahithya Visarada in a Sastra Sadas. Later he studied Vedanta at Kanchi Kamakoti Sanskrit-Mutt and passed with distinction the Vedanta Siromani Examination in 1937. In 1938 he passed the Certificate of Proficiency Examination in Indo-European comparative Philology with special reference to Sanskrit. He was offered a research scholarship by the Government of Madras and his thesis, SARIRAKA VYAKYA PRASTHANAM a critical study of Sankara's Philosophy was highly commended.

He joined the Sanskrit College, Trivandrum, as Lecturer in Vedanta and retired in 1968 as Professor and Head of Department of Vedanta. He was working as a teacher in Veda Bhashya Vidyalaya of Kanchi Kamakoti Mutt at Trivandrum for some time. As an Awardee of UGC Scheme, he worked as a research scholar in the University of Kerala from 1975-1978. He had been the Chairman of the Board of Examinations for B.A., M.A., and O.T. Examinations and a Member of the Board of Studies in Kerala University. He has given discourses on Ramayana, Bhagavatha Puranam, Skanda Puranam, Devi Bhagavatham etc., at various places in India. He is the recipient of a number of gold medals at various Vidvat Sadas held under the presidentship of Maharajas of Travancore and Cochin and Heads of Mutts of Kanchi and Sringeri, for his profound knowledge of Advaitha Vedanta. In recognition of his profound scholarship in Upanishad Bhashya, Gita Bhashya and Brahma-Sutra Bhashya, the title of Prasthana Thraya Vidwan was conferred on him by the Advaitha Sabhas of Kumbakonam and Tiruchirapalli. 'Certificate of Honour' from the President of India was awarded to him in 1972 in recognition of his profound scholarship in Sanskrit. He was conferred the title of Atma Vidya Bhushanam by the Acharya of Kanchi Mutt.



ஸனாதன தர்மத்தின் உறைவிடமும், நிறைந்த பண்பாட்டின் உருவமுமாக விளங்கி அடக்கத்துடன் இறைவன் பணியே வாழ்வென்று தொண்டாற்றிவரும் உரையாசிரியர் ஸ்ரீ V. S. V. குருஸ்வாமி சாஸ்திரிகள்.

Presently, settled in Madras, is keeping himself engaged giving discourses on Vedantha and other Scriptures under the auspices of Sri Sringeri Jagadguru Educational and Charitable Trust, R.A.Puram, Madras.

He has been continuously writing books on varied subjects and there are many publications to his credit. All his works on different themes are the result of his untiring work, insatiable desire to bring out the teachings of the great Upanishads and Classics of India within the purview of the ordinary aspirants, After deep and comparative study and critical analysis, he arrives at his views and he is forthright in expounding them with boldness and courage of conviction, yet ever treading the path of tradition. He is a gifted orator both in Sanskrit and Tamil. His retentive momory and command of literary works are marvellous. He has an impartial and cosmopolitan approach to the various scriptures, classics and other ancient works in praise of the deities of the Hindu pantheon, but in his heart of hearts, his singleminded devotion is to his personal deity, Prasanna Venkatesa Perumal of Varagur.

**Publishers**

*April 30, 1986.*

# உரையாசிரியரின் முன்னுரை

ஸ்ரீநாராயணதீர்தத ஸ்வாமிகளையும், அவர் அருளிய ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியையும் குறித்து-

1. வரகூர் நாராயணகவி—சிக்கியோத்ஸவ பிரபந்தத்திலும், 2. ஸ்ரீ N. கிருஷ்ணமாசாரியார்—வடமொழி இலக்கியங்களின் சரித்திரத்திலும், 3. காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்—தெலுங்கு லிபியில் உள்ள கிருஷ்ணலீலா தரங்கிணீ முன்னுரையிலும், 4. Prof. P. சாம்பமூர்த்தி-சங்கீத அகாடமி பத்திரிகையிலும், 5. Dr. V. ராகவன்-சங்கீத அகாடமி பத்திரிகை யிலும், 6. திவான் பகதூர் K.S. ராமஸ்வாமி சாஸ்திரிகள்—வாவிள்ளா ராமஸ்வாமி சாஸ்திரிகள் வெளியிட்ட தரங்கிணீ பரிந்துரையிலும், 7. ஸ்ரீ N.C. நரஸிம்மாச்சாரியார் (Advocate, Bombay) வாவிள்ளா ராமஸ்வாமி சாஸ்திரிகள் வெளியிட்ட தரங்கிணீ பரிந்துரையிலும், 8. ஸ்ரீ ராஜா வெங்கடாத்ரி அப்பாராவ்—தெலுங்கு தரங்கிணீ முன்னுரையிலும், 9. மகாகவி விஸ்வநாத சத்யநாராயணா, M.A. நாராயண தீர்த்தரைப்பற்றி கூறும் 51 தெலுங்கு பாடல்களிலும், பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளார்கள்.

அவைகளில் ஸ்ரீநாராயணதீர்த்தருக்கு பூர்வாச்ரமத்தில் பெயர் 'மாதவன்' என்றும், 'கோவிந்த சாஸ்திரி' என்றும், தந்தை 'கந்தர்வன்' என்றும், 'நீலகண்ட சாஸ்திரி' என்றும்; தீர்த்தருடைய சந்நியாசம் முறைப்படியானது என்றும், ஆபத் சந்நியாசம் என்றும், அச்சந்நியாசமும் ஆந்திரதேசத்தில் கிருஷ்ணா நதியில் என்றும், சோழ தேசத்தில் வெண்ணாற்றில் என்றும்; அவருடைய இறுதி நாட்கள் கழிக்கப்பட்டது வரகூரில் என்றும்; திருப்பூந்துருத்தியில் என்றும், காசியில் என்றும்; தியாகராஜ சுவாமிகளுடைய குருவின் தந்தையான சோந்தி வெங்கட சுப்பையா என்பவர் நாராயணதீர்த்தரின் சிஷ்யர் என்றும், புகழ்பெற்ற போதேந்த்ர சுவாமிகளும் அவருடைய சிஷ்யர் என்றும்; ஸ்ரீநாராயண தீர்த்தரை வரகாபுரிக்குப் போகும்படி கூறியவர் குணசேகரப் பெருமாள் என்றும், திருப்பதி வெங்கடேசப் பெருமாள் என்றும், மற்றும் பல முரண்பட்ட அம்சங்கள் உள்ளன. எனினும் ஸ்ரீ நாராயணதீர்த்தர் ஆந்திர தேசத்தைச் சார்ந்தவர், துறவறம் பூண்டவர், சோழ தேசத்தில்

வரகூர் எனப்படும் புண்ணிய க்ஷேத்திரத்தில் வெங்கடேசப் பெருமாளை வழிபட்டு அவருடைய முன்நிலையில் ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணீ எனப்படும் நிகரற்ற நூலை இயற்றியவர் ஆகிய விஷயங்களில் முற்கூறிய அனைவருக்கும் ஒன்றுபட்ட கருத்து காணப்படுகின்றது. எனவே இங்கு நூலாசிரியரையும், நூலையும் குறித்து பிராமணங்கள் மூலம் ஐயமறத் தெளிந்து காணப்படும் விஷயங்களை மட்டுமே விளக்க விரும்புகிறேன்.

## நூலாசிரியர் வாழ்ந்த காலம்

கி.பி.17-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்து வந்த ஸ்ரீராமானந்த சுவாமிகளின் 'ரத்னப்ரபை' என்னும் நூலில் கூறப்பட்ட அத்யாஸ லக்ஷணத்தை ஸ்ரீ நாராயண தீர்த்தர் 'ஸுபோதினி' என்ற தன் நூலில் குறிப்பிட்டு இருக்கிறார். கி.பி. 16-ம் நூற்றாண்டில் தஞ்சையில் அரசாட்சி புரிந்த அச்யுதப்ப நாயக்கனால் தானமாகக் கொடுக்கப்பட்ட அச்சுதபுரம் எனப்படும் 'மெரட்டூரில்' கோயில் கொண்டிருக்கும் வரதராஜப் பெருமானை அங்கு சில ஆண்டுகள் வாழ்ந்து பாரிஜாதாப ஹரணம் என்ற தான் இயற்றிய சங்கீத நாடகத்தில் 'அச்யுதபுரநிவாஸா' 'வரதராஜபிரபோ' என்று குறிப்பிட்டு உள்ளார். கி.பி.18-ம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்டு வந்த துலஜா என்ற வேந்தனுடைய காலத்தில் சரஸ்வதி மஹாலில் சேகரித்து வைக்கப்பட்ட பஞ்சகோசமஞ்ஜரீ என்னும் ஓலைச்சுவடியில் அதன் நூலாசிரியர் ஸ்ரீ நாராயணதீர்த்தரை தன்னுடைய குருவாகக் கூறியுள்ளார். ஆகையால் ஸ்ரீ நாராயணதீர்த்தர் கி.பி.17-ம் நூற்றாண்டின் நடுவிலும், கி.பி.18-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் (1650-1750 A.D.) வாழ்ந்து வந்தார் என்று தெரிகிறது.

## அச்சிட்டு வெளியிட்ட நூலின் காலம்

கி.பி.20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தில்லைஸ்தானம் நரஸிம்ம பாகவதராலும், நல்லூர் வெங்கடசுப்ப பாகவதராலும்,

கிரந்த லிபியிலும், தெலுங்கு லிபியிலும் தரங்கிணீ அச்சிட்டு வெளியிடப்பட்டதாக வரகூர் ஸ்ரீநாராயணகவியும், நல்லூர் பரத நாட்டியம் நாராயணஸ்வாமி அய்யரும் கூறியதை கேட்டு இருக்கிறேன். அத்தகைய புத்தகங்கள் மட்டமான காகிதத்தில் அச்சடித்து இருந்தமையாலும், பிழைகள் மிகுதியாய் இருந்த தாலும், கிடைப்பதற்கு அரிதானவைகளாக இருந்தமையாலும் 1920–ஆண்டில் ஸ்ரீ T.M. நாராயண சாஸ்திரிகளால் பரிசோதிக்கப் பட்ட இந்நூல் கிரந்த லிபியில் கும்பகோணம் சாரதா விலாஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு T. ஸுந்தரேச அய்யரால் வெளியிடப்பட்டது. 1948–ம் ஆண்டில் ராஜா வெங்கடாத்திரி அப்பாராவ் என்பவர் தெலுங்கு லிபியில் நூலை அச்சிட்டு வெளியிட்டார். 1953–வது ஆண்டில் இந்நூலை வாவிள்ளா ராமஸ்வாமி சாஸ்திரிகள் தேவநாகரி எழுத்திலும் அச்சிட்டு வெளியிட்டார். இவை மூலம் மட்டும் உள்ள வெளியிடுகள்.

## நூலின் உரை

இந்நூலுக்கு நாராயணஸ்வாமி என்பவர் வடமொழியில் ஒரு சிறிய உரையை எழுதியுள்ளார். அதுவும் முழுமையாக இல்லை என்று ஸ்ரீ T.M. நாராயண சாஸ்திரிகள் கூறுகிறார். ஸ்ரீ வெங்கடேசன் என்பவர் வடமொழியில் ஒரு உரை எழுதி உள்ளார். அது 5 முதல் 12 தரங்கங்களுக்கு மட்டுமே காணப்படுகிறது. இதுவும் அச்சாகவில்லை. இவ்வுரை சென்னை அரசாங்க ஓலைச்சுவடி லைப்ரரியில் காணப்படுகிறது.

## தன்னடக்கமும், தூயமையும் வாய்ந்த நூலாசிரியரின் திருநாமம்

நூலாசிரியரின் திருநாமம் ஸ்ரீ நாராயணதீர்த்தர் என்பதே ஆகும். 12 தரங்கங்கள் அடங்கிய ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணியில் சிறியதும் பெரியதுமான பாட்டுகள் 153 உள்ளன. அவைகளுள் 41 சிறிய பாடல்களில் நூலாசிரியரின் பெயர் (முத்ரை) சேர்க்கப் படவில்லை. மீதம் உள்ள 112 பாடல்களில், நாராயணதீர்த்த என்று 51 பாடல்களில் காணப்படுகிறது. சிவநாராயணதீர்த்த என்று 28

பாடல் களில் காணப்படுகிறது. வரநாராயண தீர்த்த என்று 11 பாடல்களிலும் நாராயணானந்த தீர்த்த என்று 5 பாடல் களிலும், தீரநாராயணதீர்த்த என்று 4 பாடல்களிலும், குருபக்த நாராயண தீர்த்த என்றும் 3 பாடல்களிலும் ஸரஸநாராயணதீர்த்த பவ்ய நாராயண தீர்த்த, யதி நாராயண தீர்த்த இவைகள் ஒவ்வொன்றும் 2 பாடல்களிலும், ஸாதுநாராயணதீர்த்த, விஷ்ணு பக்த சிவ நாராயணதீர்த்த ஸ்ரீஹரிபக்த சிவநாராயணதீர்த்த, முனி நாராயணதீர்த்த, பக்தநாராயணதீர்த்த, சித்த நாராயணதீர்த்த, நிஜநாராயணதீர்த்த, யோகிவரதீர்த்தயதி, சிவராமதீர்த்தபதாம் புஜப்ரமரேண என்ற இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாடலிலும் காணப்படுகின்றன.

இந்நூலின் முடிவில், நூலாசிரியர் இந்நூலின் தோற்றத்தை குறிப்பிடுமிடத்தில், கோபாலனெனப்படும் கார் மேகத்திலிருந்து, கருணை மழையானது நாராயண தீர்த்தர் என்ற மலையில் விழுந்தது, மலையில் விழுந்து கருணை மழை, அதனிலிருந்து கிருஷ்ண லீலைகள் ஆகிய அலைகளுடன் ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணி எனப்படும் ஆறானது தோன்றி, கிருஷ்ண பக்தர் களாகிற வயல்களில் பாய்ந்து உலகத்தை தூயமையாக்கட்டும். இன்பமுறச் செய்யட்டும் என்று கூறுகிறார். இங்ஙனமே ஸுபோதினீ என்ற நூலின் முடிவில் **परमार्थफलाथिनां कृते किल नारायणतीर्थसत्कृतिः** என்று கூறியிருக்கிறார். நூலாசிரியரின் நூலான பாரிஜாதா பஹரண நாடகத்தின் முடிவில் **नारायणतीर्थवरद** என்றும் கூறியியிருக்கிறார். எனவே நூலாசிரியர் 'நாராயணதீர்த்தர்' என திருநாமம் பூண்டவர் என்பதில் ஐயமில்லை. அதனாலேயே பாட்டுகளின் பெரும்பகுதியில் இந்த நாமமே காணப்படுகிறது.

பல பாட்டுகளில், தன் பெயருக்கு முன்பும், பின்பும் பல அடை மொழிகளைச் சேர்த்துக் கூறியிருக்கிறார். பாட்டுகள் பல மெட்டுகளில் அமைக்கப்படும் பொழுது மேட்டுக்கேற்ப சில இடங்களில் அதிகமான சொற்களைச் சேர்ப்பதற்கான நிர்ப்பந்தம் ஏற்படுவதே அடைமொழிகள் ஏற்படுவதற்கு காரணம் மெட்டுகளுக்கு ஏற்ப பாட்டுகளில் அடைமொழிகளை அமைப்பதிலும் தன்னடக்கத்தையும் தூய்மையையும் அறிவிக்கும் சொற்களையே அடைமொழி களாகச் சேர்த்துள்ளார்.

## அடைமொழியின் பொருள்

சிவநாராயணதீர்த்தர் என்ற சொல்லில் 'சிவ' என்ற அடை மொழியானது. சிவராம தீர்த்த சிஷ்யர் என்பதையே குறிப்பதாகும். இது சாகப்பிரியன், பார்த்திபன் என்பதை சாகபார்த்திபன் என்று கூறுவது போல் ஆகும். இங்ஙனமே 'வர'-துறவறத்தில் சிறந்தவர்; 'தீர' - உடலிலும் புலன்களிலும் 'நான்' 'எனது' என்று எண்ணத்தை விடுத்து ஆத்ம சொரூபத்தையே நான் என்று உணர்பவர்; 'குருபக்த' - மோக்ஷத்தை தரும் ஆத்ம ஞானத்தை உபதேசிக்கும் குருவை தெய்வத்தைப் போன்று வழிபடுகிறவர்; 'ஸரஸ' உள்ளத்தாலும், உடலாலும், வாக்காலும், நேர்மையாக நடப்பவர்; பவ்ய - நற்செயல் புரிகின்றவர்; 'யதி' - ஆதம ஞானத்தை அடைவதற்காக துறவறம் பூண்டவர். 'ஸாது' தனக்கு துன்பத்தை விளை விப்பவனுக்கும் நன்மையை செய்பவர். 'விஷ்ணு பக்த எங்கும் நிறைந்த ஈச்வரனை வழிபடுபவர். "ஸ்ரீ ஹரிபக்த" - அடியார்களின் பாபங்களையும், துன்பங்களையும் அழிக்கின்ற ஈசுவரனை வழிபடுவர்; "முனி" எப்பொழுதும் உள்ளத்தில் ஆத்ம சொரூபத்தை மட்டுமே எண்ணிக் கொண்டு இருப்பவர்; "பக்த"-குருவையும் தனது இஷ்ட தெய்வத்தையும் வழிபடுபவர்; 'ஸித்த' பக்குவமான ஞானத்தைப் பெற்றவர் 'நிஜ' - ஆத்ம சொரூபமாகவே இருக்கின்றவர், 'யோகி - அஷ்டாங்க யோகத் தால் சமாதி நிலையை அடைந்தவர்; 'சிவராம தீர்த்தபதாம்புஜ ப்ரமர' சிவராம தீர்த்தர் என்ற குருநாதருடைய திருவடித் தாமரை களில் வண்டாகவே இருப்பர், என்பவற்றைக் குறிப்பதாகும்.

இவ்விதம் நூலாசிரியர் அடைமொழிகளின் வாயிலாக தன்னடக்கத்தையும், தூய்மையையும் அறிவித்திருக்கிறார்.

## ஸங்கீதத்திலும நாட்டியத்திலும நூலாசிரியரின் நிகரற்ற புலமை

நூலாசிரியர் தனது இஷ்ட தேவதையான கிருஷ்ண பரமாத்மாவிடம் உள்ளத்தின் ஒருமைப் பாட்டிற்காகவே, ஸங்கீதத்தையும், நாட்டியத்தையும் இந்நூலில் சேர்த்துள்ளார்.

நீண்டகாலமாகவே நம் பாரத நாட்டினர் தெய்வங்களை வழிபடும் பொழுது கீதத்தையும், நடனத்தையும் ஓர் அங்கமாக சேர்த்து வந்துள்ளனர். கிருஷ்ணனை அழைத்துச் செல்வதற்காக அக்ரூரர் என்ற பக்தர் கோகுலத்திற்கு சென்றபொழுது, அங்கு விடியற் காலையில் கோபியர்கள் தயிர் கடையும் பொழுது அதிலிருந்து ஏற்படும் ஒலிகளுடனும் தங்கள் கைவளைகளின் ஓசைகளுடனும் 'கோவிந்தா,' தாமோதரா' என்று பாடிக் கொண்டு இருந்தார்கள். அப்பாட்டின் ஒலியானது வ்யாபித்த இடங்களில் உள்ள பாபங்கள் எல்லாம் அகன்று விட்டன' என்றும், 'கோபிகைகள் நன்கு கானம் செய்து வழிபட்டனர்' என்றும், அதுபோல ராஸலீலையின் போது கோபிகைகள், 'கை, கால்களின் அசைவுகள் புருவத்தின் அசைவுகள் ஆகிய நாட்டியத்திற்கு உரிய செயல்கள் புரிந்தனர். என்றும் ஸ்ரீமத் பாகவதம் 10-வது ஸ்கந்தம் கூறுகின்றது. இந்நூலாசிரியரும் 9-வது தரங்கத்தில் கோகுலத்தில் கோபிகைகள் பூபாளம், தேசாக்ஷி, தேவகாந்தாரி, மலஹிரி, வசந்தம் முதலிய ராகங்களோடு கோவிந்தனை கானம் செய்தனர் என்றும், 3-வது தரங்கத்தில் யக்ஞபத்தினிகளும் 7-வது தரங்கத்தில் கோபிகைகளும் த்ருவம், அடம் முதலிய தாளங்களுடனும் அலகு, லகு, த்ருதகதி, மத்யமகதி, மந்தரகதி, த்ருபதாகம், பதாகம், ஸுகரம், கடகா, சிலீமுகம், ஸுளா முதலிய முறைகளில் நாட்டியம் செய்து கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனை வந்தடைந்தனர் என்றும் கூறியுள்ளார். கதா ஸந்தர்பத்திற்கேற்ப கீதங்களுக்கு ராக தாளங்களை அமைத்துள்ளார்.

இந்நூலில் காணப்படும் கீதங்கள் அடியில் கூறப்படும் ராகங்களிலும் தாளங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன:

## ராகங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நாட்டை | 7. | பைரவி |
| 2. | மாளவி | 8. | சங்கராபரணம் |
| 3. | சௌராஷ்டிரம் | 9. | ஆனந்தபைரவி |
| 4. | நாதநாமக்ரியா | 10. | கேதாரகௌளம் |
| 5. | கல்யாணி | 11. | முகாரி |
| 6. | ஸ்ரீராகம் | 12. | சாவேரி |

13. ஆஹிரி
14. காமபோஜி
15. சுருட்டி
16. த்விஜாவந்தி
17. மோஹனம்
18. புந்நாகவராளி
19. ஹுசேனி
20. குறிஞ்ஜி
21. மத்யமாவதி
22. சாரங்கா
23. காபி
24. தன்யாசி
25. தோடி
26. நீலாம்பரி
27. வராளி
28. பிலஹரி
29. மலஹரி
30. பூபாளம்
31. கௌரி
32. யதுகுலகாம்போஜி
33. ஹிந்தோளம்
34. ஆரபி

## <u>தாளங்கள்</u>

1. அடதாளம்
2. ஜம்பை
3. த்ரிபுட
4. ஆதி
5. ரூபக
6. சாபு
7. த்ருவதாளம்
8. மட்டியதாளம்
9. விளம்பதாளம்
10. ஏகதாளம்

*அத்தகைய கீதங்களுள் உள்ளத்தைக் கவருகின்ற கீதங்கள்*

*1. 'ராமகிருஷ்ண கோவிந்தேதி நாம ஸம்ப்ரயோகே' – முதல் தரங்கம்*

*2. 'ஜய ஜய கோகுலபால' – 3வது தரங்கம்*

*3. 'பூரய மம காமம்' – 6வது தரங்கம்*

*4. 'க்ஷேமம் குரு கோபால' – 12–வது தரங்கம்*

*5. 'சரணம் பவ கருணாம் மயி குரு தீனதயாளோ' – முதல் தரங்கம்.*

*6. 'ஜயஜய ஸ்ரீநிவாஸ' – முதல் தரங்கம்*

*7. 'ஏஹி முதம் தேஹி ஸ்ரீகிருஷ்ணா' – 2வது தரங்கம்*

*8. 'ம்ருகயத ராதா மாதவம் ஸகி' – 8வது தரங்கம்*

*9. 'ஸ்ரீநிலயம் ஸகி ஸ்ரீநிலயம்' – 8வது தரங்கம்*

*10. 'ஆலோகயே ஸ்ரீபாலக்ருஷ்ணம்' – 3வது தரங்கம்*

## நூலின் பெயர் பொருத்தமும், பொருள் அடக்கமும்

வடமொழியில் தரங்கிணீ என்ற சொல் அலைகளுடன் ஓடிச் செல்லும் ஆற்றைக் குறிப்பதாகும். ஸ்ரீ கிருஷ்ணனுடைய லீலைகள் ஆகிய அலைகளை 12 பிரிவுகளுடன் இந்நூலானது அடைந்தமையால் கிருஷ்ண லீலா தரங்கிணீ என்று பெயர் ஏற்பட்டுள்ளது. இந்நூலில் 12 தரங்கங்களும், 302 சுலோகங்களும், 153 பாட்டுகளும், 31 சூர்ணிகைகளும் அடங்கியுள்ளன. இந்நூலில் ஸ்ரீமத் பாகவதம் 10-வது ஸ்கந்தம் 1-வது முதல் 58-வது வரை உள்ள அத்தியாயங்களில் கூற்பபட்டுள்ள ஸ்ரீகிருஷ்ணனுடைய அவதாரம், பாலலீலைகள், கன்றுகளை மேய்த்தல், பசுக்களை மேய்த்தல் கோபி வஸ்த்ராபஹரணம், கோவர்த்தனமலையைத் தூக்குதல்' ராஸக்ரீடை, கம்ஸன் முதலிய துஷ்டர்களை அழித்தல், கடலின் நடுவே துவாரகையை நிர்மாணித்து அதனுள் பிரவேசித்தல், ஸ்ரீபலராமர் விவாஹம் ஸ்ரீகிருஷ்ணனுடைய ருக்மணி விவாஹத்தை வர்ணிப்பதோடு ஜாம்பவதி, சத்யபாமா, ஸத்யா, பத்ரா, லக்ஷ்மணா, காளிந்தீ, மித்ரவிந்தா, ஆகிய எட்டு பட்ட மஹிஷிகளின் விவாஹமும் குறிப்பிடப்படுகின்றன. இந்நூலானது வடமொழியில் அலங்கார சாஸ்திரங்களில் கூறப்படும் நாடகம் முதலிய பிரிவை சேர்ந்ததில்லை. நூலாசிரியர் ஒவ்வொரு தரங்கத்திலும் இந்த லீலை அபிநயிக்கப்படுகிறது. இந்த இந்த பாத்திரங்கள் வருகின்றனர் என்று கூறி, செய்யுள் கீதம், சூர்ணிகை இவைகளால் அந்த அந்த லீலைகளை விளக்கியுள்ளார். பக்தர்களின் சமாஜத்தில் அலங்கரிக்கப்பட்ட மேடை மீது தேர்ச்சி பெற்ற பாத்திரங்களால் கிருஷ்ண லீலைகள் அபிநயம் செய்வது என்ற முறையைத் தழுவியே இந்நூலானது படைக்கப்பட்டுள்ளது. சங்கீதத்துடன், பக்கவாத்தியங்களுடன் ஹரிகதா, காலட்சேபம் செய்கின்ற பாகவதர்கள், நீண்ட காலமாகவே கதையின் ஆரம்பத்தில் கிருஷ்ண லீலா தரங்கிணியின் முதலில் உள்ள 'ஹிமகிரி தனயாபத்யம்' என்ற செய்யுளை பாடுகின்றனர்.

## நூலாசிரியரின் இஷ்டதேவதை, குரு, சிஷ்யர்

நூலாசிரியரான ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகள் ஜாதி குணம், க்ரியை இவைகள் அற்றதும், ஆனந்தம், பிரகாசம், சத்து (எப்பொழுதும், எங்கும் எல்லாமாக இருப்பது) ஆகிய வடிவம் கொண்ட, வேதாந்தங்களால் உபதேசிக்கப்படும், பரம்பொருளை எப்பொழுதும் உள்ளத்தில் தாங்கி இருபபவர். எனினும் அத்தகைய நிர்குணமான பரம் பொருளை அடைவதற்கு உபாயமான அப்பரம்பொருளின் சகுண வடிவங்களை வழிபட்டு வந்தார். இவ்வுலகில் அத்வைதமான (நிர்குணமான) பரம்பொருளை அடைவதற்கு விரும்புகின்றவர்கள் முதலில் சகுணமான ராம, கிருஷ்ணாதி சகுண வடிவங்களையே வழிபட வேண்டும். அவ்விதம் சகுணமான பரம்பொருளை வழிபட்டதன் மூலம் நிர்குணமான பரம்பொருளை அடைந்த பின்பும் வாழ்க்கையில் சகுணமான பரம்பொருளின் பெருமையைக் கூறும்பொழுது நிர்குணமான பரம்பொருளையும் நினைவு படுத்திக் கூறுவார்கள். முக்தரான ஸ்ரீசுக முனிவர் நிர்குணமான பரம்பொருளை உள்ளத்தில் திடமாக நிலைபெறச் செய்து கொண்டவராகவே, பரீக்ஷித் மன்னருக்கு கிருஷ்ண லீலைகளை உபதேசித்தார். லீலைகளை கூறும்பொழுது ஒவ்வொரு லீலை யிலும் தன் உள்ளத்தில் இருக்கும் பரம்பொருளை நினைவு படுத்துகிறார். நிர்குணமான பரம்பொருளிலேயே நிலைபெற்று இருக்கும் ஸ்ரீசங்கரபகவத்பாதர் எண்ணிறந்த கணபதி முதலான சகுணமான பரம்பொருளின் துதிகளைச் செய்யும் பொழுது ஒவ்வொரு துதியிலும் நிர்குணமான பரம்பொருளையும் நினைவுபடுத்திக் கூறியுள்ளார். அங்ஙனமே நூலாசிரியர் ஸ்ரீநாராயணதீர்த்த சுவாமிகளும் நிர்குணமான பரம்பொருளை நினைவுபடுத்திக் கொண்டே பரம்பொருளின் சகுண வடிவங் களை துதித்து வழிபட்டு உள்ளார். சகுணமான தெய்வத்தை உயர்ந்தது என்றும், வேறு தெய்வத்தை தாழ்ந்தது என்றும் குறிப்பிடுவது அங்ஙனம் கூறுபவருக்கு உண்மையான பரம் பொருளின் அறிவு இல்லை என்பது வெளிப்படை. எனவே அவ்வழி செல்லாமல் சங்கர பகவத்பாதரைப் பின்பற்றியவராய் குறிப்பாக ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் லீலைகளை வர்ணிக்கும் பொழுது மற்ற தேவதைகளையும் துதிக்கின்றார். உதாரணமாக,

முதலாவது தரங்கத்தில் दुर्गे-दुर्गति-हारिणि என்ற செய்யுளிலும், जयजय दुर्गे என்ற கீர்த்தனத்திலும் துர்க்கா தேவியைத் துதிக்கின்றார். இரண்டாவது தரங்கத்தில், मङ्गलानि तनोतू मधुसूदनस्सदा என்ற கீர்த்தனத்தில், கங்காதரன், தக்ஷிணாமூர்த்தி, துர்கா, சரஸ்வதி, கங்கா, சிவன், ஆகிய தேவதைகளையும் துதிக்கின்றார். அவ்விதமே ஆறாவது தரங்கத்தில் नृणां बन्थहति என்ற செய்யுளிலும் करुणयाऽवलोकय मां श्रीनरसिंह என்ற கீர்த்தனத்திலும 7-வது தரங்கத்தில் नित्यानन्दमिह पश्यत नरसिंहं என்ற கீர்த்தனத்திலும், 11-வது தரங்கத்தில் नृसिंह पदं என்ற செய்யுளிலும் वेदाद्रिसिंहं त्वा என்ற கீர்த்தனத்திலும வேதாத்திரி க்ஷேத்திரத்தில் குடிகொண்டிருக்கும் நரஸிம்மனை துதித்துள்ளார். தரங்கிணியில் ஆரம்பத்தில் जय जय वराहपुर श्रीवेङ्कटेश என்ற கீர்த்தனத்தில் வரகூர் வெங்கடாசலபதியை துதித்துள்ளார். பிரம்ம சூத்திர சங்கர பாஷியத்திற்கு இந் நூலாசிரியரால் இயற்றப்பெற்ற ஸுபோதினீ என்ற உரையிலும், கிருஷ்ணலீலா தரங்கிணீ என்ற நூலிலும்

**सर्वज्ञानक्रियाशलिं सर्वयोगेश्वरं प्रभुम् ।**
**सर्ववेद्यविदं विष्णुं प्रभविष्णुमुपास्महे ॥**

என்ற மங்களத்திற்கான இச்செய்யுளால் 'விஷ்ணுவை வழிபடு கின்றேன்' என்று கூறியுள்ளார். ஸ்ரீசங்கரபகவத்பாதரின் சிஷ்ய ரான சுரேச்வரரால் இயற்றப் பெற்ற பஞ்சீகரண வார்த்திகத்திற்கு இந்நூலாசிரியரால் இயற்றப்பெற்ற விவரணதீபிகா என்ற உரையில்

**रामस्सेव्यो भजे राममहं रामेण रक्षितः ।**
**रामायास्तु नमो रामाजातं जगदनेकधा ॥**
**रामस्य तु वशे सर्वं रामे सर्वं व्यवस्थितम् ।**
**हे राम रक्ष मां नित्यं त्वं तवास्मि जगत्पते ॥**

என்ற செய்யுட்களால் ஸ்ரீராமனையே வணங்கி வழிபட்டு அந்நூலுக்கு மங்களம் செய்துள்ளார். அச்யுதபுரமெனப்படும் மெரட்டூரில் கோயில் கொண்டிருககும் வரதராஜப் பெருமாளை பாரிஜாதாபஹரணத்தின் தொடக்கத்தில் अच्युतपुरनिवास स्वामिन् वरदराजप्रभो என்று குறிப்பிட்டுள்ளார். ஆதலால் ஸ்ரீதீர்த்தர் ஸச்சிதானந்த சொரூபமான பரபிரும்மத்தையே ஒரு

தெய்வத்தையும் வெறுக்காமல் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை இஷ்டதேவதையாக வழிப்பட்டார்.

ஸ்ரீநாராயணதீர்த்தர் சுவாமிகளின் குருவானவர் சிவராம தீர்த்தர் எனப்படுவர். 8-வது தரங்கத்தில் **वेदभागविचारजातमतिप्रियप्रणयेन वर्णितं शिवरामतीर्थपदाम्बुजभ्रमरेण** "வேதாந்தங்களை நன்கு ஆராய்ந்து கிடைக்கும் நானே பரம்பொருள் என்ற தூய்மையான உண்மையறிவை பெறுவதற்கு விருப்பமுள்ள முமுக்ஷுக்களுடன் அன்புடன் சிவராமதீர்த்தர் என்ற மகாத்மாவான குருநாத ருடைய திருவடித் தாமரைகளை வண்டுகளைப் போல் சேவிக்கின்றவன்" என்று கூறியுள்ளார்கள். நூலாசிரியர் இயற்றிய சங்கர பாஷ்யத்தின் உரையான ஸுபோதினியின் ஆரம்பத்தில், 'சிவ' என்ற சொல் பேதம் ஒழிந்த அத்வைதமான பரம்பொருளை குறிக்கின்றது. 'ராம' என்ற சொல் - முக்த புருஷர்களுக்கு நிலையான இன்பத்தை தருகின்ற சித்ரூபமான ஸுகத்தை குறிக்கிறது. அத்தகைய திருநாமம் பூண்டவரும், சிறந்த மஹான்களால் பூஜிக்கப்படுகின்றவரும், இணையற்றவரும், மோக்ஷ வடிவருமான - ஸ்ரீசிவராமதீர்த்தர் எனப்படும் என்னுடைய குருநாதனை வணங்கி வழிபடுகிறேன்" என்று கூறியிருக்கிறார்.

**अद्वैतं शिवमित्यतश्शिवपदं संशान्तभेदं तु यत्**
**यस्मिन्रामपदे चिदात्मनि सुखे सिद्धा रमन्तेऽनिशम् ।**
**तत्तीर्थं परमार्थतस्सुविदितं तीर्थाग्रणीसेवितं**
**तं सेवे शिवरामतीर्थमतुलं कैवल्यमस्मद्गुरुम् ॥**

இந்நூலாசிரியருடைய விவரணதீபிகை என்ற உரையின் முடிவில் **इति श्रीशिवरामानन्दतीर्थपूज्यपादशिष्य शिवनारायणतीर्थकृता पञ्चीकरणवार्तिक विवरणदीपिका समाप्ता।**

சிவராமதீர்த்தர் ஸ்ரீ நாராயணதீர்த்தரின் குரு என்று கூறப்பட்டு இருக்கிறது. "ஸ்ரீபிரும்மானந்த ஸரஸ்வதீ" என திருநாமம் கொண்டவர் தீர்த்தரின் சிஷ்யர்களுள் மிகவும் முக்கியமானவர். இந்தப் பெரியவர் நவீன நியாயத்தைத் தழுவி வேதாந்தத்தின் பொருளை விளக்குவதில் நிகரற்றவர். மிக்க புகழ் பெற்ற ஸ்ரீமதுஸூதன ஸரஸ்வதிகள் இயற்றிய அத்வைதஸித்தி

எனப்படும் நூலுக்கு - லகுசந்திரிகை. குருசந்திரிகை என்று இரண்டு ஒப்புயர்வற்ற உரைகளை எழுதியுள்ளார். ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதிகள் இயற்றிய ஸித்தாந்தபிந்து என்ற நூலுக்கு 'ரத்னாவளி என்ற உரை எழுதி உள்ளார். ஸ்ரீவியாஸாசார்யாள் இயற்றிய பிரும்மஸூத்ரங்களுக்கு 'ஸூத்ர முக்தாவளி' என்ற சிறிய உரையையும் செய்திருக்கிறார். அத்வைத ஸித்தாந்தத்தை விளக்குவதற்கு 'அத்வைத ஸித்தாந்த வித்யோதனம்' என்ற ஒரு ஸ்வதந்திர நூலையும் இயற்றியுள்ளார். இவர் தன் நூல்களில் - 'ப்ரும்மானந்த ஸரஸ்வதி' ஸ்ரீநாராயணதீர்த்தர், 'சிவராம வர்ணி' என்று மூன்று ஆசார்யர்களை கூறியிருக்கிறார். எனினும் ஸ்ரீநாராயண தீர்த்தரையே எல்லா நூல்களிலும் ஸ்மரணம் செய்து வணங்குகிறார். லகுசந்திரிகையின் தொடக்கத்தில் ஸ்ரீநாராயண தீர்த்தர் எனப்படும் குருவினுடைய நினைவானது. எனக்கு எல்லா நன்மைகளையும் கொடுக்கட்டும். தீமைகளை அகற்றட்டும் என்ற பொருள்படும் செய்யுளை கூறியுள்ளார். லகுசந்திரிகையின் 2-வது பரிச்சேதத்தில் ஸ்ரீ நாராயணதீர்த்த குருவினுடைய திருவடித் தாமரையின் நினைவானது எப்போதும், எல்லாவிதமான சொற்களுடையவும், அதன் பொருள்களுடையவும் நல்லறிவை தடையின்றி எனக்கு கொடுக்கட்டும் என்ற பொருள்படும் செய்யுளையும் கூறியுள்ளார். லகுசந்திரிகையின் முடிவில் ஆறு சாஸ்திரங்களின் கரைகளைக் கண்டவரான ஸ்ரீ நாராயணதீர்த்த குருவினுடைய திருவடிகளை புகலிடமாக அடைந்து, சாஸ்திரங்களாகிற கடலைக் கடந்து விட்டேன் என்றும் கூறியுள்ளார். ஸித்தாந்த பிந்துவின் உரையான, 'ரத்னாவளியில்' வேறு புகலிடமில்லாத நான் எப்போதும் உள்ளத்தாலும வாக்காலும், உடலாலும் குருவான ஸ்ரீநாராயண தீர்த்தருடைய திருவடித் தாமரையை வணங்குகிறேன் என்று கூறியுள்ளார். தன்னுடைய குருவைப் போலவே பிரும்மானந்தரும் சிறந்த கிருஷ்ணபக்தர் என்பதை அவருடைய நூலிலுள்ள மங்கள ஸ்லோகங்கள் கூறுகின்றன. தஞ்சை ஸரஸ்வதி மஹால் லைப்ரரியில் அச்சிடப்படாமல் இருக்கும் 'பஞ்சகோச மஞ்ஜரி' என்ற ஒரு நூலை இயற்றியவர், ஸ்ரீ நாராயணதீர்த்தரின் சிஷ்யர் என்று தன்னைக் குறிப்பிடுகிறார்.

## நூலில் அடங்கிய சுலோகங்களும் சூர்ணிகைகளும் நூலாசிரியருடைய மற்ற நூல்களும்

*நூலாசிரியர், கடினமாக சொற்களை சிறிதும் கலக்காமல் மிகவும் லலிதமான சொற்களாலேயே இடையராது கத்யங்களையும், பத்யங்களையும் கற்பித்துள்ளார். அவ்விதம் 303 அழகிய ஸ்லோகங்களும் 31 சூர்ணிகைகளும், நூலில் ஸந்தர்ப்பத்திற்கேற்ப ஆங்காங்கு பொருத்தப்பட்டுள்ளன.*

*சுலோகங்கள் அழகிய பல விருத்தங்களில் (மெட்டுகளில்) அமைக்கப்பட்டுள்ள. அவை.*

1. அனுஷ்டுப்
2. ஆர்யா
3. இந்திரவஜ்ரா
4. உபேந்திரவஜ்ரா
5. ரதோத்ததா
6. துருதவிளம்பிதம்
7. பஞ்சசாமரம்
8. புஜங்கப்ரயாதம்
9. ஸ்ரக்தரா
10. சார் தூலவிக்ரீடிதம்
11. சிகரிணீ
12. மாலினீ
13. வஸந்ததிலகா
14. சகிதஹரிணி
15. ப்ருத்வீ
16. மந்தாக்ராந்தா
17. வம்சஸ்தம்

*ஆகியவைகளாகும். மேலும் கத்யங்களிலும், பத்யங்களிலும் உள்ளத்தைக் கவருகின்ற அனுப்ராஸம் முதலிய சொல்லணிகளையும் உபமை, ரூபகம், உத்ப்ரேக்ஷை, ச்லேக்ஷை முதலிய பொருளணிகளையும் அமைத்துள்ளார். விரிவிற்கஞ்சி முன் கூறியவைகளுக்கு தக்க சான்றுகளை கூறாமல் விடுகிறேன்.*

### மற்ற நூல்கள்

**सुबोधिनी** — *ஸுபோதினீ - பிரும்ம ஸூத்திர சங்கர பாஷ்யத்திற்கு உரை (சதுஸ்ஸூத்ரீ) 1954-ம் வருஷம் கும்பகோணம் அத்வைத ஸபையால் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.*

**विवरणदीपिका** — *விவரணதீபிகா - ஸுரேச்வராசார்யர் இயற்றியுள்ள பஞ்சீகரண வார்த்திகத்தின் உரையாகும். இந்நூல் பூர்ணமாக உள்ளது. தஞ்சை ஸரஸ்வதி மஹால் லைப்ரரியில்*

தெலுங்கு லிபியில் manuscript ஆக இருப்பதாகும். (No.7306 புதிய கேட்லாக்)

பரிஜாதாபஹரண நாடகம் ஒரு யக்ஷகானம்- தெலுங்கு மொழியில் ஆனது, சிதிலமானதும், முழுதுமாக இல்லாததுமாகும் தஞ்சை ஸரஸ்வதி மஹால் லைப்ரரியில் உள்ளது.

பாரிஜாதபஹரண நாடகம் ஸம்ஸ்கிருதத்தில் உள்ளது. 27-ஓலைகளில் எழுதப்பட்டுள்ளது. அதில் 2,4,5,8,10 ஓலைகள் காண்பதற்கில்லை. மெரட்டூரில் நூலாசிரியர் வசிக்கும் போது எழுதியதாகும். மெரட்டூரிலிருந்து Dr. ராகவன் அவர்களால் சென்னைக்கு எடுத்து வரப்பட்டது.

ஹரிபக்தி ஸுதார்ணவம் - இது பாகவதம் 10-வது ஸ்கந்தத்திலடங்கிய பொருளை வர்ணித்து ஒரு காவ்யமாக எழுதப்பட்டதாகும். இதிலும் பல அத்யாயங்கள் காண்பதற்கு இல்லை. சென்னை அரசாங்க ஓரியண்டல் ஓலைச்சுவடி லைப்ரரியில் (D.No.15782) இருப்பதாகும்.

17-18 A.D. நூற்றாண்டுகளில் பல தீர்த்த நாராயணர்கள் வாழ்ந்திருப்பதாக அறியப்படுவதால் தெளிவான - பிரமாணத்தை அனுசரித்தே வேறு பல நூல்களையும் இவருடையதென்று தீர்மானிக்க வேண்டும்.

உபநிஷத்துக்களால் உபதேசிக்கப்படும் அத்வைதம் - ஸச்சிதானந்த ரூபமான பரம்பொருளை விட்டு அகலாத கிருஷ்ண பக்தி - ராஸ லீலையில் கிருஷ்ணனுடன் சேர்ந்து கோபிகள் அனுபவித்த ஆனந்தம், முக்தனுடன் சேர்ந்து முமுக்ஷுக்கள் அனுபவிக்கும் - பிரும்மானந்தமே.

ஸ்ரீமத் பாகவதத்தை தழுவி நாராயணீயம் என்ற நூலை இயற்றிய மேப்பத்தூர் நாராயண பட்டதிரி -தந்நூலில் பரமசிவனை விஷ்ணுவைக் காட்டிலும் மட்டமானவர் என்று கூறியுள்ளார். பாகவதம் 4-வது ஸ்கந்தத்தில் தக்ஷயக்ஞகதையில் 'சிவ' என்ற புண்ய நாம மஹிமை கூறப்பட்டிருந்தும் அக்கதையின் முடிவில் - நாராயணனே நேரில் வந்து 'எவ்விதம் ஒரு மனிதன் தன்னுடைய தலை, கை, முதலிய அங்கங்களை தன்னிலிருந்து வேரானதாக காண்பதில்லையோ அங்ஙனமே பிரும்ம - விஷ்ணு. சிவன் என்ற தெய்வங்களை வேறுபட்டதாக என்னுடைய பக்தன் காண்பதில்லை. அவனே - நிலையான மோக்ஷத்தை

அடைகிறான்' - என்று கூறினார் என்று கூறப்பட்டு இருக்கிறது. (பாக 4-7-53 & 54). பட்டதிரி இவ்விஷயத்தை நாராயணீயத்தில் கூறவில்லை, ஸ்ரீ நாராயணதீர்த்தர் பாகவதத்தின் பொருளைக் கூறுபவர் எனினும் தெய்வங்களுள் உயர்வு தாழ்வு பற்றி எண்ணமே அவருக்கு இருக்கவில்லை.

ஸ்ரீ ஜயதேவ கவி, பாகவதத்தில் கூறியதும், ராஸ லீலையில் அடங்கியதுமான ராதாகிருஷ்ண லீலையை கீதகோவிந்தமெனப் படும் நூலில் வர்ணித்துள்ளார். நூலின் தொடக்கத்தில் பத்து அவதாரங்கள் செய்தார் ஸ்ரீ கிருஷ்ணன்' என்று வருணிப்பதன் மூலம் ஸ்ரீ கிருஷ்ணனை, பூர்ணன், பரமாத்மா என்று அறிவிக் கின்றார். மேலும் 'என்னுடைய நூலில் கூறுப்பட்டவைகளான ராதாகிருஷ்ண லீலைகளை உள்ளத்தில் தியானம் செய்வதற்கு மட்டும விருப்பமுள்ளவர் படிக்க வேண்டும்' என்றும் எச்சரித்திருக்கிறார் என்றாலும லீலைகள் அனைத்தையும் உலக வழியிலேயே வர்ணித்துள்ளார்.

ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகள் கிருஷ்ண லீலைகளை வர்ணிக்கும் போது ஸ்ரீ ஜயதேவரை பின்பற்றாமல், வியாஸ முனிவர் ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ண லீலைகளை உபதேசித்த முறையையே பின்பற்றியிருக்கிறார். ஸ்ரீ வியாஸ முனிவர் கிருஷ்ண லீலைகளை வர்ணித்த முறையைச் சிறிது விளக்குகிறேன்.

'இவ்வுலகில் சாதாரணமாக பிறக்கும் குழந்தைகளிடம் காணமுடியாத அதிசயமான, நான்கு கைகள், அதில் ஆயுதங்கள், ஆடை ஆபரணங்களுடன் கூடிய குழந்தையை வஸுதேவர் பார்த்தார்' என்று ஸ்ரீமத் பாகவதம் கிருஷ்ணனுடைய பிறப்பைக் கூறுகிறது. ஸ்ரீகிருஷ்ணன் அத்வைத அனந்தவடிவன்; அனைவ ருடைய புத்திகளையும் நேரில் காண்பவர் என்று (அ 10-1-3, 13) வஸுதேவர் கூறுகிறார். ஸ்ரீ கிருஷ்ணனை 'பிரகாச வடிவமும், குணமற்றதும், மாறுபாடற்றதும் ஆசையற்றதும் எங்குமிருப்பது மான பரம்பொருளே நீ' என்று தேவகி கூறுகிறாள். (அ 10-1-3-24-) ஸ்ரீ சுக முனிவர் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாலலீலையை வர்ணிக்கும் போது, 'இவ்விதம் ஆத்ம ஞானிகளுக்கு பிரும்மானந்தமாக இருப்பவர். தன்னை வழிபடுகின்ற அக்ஞானிகளுக்கு சிறந்த தெய்வமாக இருந்து அருள் புரிகின்றவர். அத்தகைய

பரம்பொருள், மனித குழந்தை வடிவத்துடன், பல பிறவிகளில் புண்ணியக் குவியல்களை சேகரித்தவர்களுடன், (கோப குமாரர்களுடன்) விளையாடுகிறார்' என்று கூறுகின்றார். பிரும்மதேவன், கோகுலத்தில், சிறிய குழந்தை வடிவத்திலிருக்கும் கிருஷ்ணனிடம் பின்வருமாறு கூறினார். இவ்வுலகில் தளையிலிருந்து விடுபடுவதற்காக மோக்ஷ மார்க்கத்தில் செல்பவனுக்கு, உலக விஷயங்களில் விருப்பு வெறுப்பு முதலிய மனோவிகாரங்கள் திருடர்கள் ஆவார்கள். பலகாரணங்களால் வீட்டை விட்டு வெளியேற முடியாமலிருப்பதால், வீடு சிறை யாகும். மனைவி, கணவன், மகன் என்று பல உடல்களை நேசிப்பது சிறையின் கால்களில் போடப்படும் இரும்புச் சங்கிலியாகும்; ஆனால் ஹே கிருஷ்ணா! தங்களை எவர்கள் தங்களது வீட்டில் மகனாகவோ கணவனாகவோ, தந்தை யாகவோ நண்பனாகவோ அடைந்து நேசிக்கின்றனறோ. அவர்களுக்கு அவர்களது வீடு சிறையாகாது. மோக்ஷ வீடாகும் எவர்கள் தங்களிடத்தில் விருப்பத்தையோ, வெறுப்பையோ, அச்சத்தையோ, அடைகின்றனறோ, அவர்களுக்கு விருப்பம் முதலியவைகள் திருடர்கள் ஆவதில்லை. தங்களிடம் சேர்த்து வைக்கும் குமாரர்கள் ஆகின்றனர். ஹே கிருஷ்ணா தங்களிடம் எந்த வழியில் அன்பு வைத்தாலும் அவ்வன்பு சிறைச்சாலை இரும்புச் சங்கிலி அல்ல; அதை உடைத்தெறியும் கூர்மையான ஆயுதமாகும் கோகுலத்தில் வாழும் பசுக்கள், கோபர்கள் கோபிகைகள் அனைவருடைய பெருமையை நாவால் விவரித்துக் கூற முடியாது. எங்கும் நிறைந்து ஆனந்த வடிவமான பரம்பொருள் கோகுலவாசிகளுக்கு சிறந்த நண்பனாக அல்லவா இருக்கிறது. (10-14-32 & 36) என்று கூறியுள்ளார். இத்தகைய வியாஸ முனிவர் வழியையே பின்பற்றி ஸ்ரீ நாராயண தீர்த்தர் நூல் முழுவதிலும் செய்யுளிலும், வசனத்திலும், பாட்டிலுும கிருஷ்ணனை, பிறப்பு, இறப்பு அற்றவன், எங்கும் நிறைந் திருப்பவன். உலகங்களை அனைத்திற்கும் காரணமானவன். பிரும்மாண்டங்களை தாங்கி இருப்பவன். நிலையான ஆனந்த வடிவன், தூய்மையான மெய்யறிவு உடையவன். தன்னிஷ்டத் தால் அடியார்களை காப்பாற்றுவதற்காக மாயையால் உருவத்தை எடுத்துக் கொண்டவன் வேதங்களாலேயே அறியத் தகுந்தவன். வேதாந்த விசாரங்களின் முடிவில் ஏற்படும் 'நானே

பிரும்மமாக இருக்கிறேன்' 'நீயே பிரும்மமாய் இருக்கிறாய்' என்று கூறும் மஹாவாக்யங்களாலேற்படும் அறிவால் அறியப்பட்டவன். 'ஸகல நிகமாந்தஜனிதாந்தமதி விகிதம்' என்று கூறியுள்ளார். ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகள் ராஸலீலையை வியாஸ முனிவருடைய கருத்தை அனுசரித்தே வர்ணித்துள்ளார்.

இந்திரனுடைய கோபத்தால், பெரும் மழையால் அவதியுற்ற கோகுலத்தை, ஏழு வயதாக இருக்கும் ஸ்ரீகிருஷ்ணன் கோவர்த்தன மலையைத் தூக்கி அதனடியில் எல்லோரையும் இருக்கச் செய்து காப்பாற்றினார். அச்சமயத்தில் கோகுல வாசிகள் அனைவரும் நந்தகோபரிடம் வந்து இவ்வாறு கூறினர். 'ஹே! நந்தகோபரே, உம்முடைய கிருஷ்ணன் சாதாரண மனிதக் குழந்தையாக இல்லை; பிறந்த பத்து தினங்களிலேயே பூதனை என்ற அரக்கியை கொன்றான், ஒரு மாதத்தில் காலால் உதைத்து பெரிய வண்டியுடன் அஸுரனை கொன்றான். ஒரு ஆண்டிலேயே புயல் வடிவத்தில் வந்த அஸுரனை அழித்தான்; வெண்ணெய் திருடியதற்காக அன்னையால் உரலில் கட்டப் பட்டான். அந்த உரலால் இரண்டு பெரிய மருத மரங்களை முறித்து விட்டான். மேலும் கொக்கு, பசுவின் கன்று, கழுதை முதலிய வடிவங்களில் வந்த அஸுரர்களைக் கொன்றான். காட்டுத் தீயிலிருந்து பசுக்களையும் குழந்தைகளையும் காப்பாற்றினான். கொடிய விஷமுள்ள ஆயிரம் தலையுடைய காளியன் என்ற பாம்பின் மீது கூத்தாடி அதனை ஹிம்சித்து யமுனையிலிருந்து விரட்டி விட்டான். நிற்க கோகுலத்தில் வாழும் ஆண், பெண், பசுக்கள் அனைவருக்கும் காரணம் தெரியாமல் எல்லை மீறின அன்பு ஸ்ரீகிருஷ்ணனிடம் இருக்கிறது- எனவே தங்கள் மைந்தன் உண்மையில் யார்' என்று வினவினர். அதைக் கேட்டு நந்தகோபரும் நீங்கள் கூறுவது அனைத்தும உண்மையே. தங்களைப் போலவே நானும் கர்க்க முனிவரிடம் கேட்டேன். அவர் கூறியது, 'உம்முடைய குழந்தைக்கு எத்தனையோ பிறவிகள், உருவங்கள், பெயர்கள் இருக்கின்றன; இவன் ஸ்ரீநாராயணனுக்கு ஸமமானவன். இவன் இருக்கும் இடத்தில் ஒரு கஷ்டமும் ஏற்படாது. அவ்விதம் ஏற்பட்டாலும் அதை அவன் அழித்து விடுவான்' என்று கூறினார். இதைக் கேட்ட பின்னர் கோகுலவாசிகள் கண்ணனை நாராயணனாகவே எண்ணி னார்கள் என்று பாகவதம் 10-வது ஸ்கந்தம் 26-வது அத்யாயம்

கூறுகிறது. நந்தகோபர் அகாலத்தில் யமுனையில் நீராடினார். அப்போது வருண தூதர்கள் நந்தகோபரை வருணலோகத்திற்கு அழைத்துச் சென்றனர். நந்தகோபரை அழைத்து வருவதற்கு கிருஷ்ணன் வருணலோகம் சென்றார். அங்கு வருணன் கிருஷ்ணனை ஈசுவரனாக வழிபட்டதைக் கண்டார். அதனையும் கோகுலவாசிகளிடம் அறிவித்தார். எல்லோரும் தன்னுடைய ஸ்வரூப பிரும்மானந்தத்தை ஸ்ரீகிருஷ்ணன் நமக்கு அளிப்பாரோ என்று எண்ணினார்கள். ஸ்ரீகிருஷ்ணன் அதனை உணர்ந்து எல்லோரையும் யமுனையில் மூழ்கும்படி கூறி பிரும்மா னந்தத்தை நந்தகோபர் முதலான எல்லா கோபர்களுக்கும் அளித்தார் என்று பாகவதம் 10-வது ஸ்கந்தம் 28-வது அத்யாயம் கூறுகிறது. நிகரற்ற புண்ணியம் செய்த கோபாலர்களுக்கு பிரும்மானந்தத்தை அளித்தது போலவே, அத்தகைய புண்ணியம் செய்த கோபிகைகளுக்கும் அந்த பிரும்மானந்தத்தை அளிப்ப தற்காகவே, ராஸலீலையை கிருஷ்ணன் செய்ததாக பாகவதம் 10-வது ஸ்கந்தம் 29 முதல் 33 முடிய 5 அத்யாயங்கள் வர்ணிக் கின்றன. சுக முனிவர் இந்த லீலையை சொல்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும், உள்ளத்திலுள்ள ஆசைகள் அனைத்தும் அழிந்து கிருஷ்ணனிடத்தில் நிலையான பக்தி ஏற்படுவதாகக் கூறியுள்ளார். விவேகானந்தர் இந்த நிலையை சுக முனிவர் கூறியபடி அறிந்து கொள்ள முடியாதவர்கள் இதைப் படிக்காமலேயே இருப்பது அவர்களுக்கு நல்லது என்று எச்சரித்து இருக்கிறார்.

ராஸலீலை, ஆண், பெண் உறவுதான் என்று எண்ணும் தற்காலத்தியவர்கள் மேலே கூறப்பட்ட விஷயத்தைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ராஸலீலை நடந்த இடம் யமுனையாற்றில் உள்ள மணல்மேடு, அதன் அளவு அரை மைலுக்கு உட்பட்ட தாகும். லீலை நடந்த சமயத்தின் அளவு ஆயிரம் சதுர் யுகங்கள், கலி, துவாபம், த்ரேதா, கிருதம் என்ற யுகங்கள் 1000 தடவைகள் நடந்த காலம் என்று பாகவதம் கூறுகிறது. ஸ்ரீகிருஷ்ணனுக்கு வயது ஏழு. ராஸலீலையில் பங்கு கொண்ட கோபிகைகள் நூற்றுப் பதினோறு கோடிப்பேர்கள் ஆவர். திருமணமாகி, மக்கட்பேறு அடைந்தவர்கள் என்று பாகவதம் கூறுகிறது. கண்ணனை விட்டுப் பிரிந்த கோபியர்கள் ‘ஹே கிருஷ்ணா தாங்கள் யசோதையின் மகன் அல்ல. சகல ஜீவர்களுக்கும் உள்ளே இருந்து ஸாக்ஷியாக

பிரகாசிப்பவர். இவ்வுலகத்தைக் காப்பாற்றுவதற்காக பிரும்ம தேவனால் பிரார்த்திக்கப்பட்டவராய் யாதவர் குலத்தில் தோன்றியவர். இவ்வுலகில், கணவன், மகன், உறவினர், உடன் பிறந்தோர் அனைவரும் அழிவுடையவர்கள்; ஆத்மாவை அழியாமல் காத்துக் கொள்ள அழியாத தாங்களே உற்ற துணை என்பதை உணர்ந்தவர்கள்'' என்று கோபிகா கீதத்தில் கூறி யுள்ளனர். பரிக்ஷித் மகாராஜனுக்கு ஸ்ரீசுகமனிவர், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா ராஸலீலை புரிந்த காரணத்தை விளக்கியுள்ளார். அதாவது இவ்வுலகில் மாந்தர்களுள் பெரும்பான்மையோர் பாட்டிலும் கூத்தாட்டத்திலுமே உள்ளத்தை பரிகொடுக் கின்றனர். எனவே கிருஷ்ணன் அவ்விரண்டையும் செய்து தன்னிடத்தில் உள்ளங்களை நிலைபெறச் செய்ய விரும்பினார். கோபிகைகள் அவர்களின் கணவர்கள், மற்றுமுள்ள உலகத்தினர் அனைவருக்கும் உள்ளே ஸாக்ஷியாக இருக்கும் பரமாத்மாவே, ஸ்ரீகிருஷ்ணன் என்று மாயையால் உடலை அடைந்தவர்போல் காணப்பட்டார், என்பதாகும். ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகள் பாகவத ஸாரத்தையும் ஸகல வேதாந்த ரஹஸ்யார்த்தத்தையும் சேர்த்து ராஸலீலையை 6, 7, 8 மூன்று தரங்கங்களில் கூறியிருக்கிறார்.

ஸ்ரீ நாராயணதீர்த்தர், 'பல்லாயிரம் பிறவிகளில் செய்துள்ள தவத்தின் பயனால் "கோபீ" என்ற புனிதப் பிறவியில் பரமாத்மா திவ்ய தரிசனம் தருகின்றார்.

**अनेकजन्मसाहस्रतपसा परितोषितः ।**
**आविर्भूतः स भगवान् तासां गोप्यां सुजन्मनि ॥**

என்று கோபிகைகளைக் குறித்து கூறுகிறார். பகவான் வாஸுதேவன் அடியார்களுடைய இஷ்டத்தை நிறைவேற்றி வைப்பவராக ராஸலீலையின் ஆரம்பத்தில் ஆத்மதத்துவத்தை உபதேசித்துக் கொண்டு கூறுகிறார்.

**भक्तसङ्कल्पसिद्धिमातन्वानो वासुदेवो**

**रासक्रीडामहोत्सवारम्भसंभ्रमचेताः आत्मतत्वमुपदिशन्निदमाह**

என்று ராஸலீலையில் ஆத்மத்துவம் உபதேசிக்கப்பட்டதாகக் கூறுகிறார். ராஸலீலையில் கோபிகைகள், கிருஷ்ணன் திருவாய் மலர்ந்தருளியதும் பிரும்மானுபவரஸத்தை அளிப்பதுமான

உபதேசாமுதத்தை மீண்டும் மீண்டும் பருகுகின்றவர்களாய், கிருஷ்ணன் எனப்படும் பரம்பொருளில் ஒன்றுபட்டு சந்தோஷிக்கின்றனர். கண்ணனின் கானத்தை அனுசரித்து பாடிக் கொண்டும் , அவரால் உபதேசிக்கப்படும் அத்வைத தத்துவத்தை "ஜீவனும் பரமாத்மாவும் ஒன்றே" என்ற எண்ணத்துடன் கூத்தாடுகிறார்கள்'' என்று கூறியுள்ளார். சாமவேத உபநிஷத், சாந்தோக்யத்தில் 6-வது அத்யாயம், பிருஹதாரண்யக உபநிஷத். தத்திரியோபநிஷத், ஈசாவாஸ்யோபநிஷத், முண்டகோபநிஷத் ஆகியவைகளில் கூறியவற்றை கோபிகைகள் பாடினர் என்று கூறியுள்ளார். விரிவுக் கஞ்சி அனைத்தையும் இங்கு விளக்க வில்லை.

## வாசகர்களுக்கு

ஸ்ரீகிருஷ்ணலீலாதரங்கிணீ, என்ற இந்த நூலை தில்லை ஸ்தானம், கும்பகோணம், சென்னை, ஆந்திராப் பிரதேசம் ஆகிய இடங்களிலிருந்து வெளியிட்டவர்கள் வரகூரைச் சேர்ந்தவர்கள் அல்ல. நூலில் 'வராஹபுர ஸ்ரீவேங்கடேச" என்று கூறியிருப்பதி லிருந்து தீர்த்தர் வரகூரில் வேங்கடேசப் பெருமாளை வழிபட்டு இந்நூலை இயற்றினார் என்பதில் ஐயமில்லை. மணமகன், மணமகளுக்கு நல்ல முத்துக்களால் அபிஷேகம் செய்வது விவாகத்தில் நாகபலி அனுஷ்டிப்பது இவை ருக்மிணி கல்யாணத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து தீர்த்தர் ஆந்திர தேசத்தவர் என்பது தெளிவு. நூலில் தன்னை ஸந்யாஸி என்று கூறியிருக்கிறார். ஸுபோதினீ, விவரணதீபிகை என்ற அத்வைத வேதாந்த நூல்களை எழுதியவர் என்பதனால் அத்வைத வேதாந்தாசார்யர் என்பது விளங்குகிறது. ஸ்ரீ தீர்த்தர் ஸமாதி அடைந்த தினத்தில் – ஸமாதி அடைந்த இடத்தைப் பற்றி சர்ச்சையில் ஈடுபடாமல், அவரவர் இருக்குமிடத்தில் இயன்ற அளவு அன்னாரை வழிபட்டு எல்லா விதமான நன்மைகளையும் அடைவோமாக.

இத்தகைய பெருமை வாய்ந்த ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணீ எனப்படும் நூலானது 'வேங்கடேச ப்ரியை' என்ற தமிழ் உரையுடன் வெளியிடப்படுவது இதுவே முதல் முறையாகும். ஸ்ரீ நாராயண தீர்த்தர் அத்வைத வேதாந்த ஆசார்யர்.

பரமஹம்ஸசிரேஷ்டர், இணையற்ற கிருஷ்ண பக்தி பெற்றவர். ஆறு சாஸ்திரங்களிலும், சங்கீதம், நாட்டியம் முதலிய நுண்கலைகளிலும் நிகரற்ற அறிவுள்ளவர்; அத்தகைய மகானுடைய தரங்கிணீ என்ற நூலுக்கு உரை எழுதுவதற்கு தகுதியற்றவன் நான் எனினும், உரை எழுதுவதன் மூலமாக திடமான கிருஷ்ண பக்தி ஏற்பட வேண்டும என்ற நோக்கத்துடன் இவ்வுரையை எழுதும் செயலில் ஈடுபட்டேன். எனவே இவ்வுரையில் ஏதேனும் பிழைகள் காணப்படின் அவை என்னுடையதாகும். ஏதேனும் சிறப்பான அம்சங்கள் தென்படின் அவை என்னுடைய குருநாதரைச் சேர்ந்ததாகும்.

இப்பொழுது 12 தரங்கங்கள் கொண்ட இந்த நூலில் ஆறு தரங்கங்கள் தமிழுரையுடன் முதல்பாகமாக வெளியிடப் படுகிறது. இதேபோல் இரண்டாம் பாகம் அச்சில் உள்ளது.

பரமஹம்ஸ பரிவ்ராஜகராசார்யவர்ய ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசந்தரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் உத்தரவை அனுசரித்து ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்ரீசரணாள், வேங்கடேசப்ரியை என்னும் உரையுடன் கூடிய ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணீ என்ற நூலின் வெளியீட்டுக்கு கருணை கூர்ந்து, அனுக்கிரஹபூர்வம் ஸ்ரீமுகத்தை தந்தருளி யுள்ளார்கள். அத்தகைய அனுக்கிரகம் புரிந்துள்ள ஸ்ரீசரணாளின் திருவடித் தாமரைகளில் அனந்தகோடி வந்தனங்கள் ஸமர்ப்பித்து எனது க்ருதக்ஞதையை அறிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை அச்சிடும் பொழுது, சம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் ஏற்படும் பிழைகளை தக்கவாறு திருத்தம் செய்து நல்லதோர் நூலாக வெளிவருவதற்கு பரிசோதனையின் மூலம் பெரிய உபகாரம் புரிந்துள்ள, பாஷ்ய பாவக்ஞ வரகூர் பிரும்மஸ்ரீ R. கல்யாண சுந்தர சாஸ்த்ரிகளுக்கு நமஸ்காரபூர்வம் என் மனமார்ந்த நன்றியை அறிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலை அச்சகத்திற்குக் கொடுப்பதற்கு ஏற்ப, க்ரந்தா க்ஷரத்தில் உள்ள பத்யம், கத்யம், கீர்த்தனம் ஆகியவற்றை ஸம்ஸ்கிருத நாகர எழுத்திலும், அதே போல் அவற்றை தமிழ் எழுத்திலும் எழுதி, அத்துடன் தமிழ் உரையையும் தட்டெழுத்தில் வடித்து, அடிக்கடி அச்சகத்திற்குச் சென்று பிழைத் திருத்தங்கள் செய்து, அவ்வபொழுது ஏற்படும் ஐயங்களை தீர்த்துக் கொள்ள

என்னிடமும் ஸ்ரீகல்யாணசுந்தர சாஸ்திரிகளிடமும் திரும்பத் திரும்பச் சென்று வருவது இதற்குத் தேவையான கத்யபத்ய கீத அட்டவணைகளையும் தயாரித்து சேர்ப்பது. இது போன்ற முக்கியமான காரியங்களை அயராது முழுமுயற்சியுடன் செய்து, ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணீயில் நல்லதொரு வெளியிட்டுக்காக அதிகசிரத்தை எடுத்துக் கொண்ட வரகூர் ஸ்ரீமான் ஸ்ரீகண்டன் அவர்களுக்கு, ஸ்ரீவேங்கடேசப் பெருமானின் திருவருளால் நீண்ட ஆயுளும், ஆரோக்யமும், எல்லாவித செல்வச் சிறப்புக்களும் ஏற்பட வேண்டுமென்று நான் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளை வேண்டிக் கொள்ளுகிறேன்.

இந்த நூலை நல்ல முறையில் அச்சடித்துத் தந்து உதவிய Ramani Brothers அச்சகத்துத் தலைவர் ஸ்ரீமான் V.T. Rajan அவர்களுக்கும் என்னுடைய உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலை உலகத்தினர் அறியும்படி அச்சிட்டு வெளியிடு வதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொண்டும், பொருளுதவி புரிந்தும் பெரும் பணியாற்றியுள்ள ஸ்ரீ நாராயணதீர்த்த கல்வி மற்றும் அறக்கட்டளையினருக்கும் என்னுடைய இதயபூர்வமான க்ருதக்ஞதையைத் தெரிவித்துக கொள்ளுகிறேன்.

**வ.ச.வை. குருஸ்வாமி சாஸ்திரிகள்.**

22-3-1986,
5. Tiluk Street,
T.Nagar, Madras - 17



श्रीनारायणतीर्थध्यानश्लोकाः ॥

यदङ्घ्रिपङ्केरुहरेणुलग्नम्
निपीय नीरं विमलान्तरङ्गः ।
जानामि तत्वं निजमात्मरूपम्
तं नौमि नारायणतीर्थमार्यम् ॥1॥

यन्नाम्नः पठनं मनागपि यतेरोङ्कारलक्षाधिकम्
यन्मूर्तेरपि पूजनं हरिहरब्रह्मादिपूजा स्मृतम् ।
यत्कार्यं त्रिविधं समस्तजगतां शास्त्रार्थनिर्णायकम्
श्रीनारायणतीर्थसद्गुरुवरं तं नौमि मुक्तिश्रियै ॥2॥

वेदान्तार्थविचारगम्यधिषणाविध्वस्तभेदाशयम्
नानातन्त्रपदार्थसंशयघनध्वान्तार्कतुल्यं गुणैः ।
नानादेशदिगन्तसन्ततयशः प्राप्तावकाशं गुरुम्
श्रीनारायणतीर्थसद्गुरुवरं तं नौमि मुक्तिश्रियै ॥3॥

बोधागाधसुनिर्मलातिमधुरे यन्मानसाब्धौ हरिः
क्रीडत्युज्झितदुग्धसिन्धुरनिशं शान्त्यादिदूतीजनैः ।
भक्तिज्ञप्तिविरक्तिसंज्ञमतुलं कन्यात्रयं प्राप यः
श्रीनारायणतीर्थसद्गुरुवरं तं नौमि मुक्तिश्रियै ॥4॥

# ஸ்ரீ நாராயண தீர்த்த த்யான ச்லோகா:

1. யதங்க்ரிபங்கேருஹரேணுலக்னம்
நிபீய நீரம் விமலாந்தரங்க: |
ஜானாமி தத்வம் நிஜமாத்மரூபம்
தம் நௌமி நாராயணதீர்த்தமார்யம் ||

2. யந்நாம்ன: படனம் மநாகபி யதே–
ரோங்காரலக்ஷாதிகம்
யந்மூர்த்தேரபி பூஜனம் ஹரிஹர–
ப்ரும்மாதிபூஜாஸ்ம்ருதம் |
யத்கார்யம் த்ரிவிதம் ஸமஸ்தஜகதாம்
சாஸ்த்ரார்த்தநிர்ணாயகம்
ஸ்ரீ நாராயணதீர்த்தஸத்குருவரம்
தம் நௌமி முக்திச்ரியை ||

3. வேதாந்தார்த்தவிசாரகம்யதிஷணா–
வித்வஸ்தபேதாசயம்
நாநாதந்த்ரபதார்த்தஸம்சயகன–
த்வாந்தார்கதுல்யம் குணை: |
நாநாதேசதிகந்தஸந்ததயச:–
ப்ராப்தாவகாசம் குரும்
ஸ்ரீ நாராயணதீர்த்தஸத்குருவரம்
தம் நௌமி முக்திச்ரியை ||

4. போதாகாதஸுநிர்மலாதிமதுரே
யன்மானஸாப்தௌ ஹரி:
கிரீடத்யுஜ்ஜிததுக்தஸிந்துரனிசம்
சாந்த்யாதிதூதீஜனை: |
பக்திக்ஞப்திவிரக்திஸம்க்ஞமதுலம்
கன்யாத்ரயம் ப்ராப ய:
ஸ்ரீ நாராயணதீர்த்தஸத்குருவரம்
தம் நௌமி முக்திச்ரியை ||

# ஸ்ரீ நாராயண தீர்த்தருக்கு வந்தனம்

1. எந்த மகானுடைய திருவடித் தாமரை மலரிலுள்ள பொடிகளுடன் கலந்த நீரைப் பருகி தூய்மை வாய்ந்த உள்ளத்தையடைந்தவனான (சிஷ்யனான) நான், என்னுடைய உண்மையான ஆத்ம ஸ்வரூபத்தை அறிகின் றேனோ, அத்தகைய பெருமை வாய்ந்த சிறந்த அறிவாளி யான ஸ்ரீ நாராயணதீர்த்தரை (எனது குருநாதனை) வணங்குகின்றேன்.

2. ஸ்ரீ நாராயணதீர்த்தரின் திருநாமத்தை ஒருமுறை கூறுவது, லக்ஷம் தடவைகள் ஓங்காரத்தைக் கூறுவதனால் ஏற்படும் புண்ணியத்தைக் காட்டிலும அதிகமான புண்ணியத்தை அளிப்பதாகும். ஸ்ரீ நாராயணதீர்த்தரின் உருவத்தை வழிபடுவது, பிரும்மதேவன், நாராயணன், ஸதாசிவன் ஆகியவர்களை வழிபடுவதால் ஏற்படும் பயனையொத்த பயனை அளிப்பதாகும். ஸ்ரீ நாராயண தீர்த்தரால் உடலாலோ, வாக்காலோ, உள்ளத்தாலோ அனுஷ்டிக்கப்பட்ட நற்செயல்களே, உலகத்திலிருக்கும் அனைவர்களுக்கும் மறைகள் கூறிய முறைப்படி செயல்பட வேண்டிய நற்செயல்கள் யாவை என்பதைத் தீர்மானித்துக் கொடுப்பவைகளாகும். அத்தகைய பெருமை வாய்ந்த, மிகச் சிறந்த ஆசான்களுள் சிறந்த ஸ்ரீநாராயணதீர்த்தரை, மோக்ஷ லக்ஷ்மியை அடைவதற்காக வணங்குகின்றேன்.

3. மறைகளின் முடிகளான உபநிஷத்துக்களை நன்கு ஆராய்ந்ததனால் கிடைத்ததும், இரண்டற்ற பரம் பொருளை பற்றியதும், உண்மையானதும், தூய்மையானது மான அறிவால், வேற்றுமையற்ற உள்ளம் படைத்தவரும், பூர்வமீமாம்ஸா, உத்தரமீமாம்ஸா, நியாயம், வைசேஷகம், ஸாங்க்யம், யோகம் முதலிய சாஸ்த்திரங்களில் கூறப்படும் பொருள்களை தெளிவாக அறிந்து கொள்வதற்கு முற்படும் போது ஏற்படும் ஐயப்பாடுகளாகிற கும்மிருட்டை அகற்றுவதில் கதிரவனாக இருப்பவரும், தன்னுடைய

நிகரற்ற நற்குணங்களால், பத்து திக்குகளிலும் உள்ள பல தேசங்களில், தன்னுடைய தூய்மையான புகழைப் பரவச் செய்தவரும், சிறந்த ஆசார்யர்களுக்குள் மிகச் சிறந்த ஆசார்யருமான ஸ்ரீ நாராயண தீர்த்தர் என்ற திருநாமம் பூண்ட குருநாதனை மோக்ஷ லக்ஷ்மியை அடைவதற்காக வணங்குகின்றேன்.

4. ஸ்ரீமந்நாராயணன், பாற்கடலில் படுத்திருப்பதை விட்டு விட்டு ஸத் (எங்கும் எப்பொழுதும் எல்லாமாக இருப்பது). சித் (வேறொன்றினுடையவும் உதவியின்றிதானே பிரகாசித்துக் கொண்டு, உலகமனைத்தையும் பிரகாசப் படுத்துவது), ஆனந்தம் (துன்பம் கலக்காததும், அழியாதது மான பேரின்பம்) என்ற வடிவம் தாங்கிய பரம்பொருளே நான் என்று எப்பொழுதும் தியானம் செய்து கொண்டிருக்கும் எந்த ஸ்ரீ நாராயணதீர்த்தர், ஆழமுள்ளதும், தூய்மை வாய்ந்ததும், இன்பமயமானதுமான தன் உள்ளமாகிய கடலில் எப்பொழுதும் பணிப்பெண்கள் போன்ற சாந்தி, தாந்தி, உபரதி, திதிக்ஷை, சிரத்தை, ஸமாதி ஆகிய குணங்களுடன் சந்தோஷமாக கேளிக்கைகள் புரிகின்றாரோ, எந்த ஸ்ரீ நாராயணதீர்த்தர், மூன்று பெண் குழந்தைகளைப் போன்று கிடைப்பதற்கரிதான, பக்தி, க்ஞப்தி, விரக்தி என்ற மூன்று நிலைகளை பெற்றிருக் கிறாரோ, அத்தகைய சிறந்த தேசிகராக விளங்கும் ஸ்ரீ நாராயண தீர்த்தர் என்ற திருநாமம் பூண்ட குருநாதனை வணங்குகின்றேன்.

## "வேங்கடேசப் பிரியா"

### உரையாசிரியரின் இறை வணக்கம்

वल्लभावल्लभं शिष्टसुलभं दुष्टदुर्लभम् ।
कलभाननमानन्दकन्दं बन्दामहे महः ॥

नमः श्रीवेङ्कटेशाय वराहपुरवासिने ।
श्रीनारायणतीर्थानामभीष्टफलदायिने ॥

नमः श्रीवेङ्कटेशाय वराहपुरवासिने ।
कृष्णलीलातरङ्गिण्या विश्वविख्यातकीर्तये ॥

नमः श्रीवेङ्कटेशाय वराहपुरवासिने ।
श्रीगोपालभागवत सर्वश्रेयोविधायिने ॥

नमः श्रीवेङ्कटेशाय वराहपुरवासिने ।
शिक्योत्सवप्रबन्धेन नारायणनुताय ते ॥

नमः श्रीवेङ्कटेशाय वराहपुरवासिने ।
श्रीरामनवमीकृष्णजयन्तीपूजिताय ते ॥

श्रीवैद्यनाथं पितरं ममेष्टं
धर्माम्बिकां मातरमत्यभीष्टाम् ।
श्रीवैद्यनाथाभिधसद्गुरुंश्च
स्मरन्निमान्नौमि यशश्शरीरान् ॥

कृष्णलीलातरङ्गिण्या मया द्राविडभाषया ।
वेङ्कटेशप्रियानाम्नी व्याख्येयं तन्यते शुभा ॥

औं

औं महागणपतये नमः ।

औं श्री वेङ्कटेशाय नमः । औं श्री कृष्णाय परब्रह्मणे नमः ।

# श्री कृष्ण लीला तरङ्गिणी ।

## प्रथमस्तरङ्गः ।

श्लोकः ॥ हिमगिरितनयापत्यं हेमाचलचापसमुदितं तेजः ।
किमपि महत्तममाद्यं स्मर्तव्यं विघ्नतिमिरहरणाय ॥1॥

श्लोकः ॥ गिरिराजसुतासूनुः करिराजवराननः ।
परिपन्थिगणध्वंसी सुरसेव्यो विराजते ॥2॥

# ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணி

## பிரதமஸ்தரங்க:

ச்லோக: |

ஹிமகிரிதனயாபத்யம்
ஹேமாசலசாபஸமுதிதம் தேஜ: |
கிமபி மஹத்தமமாத்யம்
ஸ்மர்த்தவ்யம் விக்னதிமிரஹரணாய || (1)

ச்லோக: |

கிரிராஜஸுதாஸூனு:
கரிராஜவரானன: |
பரிபந்திகணத்வம்ஸீ
ஸுரஸேவ்யோ விராஜதே || (2)

*(ஸ்ரீ நாராயணதீர்த்த ஸ்வாமிகள் ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணீ என்ற நூலை, இடையூறின்றி எழுதி முடிப்பதற்கு விரும்பியவராய், முதலில் விநாயகப் பெருமானை வணங்கி மங்களம் செய்துள்ளார்கள்).*

## முதல் தரங்கம்

### செய்யுள்–1

*[1]பனி மலையின் மகளான பார்வதியின் புதல்வரும், தங்க மலையான மேருவை வில்லாகக் கொண்ட பரமசிவனிடமிருநது தோன்றியவரும், இணையற்ற பெருமை வாய்ந்தவரும், முழுமுதற் கடவுளும், ஒளிவடி வானவரும் ஆன விக்னேச்வரரை, பலவிதமான இடையூறு களாகின்ற இருளையகற்றிக் கொள்வதற்கு, உள்ளத்தால் எப்பொழுதும் தியானம் செய்ய வேண்டும்.*

**(விளக்கம்–1)** *இங்கு 'பனிமலை' 'தங்கமலை' இரண்டின் சேர்க்கையைக் கூறியிருப்பது, விக்னேச்வரரிடம் குறைவில்லாத தயையும், நிறைவுள்ள செல்வமும் இருப்பதைக் குறிப்பதாகும்.*

### செய்யுள்–2

*மலைகளுக்கெல்லாம் அரசனான ஹிமவானின் மகளான பார்வதி தேவியின் மைந்தர், மிகச்சிறந்த யானையினது[2] அழகிய முகத்தினையுடையவர், அடியார் களுக்கு ஏற்படும் இடையூறுகளை வேறுடன் அகற்றுபவர், அத்தகைய கணேசப் பெருமான் ஸகல தெய்வங்களாலும், பூஜித்து வழிபடத் தகுந்தவராக வெற்றியுடன் விளங்குகிறார்.*

**(விளக்கம்–2)** *பார்வதி பரமேச்வரர்களுக்கு மஹா கணபதி குழந்தையாக அவதரித்த பொழுது ஸகல தேவதைகளும், குழந்தையைப் பார்த்துவிட்டு, பார்வதி பரமேச்வரர்களை வணங்கிச் சென்றனர்; சனைச்சரன் மட்டும் குழந்தையைக் காணச்செல்லவில்லை. அதனை யறிந்த பார்வதி, சனைச்சரனை, குழந்தையை வந்து பார்க்க வேண்டும் என்று உத்தரவிட்டாள். சனைச்சரன் தான் குழந்தையைக் காண்பதனால் குழந்தைக்குத்*

தீங்கு ஏற்படும் என்ற காரணத்தால்தான் குழந்தையைக் காண வரவில்லை என்று அறிவித்தான். பார்வதி தேவியின் கண்டிப்பான உத்தரவால் குழந்தையை சனைச்சரன் வந்து நோக்கினான். உடனேயே குழந்தையின் தலை காணாமல் போய் விட்டது. அதைக் கண்டு பார்வதி மிக்க வருத்தமடைந்தாள். உடனேயே பரமசிவன் தன் கணங்களை நோக்கி 'வடக்கு திசையில் தலைவைத்து உறங்குபவருடைய தலையை எடுத்துவா' என்று உத்தரவு போட்டார். ஒரு யானை வடக்கு திசையை நோக்கி தலையை வைத்திருந்தது. கணங்கள் அந்த யானைத் தலையை வெட்டிக் கொண்டு வந்தனர். சிவபிரான் அந்த யானைத் தலையை குழந்தையின் உடலில் பொருத்தினார். அன்று முதல், குழந்தை 'கஜானனன்' என்ற பெயருடன் வழங்கலானார். இவ்விதம் சிவபுராணம் கூறுகிறது.

ஆகவே, ஸ்ரீ நாராயணதீர்த்தர் பார்வதியின் புதல்வன். "யானை முகத்தவன்" என்று கூறியது இக்கதையைக் குறிக்கிறது.

## गीतं ॥1॥

**मोहनम् - अटताळशापु ॥**

प । जय जय स्वामिन् जय जय ।

अनु । जय जय जितवैरिवर्ग प्रचण्ट ।
जय जय गजमुख जय वक्रतुण्ड । - जयजय ।

मूषकवाहन मुनिगणवन्द्य
दोषरहित दूरितासुरबृन्द
शेषभूषण शिववारिधिचन्द्र
पोषितपरिजन पुण्यैककन्द । - जयजय । ॥1॥

अद्रिसुतासुत अनवद्यचरित
भद्र भक्तभव- भयहर मुदित

रुद्रोदित ऋजु-मस्तकसहित
सद्रूप सरसिज- समुदितविनुत । - जयजय । ॥2॥

लम्बोदर धीर लावण्यसार
कम्बुसुधानिधि- कर्पूरगौर
साम्बसदाशिव- सत्कृतिचतुर
सामवेदगीत सकलाधार - जयजय । ॥3॥

शक्रादिसुरगण- सन्नुतचरण
शातकुम्भमणि- दिव्याभरण
धिक्कृतघनविघ्न- तिमिरावरण
धीरनारायण- तीर्थसुकरुण । - जयजय । ॥4॥

**கீதம்–1**

**மோஹனம்—அடதாளசாபு**

ப. ஜயஜய ஸ்வாமின் ஜய ஜய |

அனு. ஜய ஜய ஜிதவைரிவர்க ப்ரசண்ட |
ஜய ஜய கஜமுக ஜய வக்ர துண்ட || (ஜயஜய)

1. மூஷகவாஹன முனிகணவந்த்ய
தோஷரஹித தூரிதாஸுரப்ருந்த
சேஷபூஷண சிவ– வாரிதிசந்த்ர
போஷிதபரிஜன புண்யைககந்த | (ஜயஜய)

2. அத்ரிஸுதாஸுத அநவத்யசரித
பத்ர பக்தபவ– பயஹர முதித
ருத்ரோதித ருஜு– மஸ்தகஸஹித
ஸத்ரூப ஸரஸிஜ– ஸமுதிதவிநுத | (ஜயஜய)

3. லம்போதர தீர லாவண்யஸார
கம்புஸுதாநிதி– கர்பூரகௌர
ஸாம்பஸதாசிவ– ஸத்க்ருதிசதுர
ஸாமவேதகீத ஸகலாதார | (ஜயஜய)

| | | | |
|---|---|---|---|
| 4. | சக்ராதிஸுரகண– | ஸந்நுதசரண | |
| | சாதகும்பமணி– | திவ்யாபரண | |
| | திக்ருதகனவிக்ன– | திமிராவரண | |
| | தீரநாராயண– | தீர்த்த ஸுகருண \| | (ஜயஜய) |

## கீர்த்தனம்–1

ப. ஹே கணேச்வரா, என் தலைவா, எங்கு

அனு. எப்பொழுதும் வெற்றியுடன் விளங்குவாயாக. வீரர்களான பகைவர்களையும் வெற்றி கொண்டவரே, யானை முகத்தவனே! வக்ரதுண்டன் என்ற பெயரால் புகழ் பெற்றவனே!

(வெற்றியுடன் வளங்குவாயாக!)

ச. 1. மூஞ்சூர் என்ற ஜந்துவை வாகனமாக அடைந்தவரே! முனிவர்கள் கூட்டத்தால் வணங்கத் தகுந்தவரே, குற்றமற்றவரே, அசுரர்களின் கூட்டத்தை அழித்தவரே, இவ்வுலகத்தைச் சுமக்கும் ஆதிசேஷன் என்னும் பாம்பை அணியாகப் பூண்டவரே, சிவனாகிற கடலுக்குச் சந்திரனாக இருப்பவரே, (சிவபெருமானுக்கு ஆனந்தத்தை அளிப்பவரே), தன்னை அண்டியவர்களைக் காப்பாற்றுகின்றவரே, தர்மங்களுக்கு எல்லாம் ஒரே இருபபிடமாக இருப்பவரே.

(வெற்றியுடன் விளங்குவாயாக!)

ச.2. மலைமகளின் மகனே! குற்றமற்ற மகிமை வாய்ந்தவனே, மங்கள வடிவனே, அடியார்களுக்கு பிறப்பு இறப்பு ஆகிய ஸம்ஸாரத்தால் தோன்றும் அச்சத்தை அகற்றுபவரே, எப்பொழுதும் சந்தோஷத்துடன் இருப்பவரே சிவபெருமானின் மகனே! நேர்மையான (கோணல் இல்லாத) தலையுடன் கூடியவரே, (நேர்மையான, கோணல் இல்லாத தலையையுடைய அடியார்களுடன் கூடியவரே), எப்பொழுதும் இருக்கும் பரம்பொருள்

வடிவனே! தாமரைப்பூவில் தோன்றிய பிரும்ம தேவனால் புகழப்பட்டவரே!

(வெற்றியுடன் விளங்குவாயாக!)

3. தொங்குகின்ற வயிற்றை உடையவரே, மிக்கத் தைரியம் உள்ளவரே, மிக்க அழகு வாய்ந்தவரே, சங்கு, பாற்கடல், கற்பூரம் ஆகிய பொருள்கள் போன்று வெண்மையான நிறத்தையுடையவரே, பார்வதி, பரமேச்வரர்களை உபசரிப்பதில் மிக்கத் தேர்ச்சி பெற்றவரே, ஸாம வேதத்தால் புகழப் பட்டவரே, உலகம் அனைத்தையும் தாங்கிநிற்பவரே.

(வெற்றியுடன் விளங்குவாயாக!)

4. இந்திரன் முதலிய தேவர்களின் கூட்டத்தால் போற்றிப் புகழப்பட்ட திருவடிகளையுடையவரே, தங்கமணிகளால் அழகு பொருந்திய அணிகளை அணிந்தவரே, [1]எங்கும் நிறைந்த இடையூறுகளாகிற இருளால் ஏற்பட்டுள்ள மறைவை அடியோடு அகற்றுபவரே, சிறந்த அறிவு படைத்த நாராயண தீர்த்தருக்கு இணையற்ற தயை புரிந்தவரே.

(வெற்றியுடன் விளங்குவாயாக!)

**(விளக்கம்–1)** இந்தப் பாட்டின் முடிவில் 'இடையூறுகளை அகற்றுபவர்', 'நாராயண தீர்த்தருக்கு தயை புரிந்தவர்' என்று கூறியிருப்பது, நடுக்காவேரியில் தனக்கு அருள்புரிந்த விநாயகப் பெருமானை எண்ணிக் கூறியதாகும்.

श्लो ॥

अमृतकलशहस्तं श्रीपतेर्यानकेतुम्
सुररिपुनिवहारिं सोमसूर्यादिगीतम् ।
अमितबलमशेषप्राणिनां प्राणभूतम्
निगममयशुभाङ्गं भावयाम्याप्तकामम् ॥3॥

वैनतेयं विराजन्तं विष्णुवाहनमुत्तमम् ।
वैकुण्ठाश्रयमाम्नायकायं गायामि कामदम् ॥4॥

**ச்லோ 3,4**

அம்ருதகலசஹஸ்தம் ஸ்ரீபதேர்யானகேதும்
ஸுராரிபுநிவஹாரிம் ஸோமஸூர்யாதிகீதம் |
அமிதபலமசேஷப்ராணினாம் ப்ராணபூதம்
நிகமமயசுபாங்கம் பாவயாம்யாப்தகாமம் ||

வைநதேயம் விராஜந்தம் விஷ்ணுவாஹனமுத்தமம்|
வைகுண்டாச்ரயமாம்னாயகாயம் காயாமி காமதம் ||

*(இடையூறின்றி தரங்கிணீ எனப்படும் இந்நூலை எழுதி முடிப்பதற்காக மகா கணபதியை வணங்கி, புகழ்ந்து பாடினார்; பின்னர் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளுடைய ஸந்நிதியில் கூப்பிய கரங்களுடன் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ கருடபகவானை வணங்கிப் போற்றிப் புகழ்ந்து பாடுகின்றார், நூலாசிரியர்)*

**செ–3**

*[1]அமுதம் நிறைந்த கலசத்தைக் கையில் தாங்கி நிற்பவர், லக்ஷ்மியின் மணாளனான நாராயணனுக்கு, ஏறிச் செல்வதற்கு வாஹனமாகவும், கொடிமரத்தில் அடையாளமாகவும் இருப்பவர், தேவர்களின் பகைவர்களான அசுரர்களை வெறுக்கின்றவர், சந்திரன், கதிரவன் முதலான தேவர்களால் புகழ்ந்து போற்றப்படுகின்றவர், அளவு கடந்ததும், நிகரற்றதுமான பராக்ரமம் படைத்தவர், அனைத்துயிர்களுக்கும் உயிராயிருப்பவர், (பரமனைத் தூக்கிச் செல்லும் பக்தனும், பரமனாக ஆகிறான் என்பது கருத்து). உயிர்களால் விரும்பி அடையப்படவேண்டிய பரம்பொருளை அடைந்தவர், எனவே மற்றொன்றையும் விரும்பாதவர், [2]மறைகளாகிற மங்களகரமான உடலுறுப்புக்*

களை அடைந்திருப்பவர் அத்தகைய ஸ்ரீ கருடபகவானை என் உள்ளத்தில் நன்கு தியானிக்கிறேன்.

**(விளக்கம்–1)** இங்கு கருடபகவான் அமுத கலசத்தைத் தாங்கி நிற்கிறார் என்று நூலாசிரியர் கூறியதற்கான மூலப் பிரமாணம் மகாபாரதம் ஆதிபர்வம் ஆஸ்திக பர்வத்திலும், வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில் 35-வது ஸர்க்கத்திலும் தென்படுகிறது. கச்யபருக்கு, கத்ரூ, வினதை என்று இரண்டு மனைவிகள். கத்ரூ பாம்புகளின் அன்னை; வினதை பறவைகளின் அன்னை, ஒரு சமயம் "உச்சைச்ரவஸ்" என்ற குதிரை எந்த நிறமுள்ளது என்று கூறவேண்டும், பின்னர் குதிரையைக் காணவேண்டும், யார் கூறியபடி குதிரை காணப்படுகின்றதோ, அவர் வெற்றியடைந்தவர், வேறுவிதம் கூறியவர் தோல்வியடைந்தவர். தோற்றவர் வெற்றி கொண்ட வருக்கு அடிமையாக வேண்டும்" என்று கத்ரூவும், வினதையும் பந்தயம் வைத்தனர். அப்பொழுது வினதை "உச்சைரவஸ்" வெண்மை நிறமுள்ளது என்று கூறினாள். அதை மறுத்து கத்ரூ அதன் வால் கருப்பு நிறமுடையது என்று கூறினாள். பிறகு கத்ரூ வினதையை அடிமை யாக்குவதற்காக தன் மக்களான கருத்த பாம்புகளை குதிரையின் வாலைச் சுற்றிக் கொண்டு அதனை மறைக்கும்படி ஏற்பாடு செய்தாள். இருவரும் கடற்கரையில் குதிரையை நோக்கினர். கருப்பு வாலுடன் வெண்மையான குதிரை காணப்பட்டது. வினதை கத்ரூவுக்கு அடிமையானாள். வினதைக்கு கருடன் புதல்வனாகத் தோன்றினார். தன் தாயை அடிமையிலிருந்து விடுவிக்க என்ன செய்ய வேண்டும் என்று கத்ரூவின் புதல்வர்களான பாம்புகளிடம் கேட்டார். பாம்புகள் அமிர்தம் வேண்டும் என்று கூறின. உடனேயே அன்னையின் ஆசியுடன் அமிர்தத்தை எடுத்து வரப் புறப்பட்டார். உணவுக்காக ஒரு யானையையும் ஒரு பெரிய ஆமையையும் எடுத்துச் சென்றார். உண்பதற்காக நூறு மைல் நீளமுள்ள கிளைகள் நிறைந்த 'ஸுபத்ரம்' எனப்படும் ஆலமரத்தின் ஒரு கிளையில் அமர்ந்தார். ஆயிரக்கணக்கான ரிஷிகளைத் தாங்கி நிற்கும் அந்தக் கிளையானது முறிந்தது. உடனேயே முனிவர்களைக் காப்பதற் காக அக்கிளையையும் கால்களால் தாங்கி கொண்டு, யானையையும் ஆமையையும் உண்டார். பின்னர், முனிவர் களைக் கீழே இறங்கச் செய்து, அந்த மரக்கிளையால் பறவைகளைக் கொடுமை படுத்தும் வேடர்களின் இருப்பிடத்தை

நாசம் செய்தார். பின்னர், தேவலோகம், சென்று இரும்புக் கூட்டை உடைத்து இரத்தின மயமான மணி மண்டபத் தினுள்ளிருக்கும் அமுதத்தை எடுத்து பாம்புகளுக்கு அளித்துத் தன் தாயை அடிமைத் தனத்திலிருந்து விடுவித்தார். எனவே ஸ்ரீ நாராயண தீர்த்தர், கருட பகவானை 'அம்ருத கலச ஹஸ்தம்' என்று கூறியிருக்கிறார்.

**(விளக்கம்-2)** இந்தச் செய்யுளில் நூலாசிரியர், 'நிகமமய சுபாங்கம்' (மறைகளால் அடைந்த மங்களகரமான உறுப்புகளை யுடையவர்) என்று கூறியிருக்கிறார். ஸ்ரீமத் பாகவதம், 3-வது ஸ்கந்தம், 21-வது அத்யாயத்திலும், 8-வது ஸ்கந்தம் 3-வது அத்யாயத்திலும் இதற்கான மூலம் காணப்படுகிறது. பகவான் பிந்துஸரஸில் தவம் புரிந்த கர்தம முனிவருக்கு அருள்புரிந்து விட்டு, முனிவர் கண்குளிரக் கண்டு கொண்டிருக்கும்போது, பறவை அரசனான கருட பகவானுடைய இறக்கைகளால் நன்கு கானம் செய்யப்படும் அழகிய ஸாமவேத மந்திரங்களை நன்கு கேட்டுக் கொண்டு அனைத்துச் சிறந்த யோகீச்வரர்களாலும் புகழ்ந்து போற்றப்பட்ட யோகிகளின் வழியே சென்றார்.

**निरीक्षतस्तस्य ययावशेषसिद्धेश्वराभिष्टुतसिद्धमार्गः ।**
**अकर्णयन् पत्त्ररथेन्द्रपक्षैरुच्चारितं स्तोममुदीर्णसाम ॥**
**(भा-3-21-34)**

என்று கூறப்பட்டுள்ளது.

திரிகூட மலையில், பெரிய நீர் தேக்கத்தில் முதலை வாயில் அகப்பட்ட யானையானது துன்பம் தாங்காமல் பகவானை தேவர்களுடன் துதித்தபோது அதைச் செவியுற்ற பகவான் கஜேந்திரனைக் காப்பாற்றுவதற்காக வேதவடிவனான கருடன் மீதேறி சக்ராயுதத்தைத் தாங்கியவராய் கஜேந்திரனுடைய அருகாமையில் வந்தார்.

**तं तद्वदार्त्तमुपलभ्य जगन्निवासः स्तोत्रं निशम्य दिविजैः सह संस्तुवद्भिः ।**
**छन्दोमयेन गरुडेन समुह्यमानश्चक्रायुधोऽभ्यगमदाशु यतो गजेन्द्रः ॥**

என்று பாகவதத்தில் கருடன் 'வேதவடிவனாக' கூறப்பட்டுள்ளது.

செ–4

*வினதையின் புதல்வன் எங்கும் நிறைந்த நாராயண னுக்கு ஒப்புயர்வற்ற வாஹனமான விளங்குபவர், நாராயணனைப் புகலிடமாகக் கொண்டவர், வேதங் களையே தனதுடலாக அடைந்திருப்பவர். அடியார்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து வைப்பவர், அத்தகைய கருட பகவானை துதித்துப் பாடுகிறேன்.*

## गीतं ॥2॥

**मुखारि - अटतालः ।**

| | | |
|---|---|---|
| प ॥ | श्रीनारायणवाहन | श्रितमुनिजनमण्डलपालन ॥ |
| अनु ॥ | विनतावरतनय | वेदाङ्गशुभकाय |
| | विविधविश्वालय | वीर मां पालय ॥श्री॥ |
| | सकलजगत्प्राणदायक | सुरसन्नुत सर्वविनायक |
| | विकट सुररिपुविदारक | विश्वविपुलकल्याणविधायक |
| | अकलङ्क शितिकण्ठ | आश्रितवैकुण्ठ |
| | विकचकमलतुण्ढ | विगतमोहकाण्ड |
| | शकलितपाषण्ढ | शत्रुहर प्रचण्ड |
| | अधिकबलोद्दण्ड- | अद्भुतदोर्दण्ड ॥श्री॥ ॥1॥ |
| | अशुभतिमिरचण्डभास्कर | सामविशदघोषपक्षभासुर |
| | मशकीकृतसकलासुर | म-ञ्जुमणिरशनाशेषशुभकर |
| | असुरभयङ्कर | अमृतकलशहर |
| | कुसुमनिचयभार | क्रूरभुजगहार |
| | असदृशाचलाकार | आश्रितशुभकर |
| | लसदरुणाधर | लीलामयशरीर ॥श्री॥ ॥2॥ |

निरवधिकामलपराक्रम नित्यनिर्मल खलदुरतिक्रम
मुररिपुचरणाब्जसंभ्रम मुनिनारायणतीर्थमतिरम
अरविन्दलोचन अघबन्धमोचन
सुररिपुशासन सोमरविनयन
परिजनपालन पामरविदळन
कृतगुरुसेवन गोकुलभवन ॥श्री॥ ॥3॥

## கீதம்–2

முகாரி—அடதாள:

ப. ஸ்ரீ நாராயணவாஹன ச்ரிதமுனிஜனமண்டலபாலன ||

அனு. வினதாவரதநய வேதாங்கசுபகாய
விவிதவிச்வாலய வீர மாம் பாலய || ||ஸ்ரீ||

1. ஸகலஜகத்ப்ராண தாயக ஸுரஸன்னுத ஸர்வவிநாயக
விகட ஸுரரிபுவிதாரக விச்வவிபுலகல்யாணவிதாயக
அகளங்க சிதிகண்ட ஆச்ரிதவைகுண்ட
விகசகமலதுண்ட விகதமோஹகாண்ட
சகலிதபாஷண்ட சத்ருஹர ப்ரசண்ட
அதிகபலோத்தண்ட அத்புததோர்தண்ட || ||ஸ்ரீ||

2. அசுபதிமிரசண்டபாஸ்கர ஸாமவிசத கோஷபக்ஷபாஸுர
மசகீக்ருதஸகலாஸுர மஞ்ஜுமணிரசனாசேஷ சுபகர
அஸுரபயங்கர அம்ருதகலசஹர
[1]குஸுமநிசயபார க்ரூரபுஜகஹார
அஸத்ருசாசலாகார ஆச்ரிதசுபகர
லஸதருணாதர லீலாமயசரீர || ||ஸ்ரீ||

3. நிரவதிகாமலபராக்ரம நித்ய நிர்மல கலதுரதிக்ரம
முராரிபுசரணாப்ஜஸம்ப்ரம முனிநாராயணதீர்த்தமதிரம
அரவிந்தலோசன அகபந்தமோசன
ஸுராரிபுசாஸன ஸோமரவிநயன
பரிஜனபாலன பாமரவிதளன
க்ருதகுருஸேவன [2]கோகுலபவன || ||ஸ்ரீ||

**கீர்த்தனம் - 2**

ப. *ஸ்ரீநாராயணனுக்கு (இவ்வுலகத்தின் காரண புருஷனுக்கு) வாஹனமாக இருப்பவரே! (ஸுபத்ர மெனப்படும் ஆலமரத்தின் நூறுபோஜனை நீளமுள்ள கிளையிலிருந்து கொண்டு தவம் புரியும்) ஆயிரக்கணக்கான முனிவர்களின் கூட்டத்தைக் காப்பாற்றியவரே!*

அனு. *வினதை எனப்படும் தக்ஷ பிரம்மாவின் புதல்வியிடம் சிறந்த மைந்தனாகத் தோன்றியவரே! நான்கு வேதங்கள், ஆறு அங்கங்களையே மங்களகரமான தன்னுடைய உடலாக அடைந்திருப்பவரே! பலவிதமாகக் காணப்படும் இவ்வுலகத்தையே தனதிருப்பிடமாகக் கொண்டவரே, நிகரற்ற பராக்ரமம் பொருந்திய ஏ, கருடதேவா*

*(என்னைக் காப்பாற்றுவீராக).*

1. *உலகமனைத்திற்கும் உயிரை அளிப்பவரே, வானவர்களால் துதிக்கப் பெற்றவரே, எல்லாவிதமான பறவைகளுக்கும் வேந்தரே எல்லாம் அறிந்தவரே, வானவர்களின் பகைவர்களை பிளந்தெறிகின்றவரே, பார் முழுவதிலும் எல்லாவிதமான நலங்களும் நிறைந்திருக்கும் படிச் செய்பவரே, குற்றமற்றவரே, வெண்மை நிறமுடைய கழுத்தையுடையவரே, ஸ்ரீமந்நாராயணனையே புகலிடமாக அடைந்தவரே, மலர்ந்த தாமரை மலரைப் போன்ற திருமுகத்தவரே, அறியாமை, மயக்கம் இவையற்றவரே, தர்ம மார்க்கத்தை மாசு படுத்தும் தீயவர்களை துண்டம் துண்டம் ஆக வெட்டியெறிபவரே, பகைவர்களை அழிப்பதில் திறமை வாய்ந்தவரே, இணையற்றதும், அளவிடமுடியாததுமான மிகுந்த வலிமையால் வியக்கத் தகுந்த புஜங்களையுடையவரே*

*(என்னைக் காப்பாற்றுவீராக)*

2. தீமைகளாகிற இருளை ஒளி மிகுந்த கதிரவனைப் போன்று மறையும் படிச் செய்பவரே, தன்னுடைய இறகுகளால் தெளிவாக ஸாம வேதத்தை முழங்கும் படிச் செய்து கொண்டு விளங்குபவரே, தானவர்களை கொசுவைப் போன்று ஆயாஸமின்றியே அழித்தவரே, இரத்தினங்களால் செய்யப்பட்டதும் மிக்க அழகியதுமான, இடுப்பில் அணியக்கூடிய கடிஸூத்திரத்தை அணிந்திருப்பவரே, அனைவருக்கும் நன்மையே செய்கின்றவரே, தானவர்களுக்கு அச்சத்தை அளிப்பவரே, தேவ லோகத்திலிருந்து அமுத கலசத்தை எடுத்து வந்தவரே, (அன்னையை அடிமையிலிருந்து விடுவித்தவரே), தேவலோகத்து பாரிஜாத மரத்தின் மலர் குவியல்களைச் சுமந்து நிற்பவரே, மிகக் கொடூரமான பாம்புகளை மாலையாக அணிந்திருப்பவரே, இணையற்றவரே, மலைபோன்ற திருமேனியரே, அண்டியவர்களுக்கு நன்மை புரிகின்றவரே, சிவந்த கீழுதடுடன் விளங்குகின்றவரே, உடலால் கணக்கற்ற கேளிக்கைகள் புரிகின்றவரே.

(என்னைக் காப்பாற்றுவீராக)

3. எல்லையில்லாததும், தூய்மை வாய்ந்ததுமான வலிமையை அடைந்திருப்பவரே, என்றென்றும் அழியாதிருப்பவரே, அஞ்ஞானம் என்னும் மாசு அற்றவரே, மிக்கக் கொடியவர்களான பலசாலிகளாலும் அணுகமுடியாத பராக்ரமும படைத்தவரே, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் திருவடித் தாமரையையே எப்பொழுதும் உள்ளத்தில் தியானிக்கின்றவரே நாராயணதீர்த்த முனிவருடைய உள்ளத்தை இன்புறச் செய்கின்றவரே, தாமரை இதழ் போன்ற விழிகளையுடையவரே, (அடியார்களை) பாவத் தளையிலிருந்து விடுவிப்பவரே, அஸுரர்

களை அடக்குபவரே, சந்திரனையும், ஸூரியனையும் கண்களாக அடைந்திருப்பவரே, பணியாட்களைக் காப்பாற்றுகின்றவரே, அறத்தை அழிப்பவனைத் துண்டு துண்டு ஆக்கி நாசம் செய்பவரே (சுப்ரதீகன், விச்வாவசு என்ற முனிவர்கள் ஒருவருக்கொருவர் சாபத்தால், யானையாகவும், ஆமையாகவும் இருப்பவர்களை, உணவாக எடுத்துக் கொள் என்று) தந்தை காச்யபர் கூறியதைச் செய்தவரே, (கடலினுள் இருககும் ஆயிரக்கணக்கான வேடர்களை அழிககும் படி) அன்னை வினதையிட்ட கட்டளையையும் அவ்விதமே செய்து முடித்தவரே, கோகுலத்தில் (யமுனையாற்றங்கரையில்) தங்குவதற்கான இடத்தை அடைந்திருப்பவரே.

(என்னைக் காப்பாற்றுவீராக)

**(விளக்கம்–1)** நூலாசிரியர், இங்கு, **कुसुमनिचयभार** 'மலர்க் குவியலைச் சுமப்பவர்', என்று கூறியிருக்கிறார். அதன் கருத்து. ஒரு சமயம் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, ஸத்யபாமாவின் விருப்பத்திற்கு இணங்கி தேவலோகத்திலிருக்கும், பாரிஜாத மரத்தை எடுத்து, கருடன் மீது வைத்து, துவாரகைக்குக் கொண்டு வந்தார். அச்சமயம், மலர்களின் குவியல் கருடன் மீது விழுந்திருப்பதை அனுஸரித்து நூலாசிரியர் இவ்விதம் வர்ணித்துள்ளார்.

**चोदितो भार्ययोत्पाट्य पारिजातं गरुत्मति ।**
**आरोप्य सेन्द्रान् विबुधान् निर्जित्योपानयत् पुरम् ॥**
**(भा-10-59-39)**

என்று பாகவதம் கூறுகிறது.

**(விளக்கம்–2)** நூலாசிரியர், **गोकुलभवन** 'கோகுலத்தில் தங்குவதற்கான இடத்தையடைந்திருப்பவரே' என்று கருட பகவானைக் குறித்து குறிப்பிட்டிருக்கிறார். அதன் காரணம் பின் வருமாறு: காளியன், யமுனையில் வாழ்ந்து வந்த இடத்தில், யமுனையின் இருகரையிலும், புல், பூண்டு, செடி, கொடி ஒன்றும் இல்லை. விஷக்காற்றினால் அவ்விதம் ஏற்பட்டது என்று

பாகவதம் கூறுகிறது. எனினும் காளியன் வசித்து வந்த மடுவின் அருகாமையில் மிக்க உயரமுள்ள ஒரு கதம்ப மரம் இருந்தது. அதன் மீது ஏறி, ஸ்ரீகிருஷ்ணபகவான் காளியன் மடுவில் குதித்தார் என்றும் பாகவதம் கூறுகிறது. வேறு புராணங்களில், அந்த மரத்தின் மீது கருடன் அமிருத கலசத்தை வைத்ததாலும், சிறிது அதில் தங்கி இளைப்பாறியதாலும், அப்பொழுது அமிருதத்தின் சிறு துளிபட்டதனால், கதம்ப மரம் மாத்திரம் ஒரு கேடும் இல்லாமல் வளர்ந்தது என்று கூறப்பட்டுள்ளது. யமுனையில் காளியன் வசிப்பதற்கு முன்னால் அந்த மடுவில் ஸௌபரி என்ற ஒரு முனிவர் மூழ்கி, உள்ளே இருந்து கொண்டு தவம் புரிந்தார். அம்மடுவில், ஏராளமான மீன்கள் வாழ்ந்து வந்தன. கருடபகவான் அடிக்கடி அந்த மடுவிலுள்ள மீன்களை எடுத்துச் சென்று கொண்டிருந்தார். ஒரு தடவை, முனிவர் கருடனை மீன்களைத் தொடக்கூடாதென்று தடைசெய்தார். கருடன் முனிவரை அனாதரவு செய்து மீன்களை எடுத்துச் சென்றார். உடனே சினங்கொண்ட முனிவர் இனிமேல் கருடன் இங்குள்ள மீன்களைப் பிடித்தால், அவன் உயிர் துறப்பது நிச்சயம் என்று சாபமிட்டார். அதன்பின் அங்கு கருடன் வருவதில்லை. கருடனிடம் அச்சமுற்றிருந்த காளியன் அன்று முதல் அந்த மடுவில் வாஸம் செய்ய ஆரம்பித்தான்.

**कृपया सौभरिः प्राह तत्रत्यक्षेममाचरन् ।**
**अत्र प्रविश्य गरुडो यदि मत्स्यान्स खादति ॥**

**सद्यः प्राणैवियुच्येत सत्यमेतद्ब्रवीम्यहम् ।**
**तं कालियः परं वेद नान्यः कश्चन लेलिहः ॥**

**(भा - 10-17-20/21)**

என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

**श्लो ॥**

सर्वज्ञानक्रियाशक्तिं सर्वयोगेश्वरं प्रभुम् ।
सर्ववेद्यविदं विष्णुम् प्रभविष्णुमुपास्महे ॥5॥

**ச்லோ–5**

ஸர்வக்ஞானக்ரியாசக்திம்
ஸர்வயோகேச்வரம் ப்ரபும் |
ஸர்வவேத்யவிதம் விஷ்ணும்
ப்ரபவிஷ்ணுமுபாஸ்மஹே ||

**செ–5**

*இவ்வுலகத்தினர் அனைவருக்கும் அறிவு செயல் இவைகளுக்கான திறமையை அளிப்பவர், இவ்வுலகிலுள்ள யோகிகள் (கடவுளிடம் மனத்தை ஒடுக்குபவர்) அனைவருக்கும் தலைவர். எல்லோராலும் அவசியம் அறியப்பட வேண்டிய உண்மைப் பொருளை அறிந்தவர். இவ்வுலக மனைத்தையும் ஆட்டி வைக்கும் சிறந்த நாயகனாக இருப்பவர். அத்தகைய எங்கும் நிறைந்த மஹாவிஷ்ணுவை உள்ளத்தால் தியானிக்கிறேன்.*

## गीतं ॥3॥

**नाटै - झंपे ॥**

प ॥ जय जय रमानाथ ।

अनु जय जय धरानाथ ।
जय जय वराहपुरश्रीवेङ्कटेश । - जयजय ।

निगमगोचर नित्य निर्मलानन्दघन
विगलितमहामोह विमलविज्ञान-हरे
खगयानसञ्चार खण्डितासुरनिकर
सकलगुणसम्पन्न सत्यपरिपूर्ण ॥
- जयजय । ॥1॥

मधुसूदनानन्त मायया कृतभुवन
विधुदिवाकरनयन वेदान्तभवन-हरे

विधिमुखसुरेन्द्रनुत विपुलकल्याणयुत
विमलयोगिध्येय विविधमुनिगेय ॥
- जयजय । ॥2॥

मुरनरकसंहार मूढमतिजनदूर
परिजनशिवङ्कर परावरशरीर-हरे
निरवधिककारुण्य निखिललोकशरण्य
सरसनारायणतीर्थ- सद्गुरुवरेण्य ॥
- जयजय । ॥3॥

## கீதம்–3

நாடை—ஜம்பே

ப. ஜய ஜய ரமாநாத |

அனு. ஜய ஜய தராநாத
ஜய ஜய வராஹபுரஸ்ரீவெங்கடேச | (ஜயஜய)

1. நிகமகோசரநித்ய நிர்மலாநந்தகன
விகளிதமஹாமோஹ விமலவிக்ஞான–ஹரே
ககயானஸஞ்சார கண்டிதாஸுரநிகர
ஸகலகுணஸம்பன்ன ஸத்யபரிபூர்ண | (ஜயஜய)

2. மதுஸூதனானந்த மாயயாக்ருதபுவன
விதுதிவாகரநயன வேதாந்தபவன–ஹரே
விதிமுகஸுரேந்த்ரநுத விபுலகல்யாணயுத
விமலயோகித்யேய விவிதமுனிகேய | (ஜயஜய)

3. முரநரகஸம்ஹார மூடமதிஜனதூர
பரிஜனசிவங்கர பராவரசரீர–ஹரே
நிரவதிககாருண்ய நிகிலலோகசரண்ய
ஸரஸநாராயணதீர்த்த ஸத்குருவரேண்ய | (ஜயஜய)

## கீர்த்தனம்-3

ப. *ஸ்ரீதேவியின் கணவரே!*
*வெற்றியுடன் விளங்குவாயாக!*

அனு. பூமிதேவியின் மணாளனே !
வெற்றியுடன் விளங்குவாயாக!

வராஹபுரத்தில் கோவில் கொண்டிருக்கும் வேங்க டேசப் பெருமானே வெற்றியுடன் விளங்குவாயாக

1. மறைகளால் அறியப்படுகின்றவரே! அழிவற்றவரே! மாசற்ற பேரானந்த வடிவனே! உண்மை விளங்காத படி மயக்கமுறச் செய்யும் மாயையற்றவரே! தூய்மையான உண்மையறிவு வடிவனே! துன்பத்தை அகற்றுபவரே! கருடன் மீது சஞ்சரிப்பவரே! அசுரக் கூட்டங்களை அழித்தவரே! எல்லாவிதமான நற்குணங்கள் நிறைந்தவரே! உண்மையான நிறைவு பெற்றவரே! (வெற்றியுடன் விளங்குவாயாக.)

2. மது என்னும் அசுரனைக் கொன்றவரே, முடி வற்றவரே, மாயையால் உலகைப் படைத்தவரே, சந்திரனையும் சூரியனையும் கண்களாகக் கொண்ட வரே, வேதாந்தமாகிற வீட்டில் வசிப்பவரே, தீமையை ஒழிப்பவரே, பிரம்ம தேவன் முதலான சிறந்த தேவர்களால் போற்றப்படுகின்றவரே, பலவிதமான முனிவர்களால் (மகரிஷிகளால்) புகழப்பட்டவரே (வெற்றியுடன் விளங்குவாயாக).

3. முரன், நரகன் என்ற அசுரர்களை அழித்தவரே, கெட்ட புத்தியுடையவர்களுக்கு எட்டியிருப்பவரே, தன்னை வழிபடும் அடியார்களுக்கு நலனை அளிப்பவரே, பிரும்மதேவன் முதலிய தேவர் களுடைய மிக உயர்ந்த சரீரங்களிலும் மிக மட்டமான மாடு முதலிய பிராணிகளுடைய சரீரங்களிலும் விளங்குபவரே, பாபத்தை வேறுடன் அகற்றுபவரே, எல்லையற்ற தயை நிறைந்தவரே, மாந்தர் அனைவராலும் அடைக்கலம் என்று அடையத்தகுந்தவரே, பக்தி நிறைந்த நாராயண தீர்த்தருக்குச் சிறந்த ஸத்குருவாக இருப்பவரே! (வெற்றியுடன் விளங்குவாயாக.)

श्लो ॥

कृष्ण कृष्ण कृपासिन्धो भक्तसिन्धुसुधाकर ।
मामुद्धर जगन्नाथ मायामोहमहार्णवात् ॥6॥

**ச்லோ—6**

க்ருஷ்ண க்ருஷ்ண க்ருபாஸிந்தோ
பக்தஸிந்துஸுதாகர |
மாமுத்தர ஜகந்நாத
மாயாமோஹ மஹார்ணவாத் ||

**செ—6**

*ஹே, கிருஷ்ணா! தயைக்கடலே! உன்னை வழிபடும் அடியார்களான கடலுக்குச் சந்த்ரனாக இருப்பவரே, உலகமனைத்திற்கும் ஒரே தலைவனே, உண்மை விளங்காத படி தத்துவத்தை மறைத்து மயக்கத்தை ஏற்படுத்தும் மாயையாகிற பெருங்கடலிலிருந்து என்னைக் கரையேற்றிக் காப்பாற்றுவாயாக!*

गीतं-4

**माळवि--त्रिपुट ॥**
**सौराष्ट्र - त्रिपुट ॥**

मत्स्य कूर्म वराह नरमृग वामनामरभार्गव
कुत्सितारिविराम दशरथराम बलरामाभव ।     कृष्णकृष्ण ।

कृष्णकृष्ण कृपाशमुद्र वितृष्ण बुद्ध गुणाकर
कृष्ण कल्किशरीर खलजनकृन्तनामरसुखकर ।     कृष्णकृष्ण ।

नित्यसिद्ध सुखानुभव निरञ्जनाखिलरञ्जन
प्रत्यगेकरसैकविग्रह परमपावनपावन ।     कृष्णाकृष्ण ।

गोपगोपीगोधनावन गूढ परतत्वाच्युत
तापहर नारायणतीर्थसन्तारक विजयगोपालक। कृष्णकृष्ण।

## கீதம்–4

மாளவி—த்ருபுட
ஸெளராஷ்ட்ர—த்ருபுட

மத்ஸ்யகூர்ம வராஹ நரம்ருக வாமனாமரபார்க்கவ
குத்ஸிதாரிவிராம தசரதராம பலராமாபவ[1] |
|| க்ருஷ்ண க்ருஷ்ண ||

க்ருஷ்ண க்ருஷ்ண க்ருபா ஸமுத்ர வித்ருஷ்ண புத்த குணாகர
க்ருஷ்ண கல்கிசரீர கலஜனக்ருந்தனாமரஸுககர |
|| க்ருஷ்ண க்ருஷ்ண ||

நித்யஸித்த ஸுகானுபவ நிரஞ்ஜனாகிலரஞ்ஜன
ப்ரத்யகேகரஸைகவிக்ரஹ பரமபாவனபாவன |
|| க்ருஷ்ண க்ருஷ்ண ||

கோப கோபீ கோதனாவன கூட பரதத்வாச்யுத
தாபஹர நாராயணதீர்த்தஸந்தாரக விஜயகோபாலக |
|| க்ருஷ்ண க்ருஷ்ண ||

## கீர்த்தனம்—4

ஹயக்ரீவன் என்னும் அசுரனைக் கொன்று வேதங்களை பிரமதேவனுக்கு அளிப்பதற்காக 'மத்ஸ்ய' (மீன்) அவதாரத்தையும், பாற்கடலில் மலையை மத்தாக வைத்து தேவர்களும் அசுரர்களும் கடையும் பொழுது கடலினுள் மூழ்கிப்போன அம்மலையை வெளியில் எடுத்து வந்து கடையும்வரை மலையைத் தாங்கிக் கொண்டு இருப்பதற்காக 'கூர்ம' (ஆமை) அவதாரத்தையும், பூமியைக் கடலினுள் எடுத்துச் சென்ற ஹிரண்யாக்ஷன் என்ற அசுரனைக் கொன்று கடலுக்கு வெளியே அப்பூமியைக் கொண்டு வருவதற்காக 'வராஹ' (வெண்பன்றி) அவதாரத்தையும், நல்லோர்களுக்கு பெருந்துன்பத்தை விளைவித்த ஹிரண்யகசிபு என்ற அசுரனைக் கொன்று உலகத்தைக்

காப்பாற்ற 'நரசிம்ம' (உடல் மனிதனாகவும் தலை சிம்மமாகவும்) அவதாரத்தையும், பலி என்ற அசுரனிடம், குட்டையான பிரம்மசாரி வேஷத்தில் அவனுடைய உலகங்களை யாசித்து வாங்கி உலகங்களை இந்திரனுக்கு அளிப்பதற்காக, அதிதி கச்யபர் இவர்களுக்கு மகனாகத் தோன்றி 'வாமன' அவதாரத்தையும், அசுரர்களுடைய கொழுப்பை அடக்குவதற்காக ஜமதக்னி முனிவருக்குப் புதல்வனாக கோடறியைத் தாங்கும் 'பரசுராம' அவதாரத்தையும், மிக்கதீய குணம் படைத்த பகைவனான இராவணன் என்னும் அரக்கனை வேருடன் அழிப்பதற்கு தசரதன் என்னும் மன்னனுக்கு மகனாகத் தோன்றி 'ராம' அவதாரத்தையும், ப்ரலம்பன், த்விவிதன் முதலிய துஷ்டர்களை அழிப்பதற்காக, வஸுதேவருக்கு புதல்வனாகத் தோன்றி 'பலராம' அவதாரத்தையும் செய்தவரே, பிறவி யற்றவரே, ஹே, கிருஷ்ணா, கிருஷ்ணா!

(என்னைக் காப்பாற்றுவாயாக.)

கருணைக்கடலே, ஆசையற்றவனே, இவ்வுலகில் ஒருவரையும் துன்புறுத்தாமல் எல்லோரிடமும் இரக்கத்துடன் இருக்கவேண்டும் என்று உபதேசித்த 'புத்த' தேவனாகவும் அவதரித்து இருப்பவரே!

நற்குணங்களுக்கு இருப்பிடமே, ஹே, கிருஷ்ணா, கலியுகத்தின் முடிவில் 'கல்கி' என்ற அவதாரம் செய்து தீயவர்களின் கூட்டங்களை அடியோடு அழிப்பவரே, வானவர்களுக்கு நன்மையைச் செய்பவரே, ஹே கிருஷ்ணா! கிருஷ்ணா! (என்னைக் காப்பாற்றுவாயாக.)

எப்பொழுதும் இருக்கும் ஆனந்தத்திலேயே தனித்து நின்று, ஒன்றுடனும் சேராது இருப்பவனே! உலகத்தினர் அனைவரையும் சந்தோஷப்படுத்துகின்றவரே, உலகம், உடல், உயிர், புலன், உள்ளம் அனைத்திற்கும் உள்ளே சைதன்ய வடிவமாகவும், சாக்ஷியாகவும் இருப்பவரே! இவ்வுலகில் மிக்கத் தூய்மை வாய்ந்த பொருட்களுக்கு

எல்லாம் மேலான ஒப்புயர்வற்ற தூய்மையான வஸ்துவாக இருப்பவரே, ஹே கிருஷ்ணா! கிருஷ்ணா!

(என்னைக் காப்பாற்றுவாயாக.)

கோபாலர்கள், கோபிகைகள், பசுக்கள் ஆகியவைகளை அன்புடன் காப்பாற்றியவரே, எல்லோராலும் எளிதில் அறிந்துகொள்ள முடியாத மிக்க ரகசியமான உண்மைப் பொருளே, அழியாதவரே, அடியார்களை அழியாமல் காப்பாற்றுகின்றவரே, மூன்று விதமான தாபங்களையும் போக்குகின்றவரே, தீர்த்த நாராயணரைக் காப்பாற்றியவரே! விஜயகோபாலனே! ஹே, கிருஷ்ணா! கிருஷ்ணா!

(என்னைக் காப்பாற்றுவாயாக.)

**(விளக்கம்–1)** ஸ்ரீ தீர்த்த நாராயண ஸ்வாமிகள், **अभव** 'பிறவியற்றவன்' என்று குறிப்பிடுகிறார்.

பாகவதம், முதல் ஸ்கந்தம், மூன்றாவது அத்தியாயத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**अवतारा ह्यसंख्येया हरेः सत्वनिधेर्द्विजाः ।**
**ययाऽविदासिनः कुल्याः सरसः स्युः सहस्रशः ॥**

**एते चांशकलाः पुंसः कृष्णस्तु भगवान् स्वयं ।**
**इन्द्रारिव्याकुलं लोकं मृडयन्ति युगे युगे ॥**

**(मा - 1-3-28)**

எவ்விதம், பெரிய நீர் தேக்கத்திலிருந்து சிறிய கால்வாய்கள் தோன்றுகின்றனவோ, அவ்விதமே, மத்ஸ்யம் முதல் கல்கி அவதாரங்கள் அனைத்தும் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவிடமிருந்து தோன்றியவைகள். ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா பரிபூரண தத்வம். மற்ற அவதாரங்கள் அவருடைய அம்சங்கள். இந்தக் கருத்து மேலே குறிப்பிட்ட செய்யுட்களில் கூறப்பட்டிருக்கிறது.

இதே போல் ஸ்ரீ ஜயதேவகவி, கீதகோவிந்தம் என்கிற காவியத்திலும், மத்ஸ்யம் முதல் கல்கி வரை உள்ள பத்து அவதாரங்களும் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவிடமிருந்து தோன்றியவைகள் என்கிறார். எனவே, கிருஷ்ண பரமாத்மாவை அவதார புருஷனாக அவரும் கருதவில்லை.

वेदानुद्धरते जगन्निवहते भूगोळमुद्बिभ्रते
दैत्यं दारयते बलिं छलयते क्षत्रक्षयं कुर्वते ।
पोलस्त्यं जयते हलं कलयते कारुण्यमातन्वते
म्लेच्छान्मूर्च्छयते दशाकृतिकृते कृष्णाय तुभ्यं नमः ॥

*இங்ஙனமே ஸ்ரீ தீர்த்த நாராயண ஸ்வாமிகளும் மத்ஸ்யம் முதல் கல்கி வரை பத்து அவதாரங்கள் தோன்றின என்றும், ஸ்ரீ கிருஷ்ணனை अभव (அபவ) பிறப்பு அற்றவர் என்ற பொருள் கொண்ட சொல்லால், ஸ்ரீ க்ருஷ்ணன் அவதாரம் ஆனவர் அல்ல, (பிறந்தவர் அல்ல), பரிபூரணனான அவரிடமிருந்து அவதாரங்கள் தோன்றியவை என்ற கருத்தை வெளியிட்டுள் ளார்கள்.*

श्लो ।

वासुदेवे भगवति भक्तिप्रवणया धिया ।
व्यज्यते भक्तिसाराढ्या कृष्णलीलातरङ्गिणी ॥7॥

**ச்லோ—7**

வாஸுதேவே பகவதி பக்திப்ரவணயா தியா |
வ்யஜ்யதே பக்திஸாராட்யா கிருஷ்ணலீலா தரங்கிணீ ||

**செ—7**

*ஞானம், ஐச்வர்யம், சக்தி, பலம், வீர்யம், தேஜஸ், ஆகிய ஆறுவிதமான கல்யாண குணங்கள் நிறைந்த வாஸுதேவன் எனப்படும் கிருஷ்ணபகவானிடம் வைத்துள்ள இணையற்ற பக்தியுடன் சேர்ந்த என்னுடைய புத்தியால், பக்திரஸம் நிறைந்த 'கிருஷ்ணலீலா தரங்கிணீ' என்ற இந்த நூலானது தோற்றுவிக்கப்படுகிறது.*

श्लो ।

आदौ कृष्णावतारस्तदनु नरहरेर्बाललीलाविशेषो
वत्सानां पालनं तच्चरितमथ गवां पालनम् प्रौढमावः ।

गोपीवस्त्रापहारस्तदनु गिरिवरोद्धारणम् रासलीला
कंसादीनां निरासस्तदनु जलनिधौ द्वारकायां प्रवेशः ॥8॥

रौहिणेयस्य कृष्णस्य विवाहस्तदनन्तरम् ।
रुक्मिण्याद्यष्टमहिषीसहितो गीयतेऽमरैः ॥9॥

इत्येवं सङ्ग्रहेणोक्ता कृष्णलीलातरङ्गिणी ।
आद्यः कृष्णावतारोऽयं सङ्ग्रहेणाभिनीयते ॥10॥

उग्रसेनस्ततः कंसो देवकीवसुदेवराट् ।
तयोः कारागृहे वासः कंसेन विहितः किल ॥11॥

ब्रह्मा सुरेन्द्रो धरणी सनकाद्यास्ततो हरः ।
भगवत्प्रार्थना तेषां तत्तत्स्थाननिवेशनम् ॥12॥

नारदस्योपदेशेन षट्सुतानां विनाशनम् ।
देवक्यास्सप्तमो गर्भस्सङ्कर्षण इतीरितः ॥13॥

गोकुले कृष्णगमनं दुर्गाया मधुरागमः ।
कथायास्सङ्ग्रहस्त्वेवं चरित्रेऽस्मिन्निगद्यते ॥14॥

**ச்லோகா— 8-14**

8. ஆதௌ கிருஷ்ணாவதார: ததநுநரஹரே: பாலலீலாவிசேஷோ
வத்ஸானாம் பாலனம் தச்சரிதமத கவாம் பாலனம்
ப்ரௌடபாவ: |
கோபீவஸ்த்ராபஹாரஸ்ததநு கிரிவரோத்தாரணம் ராஸலீலா
கம்ஸாதீநாம் நிராஸஸ்ததநு ஜலநிதௌ த்வாரகாயாம்
ப்ரவேச: ||

9. ரௌஹிணேயஸ்ய கிருஷ்ணஸ்ய
விவாஹஸ்ததநந்தரம் |
ருக்மிண்யாத்யஷ்ட மஹிஷீ-
ஸஹிதோ கீயதேSமரை: ||

10. இத்யேவம் ஸங்க்ரஹேணோக்தா
கிருஷ்ணலீலாதரங்கிணீ |
ஆத்ய: கிருஷ்ணாவதாரோSயம்
ஸங்க்ரஹேணாபிநீயதே ||

11. உக்ரஸேனஸ்தத: கம்ஸோ
தேவகீ வஸுதேவராட் |
தயோ: காராக்ருஹே வாஸ:
கம்ஸேன விஹித: கில ||

12. பிரும்ஹா ஸுரேந்த்ரோ தரணீ
ஸனகாத்யாஸ்ததோ ஹர:[1] |
பகவத் ப்ரார்த்தனா தேஷாம்
தத்தத்ஸ்தானநிவேசனம் ||

13. நாரதஸ்யோபதேசேன
ஷட்ஸுதானாம் விநாசனம் |
தேவக்யாஸ்ஸப்தமோ கர்ப்ப:
ஸங்கர்ஷண இதீரித: ||

14. கோகுலே கிருஷ்ணகமனம்
துர்காயா மதுராகம: |
கதாயாஸ்ஸங்க்ரஹஸ்த்வேவம்
சரித்ரேSஸ்மிந் நிகத்யதே ||

**( ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணீ எனப்படும் இந்த நூலில் அடங்கியுள்ள கதையின் சுருக்கம்.)**

## செ— 8-14

8. *நூலின் ஆரம்பத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் தோற்றம், அதன்பின் பாலலீலை விசேஷங்கள், அதன்பின் பசுக்களின் கன்றுகளைக் காப்பாற்றுவது, அதன்பின் பசுக்களைக் காப்பாற்றுவது, குமார பருவம், பின்னர் கோபீவஸ்த்ராபஹரணம், கோவர்த்தன மலையைத் தூக்குதல், ராஸக்ரீடை, கம்ஸன் முதலிய அசுரர்களை அழித்தல், அதன்பின் கடலின் நடுவே த்வாரகை என்னும் பட்டனத்தை*

ஏற்படுத்தி, அங்கு வாஸம் செய்தல் ஆகிய சரித்திரங்கள்;

9. அதன் பின்னர் ரோகினியின் புதல்வனான பலராமருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் திருமணம்; ருக்மிணி தேவி முதலிய எட்டு பட்டமஹிஷிகளுடன் கூடிய ஸ்ரீ கிருஷ்ணன் வானவர்களால் புகழப்படுவது;

10. இவ்விதமாக சுருக்கமாக ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணீயானது கூறப்பட்டுள்ளது. முதலில் ஸ்ரீ கிருஷ்ணன் அவதாரமானது சுருக்கமாக அபிநயிக்கப்படுகிறது.

11. உக்ரஸேன மஹாராஜன், அதன்பின், கம்ஸன் தேவகிதேவி, வஸுதேவன் என்ற அரசன் (இவர்கள் முறையே வருகிறார்கள்). பின்னர் கம்ஸனால் வஸுதேவர் தேவகி இருவருக்கும் சிறைவாசம் ஏற்படுத்தப்பட்டது.

12. (அச்சமயம் கிருஷ்ணர் தேவகியின் கர்ப்பத்தில் இருக்கும்போது), பிரம்மதேவன், தேவநேந்திரன், பூமிதேவி, ஸனகாதியோகிகள், பரமசிவன்[1] ஆகியோர் பகவான் ஸ்ரீ வாஸுதேவரிடம் ப்ராத்தனை செய்துவிட்டு அவரவர் இருப்பிடம் சென்றனர்.

**(விளக்கம்–1)** முந்தைய பிரசுரங்களில் हरिः என்றிருப்பது இங்கு பொருந்தாது. பாகவதம் 10–வது ஸ்கந்தம், 1–வது அத்யாயம், 19–வது சுலோகத்தில் **जगाम सत्रिनयनः तीरं क्षीरपयोनिधेः** என்ற வசனப்படி, இங்கு हरः என்ற பதமே பொருத்தமானது.

13. தேவகிக்கு முறையாகப் பிறந்த ஆறு குழந்தைகளையும் நாரதருடைய உபதேசத்தின்படி கம்ஸன் கொன்றுவிடுகிறான். தேவகியின் ஏழாவது கர்ப்பத்தில் உள்ளவரே ஸங்கர்ஷனன் என்ற பெயரால் அழைக்கப்பட்டார்.

14. மதுரையில் பிறந்த ஸ்ரீ கிருஷ்ணன் கோகுலத்தை அடைந்தார். கோகுலத்தில் பிறந்த பகவானுடைய மாயையாகிற துர்காதேவியானவள் மதுரையை வந்தடைந்தாள். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின்

*விரிவான சரித்திரத்தின் சுருக்கம் இங்கு கூறப் பட்டது.*

**तत्रादावुग्रसेनागमनम् ।**

**தத்ராதாவுக்ரஸேனாகமனம்.**

दरु-1.

**दरु - सौराष्ट्रं - आदि ।**

**अग्रेसरो महात्मना- मग्रगण्योऽपि धीमताम् ।**
**उग्रशासनकाग्रणी- रुग्रसेनो विराजते ॥**

**தரு—ஸௌராஷ்ட்ரம்—ஆதி**

**தரு—1**

அக்ரேஸரோ மஹாத்மநா மக்ரகண்யோSபி தீமதாம் |
உக்ரசாஸநகாக்ரணீ ருக்ரஸேனோ விராஜதே ||

*முதலாவதாக உக்ரஸேன மகாராஜாவின் வருகை.*

**தரு—1**

*சிறந்த பெரியோர்களின் முன்னிலையில் செல்பவர், சிறந்த அறிவாளிகளுக்குள் முதல்வராக கணக்கிடப் படுபவர், தீயவர்களைக் கடுமையாகத் தண்டிப்பதில் முன்னிருப்பவர், அத்தகைய உக்ரஸேன மகாராஜன் நன்கு விளங்குகின்றார்.*

**अथ कंसागमनम् ॥**

**அத கம்ஸாகமனம் ||**

दरु-2.

**दरु - सौराष्ट्रं - आदि ।**

**शठो हठादधर्मकृत् महामूढो महाबली ।**
**कठोरहृदयो नित्यं कंसासुरस्समायाति ॥**

**தரு—2**

**தரு—ஸௌராஷ்ட்ரம்—ஆதி**

சடோ ஹடாததர்மக்ருத் மஹாமூடோ மஹாபலீ |
கடோர ஹ்ருதயோ நித்யம் கம்ஸாஸுரஸ்ஸமாயாதி ||

*அதன்பின் கம்ஸனின் வருகை.*

**தரு—2**

*வஞ்சகன், தோன்றியபடி தீய செய்கைகளைப் புரிபவன், மிகச்சிறந்த அறிவிலி, மிகுந்த பலசாலி, எப்பொழுதும் கல்நெஞ்சம் படைத்தவன், அத்தகைய கம்ஸன் என்னும் அரசன் வருகிறான்.*

**देवक्यागामनम् ॥**

दरु-3.

**दरु - नाथनामक्रिया - आदि ।**

**आयाति देवकी दिव्यसुन्दरी - विष्णु-**
**मायेव साक्षादियममरी नारी**
**नराधिपवरगेहिनी - श्री**
**नारायणीयदिव्यमूर्तिजननी**
**इन्दुवदना अरविन्दलोचना - शुभ -**
**कुन्दरदना कुटिलकुन्तलघना ॥**

**தேவக்யாகமனம் |**

**தரு—3**

**தரு—நாதநாமக்ரியா—ஆதி**

ஆயாதி தேவகீ திவ்யஸுந்தரீ–விஷ்ணு–
மாயேவ ஸாக்ஷாதியமமரீ நாரீ
நராதிபவரகேஹிநீ–ஸ்ரீ
நாராயணீயதிவ்யமூர்த்திஜனனீ

இந்துவதனா அரவிந்தலோசனா–சுப–
குந்தரதனா குடிலகுந்தலகனா ||

**தேவகியின் வருகை.**

**தரு—3**

*மிக்க அழகுவாய்ந்தவள், விஷ்ணுவின் மாயை போன்றவள், தேவஸ்த்ரீயைப் போன்றவள், சிறந்த அரசனான வஸுதேவனின் மனைவி, ஸ்ரீநாராயணனுடைய திவ்ய அவதாரமான ஸ்ரீகிருஷ்ணனுக்குத் தாயானவள், சந்திரனைப் போன்ற முகத்தையுடையவள், தாமரை இதழ் போன்ற விழிகளையுடையவள், அழகியதான ஆம்பல் பூ போன்ற பற்களையுடையவள், வளைந்திருக்கும் அடர்ந்த கூந்தலையுடையவள். அத்தகைய தேவகீ வருகிறாள்.*

**अथ उग्रसेनानुज्ञया वसुदेवागमनम् ॥**

दरु-4 ॥

**दरु - कल्याणी - आदि ।**

असुरारण्यकुठारो वसुमत्यां महानसौ
वसुधाधिपतिलको वसुदेवो विराजते ॥

**அத உக்ரஸேனானுக்ஞயா வஸுதேவாகமனம் ||**

**தரு—4**

**தரு—கல்யாணீ—ஆதி**

அஸுராரண்யகுடாரோ
வஸுமத்யாம் மஹாநஸௌ
வஸுதாதிபதிலகோ
வஸுதேவோ விராஜதே ||

**அதன்பின் உக்ரஸேன மகாராஜாவின் உத்தரவால்
வஸுதேவருடைய வருகை.**

**தரு—4**

அசுரர்களாகிற காட்டிற்குக் கோடரியைப் போல் இருப்பவர், இம் மண்ணுலகில் நற்குணங்கள் படைத்த மஹான், அரசர்களுக்கெல்லாம் திலகம் போல் இருப்பவர், அத்தகைய வஸுதேவர் விளங்குகிறார்.

## गद्यं-1

**अथ देवकी-वसुदेवयोः विवाहो-त्सवानन्तरं वसुदेव-गृहप्रवेश-समये तयोः सारथ्यं कुर्वति कंसे देवक्याः तु अष्टमो गर्भः कंस-मृत्युः इति अशरीरवाक्यं श्रुत्वा कंसो वसुदेवं प्रत्याह ॥**

**கத்யம்—1**

*அத தேவகீவஸுதேவயோ:-விவாஹோத்ஸவாநந்-தரம் வஸுதேவக்ருஹப்ரவேசஸமயே - தயோ: ஸாரத்யம் குர்வதி கம்ஸே தேவக்யா: து அஷ்டமோ கர்ப்ப: கம்ஸ ம்ருத்யு: இதி அசரீரவாக்யம் ச்ருத்வா கம்ஸோ வஸுதேவம் ப்ரத்யாஹ ||*

**சூர்ணிகை—1**

பின்னர் தேவகிக்கும் வஸுதேவருக்கும் திருமண வைபவம் முடிந்த பின்னர், வஸுதேவருடைய மாளிகையில் கிருஹப்பிரவேசத்திற்காகச் செல்லும் சமயத்தில் வஸுதேவரும், தேவகியுமான மணமக்களைத் தேரில் இருக்கச் செய்து, அத்தேரை கம்ஸன் ஓட்டிச் செல்லும் போது வானவீதியில் "தேவகிக்குப் பிறக்கும் எட்டாவது குழந்தையானது கம்ஸனைக் கொல்லப் போகிறது" என்ற அசரீரியாகிற வாக்கியத்தைக் கேட்டவுடன், கம்ஸன் வஸுதேவரைக் குறித்துப் பேசலானான்.

श्लो ॥

वसुदेव हनिष्यामि करिष्याम्यात्मनो हितम् ।
देवकीं भगिनीमेनां मृत्युबीजं ममाप्यहम् ॥15॥

**ச்லோ—15**

வஸுதேவ ஹநிஷ்யாமி கரிஷ்யாம்யாத்மநோ ஹிதம் |
தேவகீம் பகிநீமேனாம் ம்ருத்யுபீஜம் மமாப்யஹம் ||

**செ—15**

*ஏ, வஸுதேவரே, இந்த தேவகியானவள் என்னுடைய மரணத்திற்குக்காரணமாக இருப்பவள்; எனவே, நான் உயிருடன் வாழ்வதற்காக, என் சஹோதரியானாலும் அவளைக் கொன்றுவிடப் போகிறேன்.*

**अथ वसुदेवः कंसं प्रत्याह ॥**

द्विपद ॥ गीतं - 5.

हे कंस राजसुत हे नरश्रेष्ठ
हे सत्यसन्ध कुलजलधिभवरत्न
हे सौम्यगुणयुक्त जनासक्त
कल्याणवेद्याश्च कलितबहुभद्राम्
मुञ्च भगिनीमद्य मुहुरधिकहृद्याम्
सत्यं वदामि तव सत्यसन्धोऽस्मि
दास्यामि तज्जात वत्साननिन्द्य
मा साहसं कर्तु- मर्हसि सदैव
तव भगिन्यैव सह सुखमधिवसामि
भवने तवैव वर- मस्तु शुभमद्य ॥

**அத வஸுதேவ: கம்ஸம் ப்ரத்யாஹ !**

## த்விபத !! கீதம்–5

ஹே கம்ஸ ராஜஸுத ஹே நரச்ரேஷ்ட
ஹே ஸத்யஸந்த குலஜலதிபவரத்ந
ஹே ஸௌம்யகுணயுக்த ஜநாஸக்த
கல்யாணவேத்யாஞ்ச கலிதபஹுபத்ராம்
முஞ்ச பகிநீமத்ய முஹூரதிகஹ்ருத்யாம்
ஸத்யம் வதாமி தவ ஸத்யஸந்தோऽஸ்மி
தாஸ்யாமி தஜ்ஜாத– வத்ஸாநநிந்த்ய
மா ஸாஹஸம் கர்து– மர்ஹஸி ஸதைவ
தவ பகின்யைவ ஸஹ ஸுகமதிவஸாமி
பவநே தவைவ வர– மஸ்து சுபமத்ய ||

**அதன்பின் வஸுதேவர் கம்ஸனை நோக்கிச் சொல்கிறார்.**

## இரண்டுபத சந்தம் – (கீர்த்தனம்—5)

உயர்ந்த மனிதனும் ராஜகுமாரனுமான, ஏ, கம்ஸா, உண்மை தவறாமல் நடப்பவர்களின் வம்சமாகிற கடலில் இரத்தினம் போலத் தோன்றியவனே, நல்லோர்களிடத்தில் அன்பு கொண்டவனே, நற்குணம் படைத்தவனே, திருமணக்காலத்தில் பல நல்ல சுப காரியங்களைச் செய்து, அதனால் மிகவும் அழகு வாய்ந்தவளாய் இருக்கும் இந்த உன் சகோதரியைக் கொல்லாமல் இருப்பாயாக. நான் உண்மையை மீறாதவன். குற்றமற்றவனே, தேவகியிடம் பிறக்கும் குழந்தைகளை உன்னிடம் கொடுத்து விடுகிறேன். இதை உண்மையாகச் சொல்லுகிறேன். ஆலோசிக்காமல் திடீரெனச் சகோதரியைக் கொல்லும் காரியத்தைச் செய்யாதே. உன்னுடைய சகோதரியான தேவகியுடன் கூடவே, உன்னுடைய வீட்டிலேயே, எப்பொழுதும் சுகமாக வசிக்கிறேன். கல்யாண காலத்தில் இதை எனக்கு வரமாக அளித்துவிடு.

गद्यं-2 ॥

अथ वसुदेव-वाक्यं श्रुत्वा कंसः तौ कारागृहं प्रावेशयत् ॥

**கத்யம்—2**

அத வஸுதேவவாக்யம் ச்ருத்வா கம்ஸஸ்தௌ
காராக்ருஹம் ப்ராவேசயத் ||

**சூர்ணிகை—2**

*பின்னர் வஸுதேவருடைய சொல்லைக் கேட்டபின், கம்ஸன், வஸுதேவரையும் தேவகியையும் சிறைக்குள் வைத்து விட்டான்.*

**अथ ब्रह्मागमनम्**

दरु-5 ॥

**दरु - नाथनामक्रिया - आदि ।**

आयाति चतुराननो ब्रह्मा सदसि
गायं गायं ध्यायं ध्यायं विष्णुं चेतसि
दण्डकमण्डलुधारी दानववैरी
अण्डब्रह्माण्डविधाता अखिलजनयिता ॥

**அத பிரஹ்மாகமனம் ||**

**தரு—5**

தரு—நாதநாமக்ரியா—ஆதி |

ஆயாதி சதுரானனோ ப்ரம்ஹா ஸதஸி
காயம் காயம் த்யாயம் த்யாயம் விஷ்ணும் சேதஸி
தண்ட கமண்டலுதாரி தானவவைரீ
அண்டப்ரஹ்மாண்டவிதாதா அகிலஜனயிதா ||

**பின்னர் பிரம்மதேவனுடைய வருகை.**

**தரு—5**

உலகம் அனைத்தையும் படைத்தவர், அசுரர்களின் பகைவர், பதிநான்கு உலகங்களையும் படைத்தவர், தண்டம் கமண்டலம் இவற்றைக் கையில் தாங்கியவர், நான்கு முகங்களையுடையவர். அத்தகைய பிரும்மதேவன் உள்ளத்தில் நாராயணனைத் தியானம் செய்துகொண்டும், அவருடைய திருநாமங்களை வாயால் பாடிக்கொண்டும், சபைக்கு (நாடக மேடைக்கு) வருகிறார்.

**अथ देवेन्द्रागमनम् ॥**

दरु-6 ॥

**दरु - पुन्नागवराळी - आदि ।**

बृन्दारकादिविनुतो मन्दं मन्दं महीसुखम्
अन्तरङ्गे विचिन्तयन् इन्द्रो महान् विराजते ।

**அத தேவேந்த்ராகமனம் ||**

**தரு—6**

**தரு—புன்னாகவராளீ—சாபு |**

ப்ருந்தாரகாதி வினுதோ மந்தம் மந்தம் மஹீஸுகம்
அந்தரங்கே விசிந்த்யன் இந்த்ரோ மஹான் விராஜதே |

**பின்னர் தேவேந்திரன் வருகை.**

**தரு—6**

தேவர் முதலியவர்களால் புகழப்பட்டவர், நற்குணங்கள் நிறைந்தவர், அத்தகைய தேவேந்திரன் தன் உள்ளத்தில் மண்ணுலகத்திற்கு சௌக்கியம் ஏற்படவேண்டு மென்று மெதுவாக ஆலோசனை செய்தவராக விளங்கு கின்றார்.

अथ धरण्यागमनम् ॥

दरु-7 ॥

दरु - श्रीरागं - आदि ।

लावण्यमूर्तिधारिणी समायाति
ललितमसुरहारिणी ।
सर्वलोकहितकारिणी सदा देवी
सत्यलोकसञ्चारिणी ॥

அத தரண்யாகமனம் ||

தரு—7

தரு—ஸ்ரீராகம்—ஆதி

லாவண்யமூர்த்திதாரிணீ ஸமாயாதி
லலிதமஸுரஹாரிணீ
ஸர்வலோகஹிதகாரிணீ ஸதா தேவீ
ஸத்யலோகஸஞ்சாரிணீ ||

பின்னர் பூமிதேவியின் வருகை.

தரு—7

*அழகிய வடிவம் தாங்கியவள், அசுரர்களை அழிப்பவள் எப்பொழுதும் யாவருக்கும் நன்மையைச் செய்பவள், பிரும்மதேவனுடைய ஸத்யலோகத்தில் சஞ்சரிப்பவள். இப்படிப்பட்ட பூமிதேவியானவள் அழகாக நடந்து வருகிறாள்.*

श्लो ॥

दृष्ट्वा सुरेन्द्रं ब्रह्माणं ब्रह्मणोऽनुज्ञया सह ।
ब्रह्मणा च सुरेन्द्रेण विष्णुं सा शरणं गता ॥16॥

**ச்லோ—16**

த்ருஷ்ட்வா ஸுரேந்த்ரம் ப்ரம்ஹானம்
ப்ரஹ்மணோனுக்ஞயா ஸஹ |
ப்ரஹ்மணா ச ஸுரேந்த்ரேண
விஷ்ணும் ஸா சரணம் கதா ||

**செ—16**

*பூமிதேவியானவள், பிரம்மதேவனையும், தேவேந்திரனையும் தரிசனம் செய்து, பின்னர் பிரம்ம தேவனுடைய உத்தரவின்படி, பிரம்மதேவனுடனும், தேவேந்திரனுடனும் கூடவே மஹாவிஷ்ணுவைப் புகலிடமாக அடைந்தாள்.*

**गद्यं-3 ॥**

**अथ भगवान् अपरिमित-सच्चिदानन्द-सत्य-परिपूर्णः परमात्मा अनाद्य-निर्वचनीया-चिन्त्य-शक्ति-र्मायाविलसित-लोका-नुजिघृक्षया परिगृहीत-दिव्य-मङ्गळ-मूर्तिः श्रीमन्नारायणः क्षीराब्धौ शेषपर्यङ्के शयानो महान् असौ सदा आस्ते । तमेन-मासुरभार-भराक्रान्ता गोरूप-धारिणी धरणी सुरपति-मुख-सुर-परिवेष्टिता सति अनन्य-शरणा शरणं आजगाम ॥**

**கத்யம்—3**

*அத பகவான் அபரிமித-ஸச்சிதானந்த-ஸத்ய-பரிபூர்ண: பரமாத்மா அநாத்ய-நிர்வசநீயா-சிந்த்ய-சக்திர்-மாயாவிலஸித-லோகா-னுஜிக்ருக்ஷயா பரிக்ருஹீத-திவ்ய-மங்கள-மூர்த்தி: ஸ்ரீமந்நாராயண: க்ஷீராப்தௌ சேஷபர்யங்கே சயாநோ மஹான் அஸௌ ஸதா ஆஸ்தே || தமேந-மாஸுரபார-பராக்ராந்தா கோரூப-தாரிணீ தரணீ ஸுரபதி-முக-ஸுர-பரிவேஷ்டிதா ஸதி அநந்யசரணா சரணம் ஆஜகாம ||*

**சூர்ணிகை—3**

*பின்னர் எல்லாவிதமான கல்யாண குணங்கள் நிறைந்தவரும், அளவிடமுடியாத அறிவு, ஆனந்தம், சத்யம் இவைகள் நிறைந்தவரும், அனாதியும், இன்னதென்று கூறமுடியாததும், உள்ளத்தால் அறியமுடியாததுமான சக்தியை உடையவரும், மாயையால் தோன்றிய உலகத்தைக் காப்பாற்றுவதற்கான விருப்பத்தால் மிகவும் அழகிய மங்களகரமான உருவத்தை அடைந்திருப்பவரும், மிகவும் பெருமை வாய்ந்த பரமாத்மாவுமான ஸ்ரீமந் நாராயணன், பாற்கடலில் அரவரசனான ஆதிசேஷனாகிற கட்டிலில் படுத்திருப்பவராக இருக்கிறார். (மிகத் தீயவர்களான) அசுரர் கூட்டங்களை சுமப்பதனால் மிகவும் சோர்வடைந்த பூமிதேவி, பசுவின் வடிவத்தைத் தாங்கியவளாக, தேவேந்திரன் முதலிய தேவர்களால் சூழப்பட்டவளாய் இருந்துகொண்டு, வேறு ஒரு புகலிடம் இல்லாதவளாய் ஸ்ரீமந்நாராயணனைச் சரண் அடைந்தாள்.*

**गद्यं-4 ॥**

**अथ सनकादीनां भगवन्नाम माहात्म्यं ख्यापयतामागमनं गीयते । अथ सनकादयः ऊचुः ॥**

**கத்யம்—4**

அத ஸநகாதீனாம் பகவந்நாமமாஹாத்ம்யம்
க்யாபயதா–மாகமனம் கீயதே | அத ஸனகாதய: ஊசு: ||

**சூர்ணிகை—4**

*பின்னர், ஸ்ரீமந்நாராயணனின் திருநாமங்களின் பெருமையைப் புகழ்ந்து கூறுபவர்களான ஸநகாதி யோகிகளின் வருகை கானம் செய்யப்படுகிறது. பின்னர் ஸநகர் முதலியவர்கள் சொல்கிறார்கள்.*

## गीतं-6 ॥

**भैरवी - आदि ।**

रामकृष्णगोविन्देति नामसम्प्रयोगे
काममिह स्नातव्यं सर्वोत्तमप्रयागे ॥1॥

दिग्देशकालानपेक्ष- सिद्धसर्वसुलभे
सद्गुरुकृपासमुद्र- सङ्गहेतुलाभे ॥2॥

रामनामगङ्गया मिळितकृष्णनाम-
यामुने गोविन्दनाम- सरस्वतीप्रथिते ॥3॥

योगिमानसपरम- हंसकुलकलिते
वागीशविष्णुरुद्रादि- वाग्लहरीललिते ॥4॥

सर्वलोकालोककाम- साङ्गफलदाने
निर्विशेषनित्यसुख- लाभसुनिदाने ॥5॥

ऋग्यजुस्सामादिवेद- शाखिमूलविलसिते
रागलोभादिसन्ताप- शान्तिकरचरिते ॥6॥

स्नानसन्ध्याजपहोम- तर्पणानपेक्षिते
हानिवृध्यादिरहिता- खण्डसुखफलदे ॥7॥

स्नानं मानसिकं तस्य स्मरणं वाचनिकम्
कीर्तनं कायिकं तस्य कीर्तने सुनर्तनम् ॥8॥

यागयोगरागभोग- त्यागसम्बन्दम् विना
भक्तिविरक्तिविज्ञान द्वारा मुक्तिफलदे ॥9॥

ब्रह्मविद्यालक्षण- निरीक्षणविचक्षणे
बाधितघोरसंसार- वारणतत्कारणे ॥10॥

सर्वपापौघतिमिर- चण्डसूर्यमण्डले
साधुनारायणतीर्थ- तीर्थराजविमले ॥11॥

## கீதம்–6

**பைரவி—ஆதி**

1. ராமகிருஷ்ணகோவிந்தேதி நாமஸம்ப்ரயோகே
காமமிஹ ஸ்நாதவ்யம் ஸர்வோத்தமப்ரயாகே ||
2. திக்தேசகாலானபேக்ஷ– ஸித்தஸர்வஸுலபே
ஸத்குருக்ருபாஸமுத்ர– ஸங்கஹேதுலாபே ||
3. ராமநாமகங்கயா மிளிதகிருஷ்ணநாம–
யாமுனே கோவிந்தநாம– ஸரஸ்வதீப்ரதிதே ||
4. யோகிமானஸபரம– ஹம்ஸகுலகலிதே
வாகீசவிஷ்ணுருத்ராதி– வாக்லஹரீலலிதே ||
5. ஸர்வலோகாலோககாம ஸாங்கபலதானே
நிர்விசேஷ நித்யஸுக– லாபஸுநிதானே ||
6. ரிக்யஜுஸ்ஸாமாதிவேத– சாகிமூலவிலஸிதே
ராகலோபாதிஸந்தாப– சாந்திகரசரிதே ||
7. ஸ்நானஸந்த்யாஜபஹோம– தர்ப்பணானபேக்ஷிதே
ஹானிவ்ருத்யாதிரஹிதா– கண்டஸுகபலதே ||
8. ஸ்நானம் மானஸிகம் தஸ்ய ஸ்மரணம் வாசநிகம்
கீர்த்தனம் காயிகம் தஸ்ய கீர்த்தனே ஸுநர்த்தனம் ||
9. யாகயோகராகபோக– த்யாகஸம்பந்தம் விநா
பக்திவிரக்தி விக்ஞான– த்வாரா முக்திபலதே ||
10. ப்ரஹ்மவித்யாலக்ஷண– நிரீக்ஷணவிசக்ஷணே
பாதிதகோரஸம்ஸார– வாரண தத்காரணே ||
11. ஸர்வபாபௌகதிமிர– சண்டஸூர்யமண்டலே
ஸாதுநாராயணதீர்த்த– தீர்த்தராஜவிமலே ||

## கீர்த்தனம்—6

1. *ஹே, ராமா! ஹே, கிருஷ்ணா! ஹே, கோவிந்தா! என்ற மூன்று திருநாமங்களையும் சேர்த்துக் கூறுவது "ப்ரயாகம்" என்ற புண்ணிய தீர்த்தம் ஆகும். இந்தப்*

ப்ரயாகை என்ற புண்ணிய தீர்த்தம் புண்ணிய தீர்த்தங்கள் அனைத்தைக் காட்டிலும் சிறப்பு வாய்ந்தது ஆகும். எனவே இந்தப் ப்ரயாகத்தில் எல்லோரும் வேண்டிய அளவிற்கு நாம ஸங்கீர்த்தனம் செய்வது என்ற ஸ்நானத்தைச் செய்ய வேண்டும்.

2. இந்த மூன்று நாமங்கள் ஆகிற ப்ரயாகை என்னும் தீர்த்தத்தில் நாமஸங்கீர்த்தனமாகிற ஸ்நானம் செய்வதற்குக் குறிப்பிட்ட திக்கையோ, இடத்தையோ, காலத்தையோ எதிர்பார்க்க வேண்டாம். எப்பொழுதும், எங்கும், எந்த திக்கிலும் யாவராலும் செய்வதற்கு முடியும். யாவருக்கும் எளிதில் கிடைப்பதாகும்.[1] மேலும் மோக்ஷத்திற்குரிய உபாயமான ஞானத்தை அளிக்கும் ஸத்குருவின் கருணையாகிற சமுத்திரத்தில் சேர்ந்து, இந்த நாம ஸங்கீர்த்தன ப்ரயாகமானது மோக்ஷத்தை அளிப்பதாகும்.

**(விளக்கம்–1)** கங்கை, யமுனை, ஸரஸ்வதி சேர்ந்திருக்கின்ற புகழ்பெற்ற ப்ரயாகத்தில் ஸ்நானம் செய்வதற்குக் காலம், தேசம் இவற்றை அனுசரித்துச் செய்ய வேண்டும். எளிதில் அது அனைவருக்கும் கிடைக்காது. பகவானின் நாமங்களைச் சொல்வது எளிது.

பத்ம புராணத்தில், ஸ்ரீமத் பாகவத மஹாத்மியத்தில் கூறப்பட்டிருப்பதோடு, இங்கு ஸ்ரீ நாராயணதீர்த்த ஸ்வாமிகள் குறிப்பிட்டிருப்பது ஒத்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**न गङ्गा न गया काशी पुष्करं न प्रयागकम् ।**
**शुकशास्त्रकथायाश्च फलेन समतां नयेत् ॥** (भा.म. 3.32)

3. இந்த நாம ஸங்கீர்த்தன ப்ரயாகத்தில் ஸ்ரீராம நாமா, கங்கா நதியாகும்; அதனுடன் சேர்ந்த கிருஷ்ண நாமா யமுனை நதியாகும். அவைகளுடன் சேர்ந்த கோவிந்த நாமா ஸரஸ்வதி நதியாகும்.

4. இந்த நாம ஸங்கீர்த்தன ப்ரயாகத்தில் யோகி களுடைய உள்ளங்கள் ஆகிற மிகச்சிறந்த அன்ன பக்ஷிகளின் கூட்டம் சந்தோஷத்தை அடைகின்றது. பிரம்மதேவன், விஷ்ணு, சிவன் முதலிய வானவர் களைப் புகழ்ந்து கூறும் சொற்களாகிற நீர்ப் பெருக்கால் இந்த ப்ரயாகம் அழகு பொருந்திய தாகும்.

5. மேலும், நாம ப்ரயாகமானது, இம்மையிலும், மறுமையிலும் வேண்டிய சௌக்கியங்களை அடைய விரும்புகிறவர்களுக்கு எல்லாவிதமான பயன் களையும் அளிப்பதாகும். ஸச்சிதாநந்தப் பிரம்மத்தை அடைதலாகிற மோக்ஷத்தை அடைவதற்கு முதல் காரணமாக இருப்பதாகும்.

6. மேலும், நாம ப்ரயாகமானது, ரிக், யஜுஸ், ஸாம வேதங்களாகிய மரங்களின் வேர்களுடன் கூடியது. விருப்பம், பேராசை, கோபம் இவைகளால் ஏற்படும் துன்பத்தை இல்லாமல் செய்வதாகும்.

7. இந்த நாம ஸங்கீர்த்தன ப்ரயாகத்தில், உலகப் புகழ் பெற்ற ப்ரயாகத் தீர்த்தத்தில் போன்று, ஸ்நானத்தையோ, ஸந்த்யாவந்தனம் செய்வதையோ, மந்த்ர ஜபம் செய்வதையோ, தீயில் ஹோமம் செய்வதையோ, தர்ப்பணம் செய்வதையோ செய்ய வேண்டாம்; வளர்ச்சியோ, தளர்ச்சியோ அற்றதான பூர்ணமான பிரும்மானந்தம் அதிலே தோன்றுவ தாகும்.

8. இந்த நாம ஸங்கீர்த்தன ப்ரயாகத்தில் எப்பொழுதும் நாமங்களை நினைத்துக் கொண்டிருப்பதனால், மனத்தால் ஸ்நானம் செய்யலாம்: நாவால் சொல்லிக் கொண்டேயிருப்பதால், வாக்காலும் ஸ்நானம் செய்யலாம். இந்த நாமங்களைக் கூறிக்கொண்டு நர்த்தனம் செய்வதனால், உடலாலும் ஸ்நானம்

செய்யாம். (உலகப் பிரசித்தமான பிரயாகத்தில் உடலால் மட்டுமே ஸ்நானம் செய்தல் முடியும்).

9. இந்த நாம ஸங்கீர்த்தன ப்ரயாகமானது வேள்விகளுடையவோ, உள்ளத்தை அடக்குதல் என்ற யோகத்துடையவோ, பிறருக்குப் பொருள்களை அளித்தல், விஷயங்களை அனுபவித்தல், அதனைத் தவிர்த்தல் ஆகிய ஒன்றினுடைய சேர்க்கை இல்லாமலேயே கடவுளிடத்தில் பக்தியையும் உலக சுகங்களில் வெறுப்பையும் உண்மையான ஆத்ம ஞானத்தையும் அளித்து மோக்ஷம் என்கிற பதத்தை அளிப்பதாகும்.

10. மேலும், இந்த நாம ஸங்கீர்த்தன ப்ரயாகமானது பிரும்ம வித்யை என்று புகழ்ந்து கூறப்படும் பிரம்ம ஞானத்தை அளிப்பதும், மாயையால் தோன்றும் மிகக் கொடுமை வாய்ந்த பிறப்பு இறப்பு ஆகிற ஸம்ஸாரமாகிற யாவற்றையும், அதன் காரணமான மூல அஞ்ஞானத்தையும் வேருடன் அழிப்பதற்குக் காரணமுமாகும்.

11. எண்ணற்ற பாவக்கூட்டங்களாகிற இருளுக்கு இந்த ப்ரயாகமானது சூர்ய மண்டலம் போன்று இருப்பதாகும்; மிகப் புண்ணியம் செய்த நாராயணதீர்த்தர் எனப்படும் பக்தருடைய உயர்ந்த உள்ளமாகிய தீர்த்தத்தில் விளங்குவதுமாகும்.

गद्यं-5 ॥

एवं सनकादिभिः प्रशस्यमान दिव्यनामधेयो भगवान् शेषेशाय आविरासीत् ॥ तदेतदभिनीयते ॥

**கத்யம்—5**

ஏவம் ஸனகாதிபி: ப்ரசஸ்யமானதிவ்யநாம-தேயோ பகவான் சேஷேசய ஆவிராஸீத் || ததேததபிநீயதே ||

## சூர்ணிகை—5

இவ்விதம் ஸநகர் முதலிய யோகிகளால் புகழப்பட்ட பெருமை வாய்ந்த திருநாமம் பூண்டவரும், பூஜிக்கத் தகுந்தவரும், ஆதிசேஷன் மீது படுத்திருப்பவருமான ஸ்ரீமந் நாராயணன் ஸநகாதி யோகிகளுக்குத் தரிசனம் அளித்தார். இவ்விஷயம் அபிநயிக்கப்படுகிறது.

## दरु-8 ॥

दरु - शंकराभरणम् - चापु ॥

अशेषलोककारणं अनादिमध्यमव्ययम्
स शेषशयनो विभुः- र्विशेषतो विराजते ।
महाफणीन्द्रशयनो महामुनीन्द्रसेवितो
महालक्ष्मीमहीयुतो महाविष्णुर्विराजते ॥

## தரு—8

தரு—சங்கராபரணம்—சாபு |

அசேஷலோககாரணம் அநாதிமத்யமவ்யயம்
ஸசேஷசயநோ விபுர்– விசேஷதோ விராஜதே ||
மஹாபணிந்த்ரசயநோ மஹாமுனீந்த்ரஸேவிதோ |
மஹாலக்ஷ்மீமஹீயுதோ மஹாவிஷ்ணுர்விராஜதே ||

## தரு—8

உலகம் அனைத்திற்கும் முழுமுதற் காரணமானவர், ஆதி, அந்தம், மத்யம் இல்லாதவர், குறைவற்றவர், எல்லோருக்கும் தலைவராக இருப்பவர், அத்தகைய நாராயணன் ஆதிசேஷன் என்ற படுக்கையில் உறங்குகிறார்.

மிக உயர்ந்த அரவரசன் மீது படுத்து இருப்பவர், மிகச் சிறந்த முனிவர்களால் பூஜிக்கப்பட்டவர், மஹாலக்ஷ்மி, பூமிதேவி இவர்களுடன் கூடியவர். அத்தகைய மஹா விஷ்ணுவானவர் மிக்க சோபையுடன் விளங்குகிறார்.

गद्यं-6 ॥

इत्येवं भगवति प्रसन्ने प्रणिपातपूर्वकं धरण्युवाच महाविष्णुं प्रति ॥

**கத்யம்—6**

*இத்யேவம் பகவதி ப்ரஸன்னே ப்ரணிபாதபூர்வகம் தரண்யுவாச மஹாவிஷ்ணும் ப்ரதி ||*

**சூர்ணிகை—6**

*இங்ஙனம் பகவான் மஹாவிஷ்ணுவானவர் தரிசனம் அளித்தவுடன் பூமிதேவியானவள் நமஸ்காரம் செய்து, அவரிடம் கூறுகின்றாள்.*

श्लो ॥

शरणमुपगताहं त्वां शरण्यं जनानाम्
निखिलभयवियोगं योगिचिन्त्यं महान्तम् ।
सुररिपुगणभारं दुस्सहं दुर्भरं मे
परिहर परमात्मन् भक्तिसिद्धैकमूर्ते ॥17॥

**ச்லோ—17**

சரணமுபகதாஹம் த்வாம் சரண்யம் ஜநாநாம்
நிகிலபயவியோகம் யோகிசிந்த்யம் மஹாந்தம் |
ஸுரரிபுகணபாரம் துஸ்ஸஹம் துர்ப்பரம் மே
பரிஹர பரமாத்மன் பக்திஸித்தைகமூர்த்தே ||

**செ—17**

*பக்தி மார்க்கத்தால் அடையத் தகுந்த திவ்ய ஸ்வரூபத்தை உடையவரே! உயிர்கள் அனைத்திற்கும் ஆத்மாவாக இருப்பவரே! மிக உயர்ந்தவரும் யோகிகளால் உள்ளத்தில் தியானம் செய்யப்படுகின்றவரும், அடியார்கள் அனைவருடையவும் அச்சத்தை அறவே இல்லாமல்*

செய்கின்றவரும் மக்கள் அனைவருக்கும் ஒரே புகலிடமாக இருப்பவருமான, மஹாவிஷ்ணுவான தங்களை (பூமிதேவி எனப்படும்) நான் சரணம் என்று அடைந்தேன். என்னால் மிகவும் பொறுக்க முடியாததான அசுரர் கூட்டங்களின் சுமையை அகற்றுவீராக.

## गीतं-7

**सौराष्ट्रं - आदि ।**

शरणं भव करुणां मयि कुरु दीनदयाळो
करुणारसवरुणालय करिराजकृपाळो
अधुना खलु विधिना मयि सुधियाऽसुरभरितम्
मधुसूदन मधुसूदन हर मामकदुरितम् ॥1॥

वरनूपुरधर सुन्दर- करशोभितवलय
सुरभूसुरभयवारक धरणीधर कृपया
त्वरया हर भरमीश्वर सुरवर्य मदीयम्
मधुसूदन मधुसूदन हर मामकदुरितम् ॥2॥

घृणिमण्डलमणिकुण्डल फणिमण्डलशयन
अणिमादिसुगुणभूषण मणिमण्डपसदन
विनतासुतघनवाहन मुनिमानसभवन
मधुसूदन मधुसूदन हर मामकदुरितम् ॥3॥

अरिभीकर हलिसोदर परिपूर्णसुखाब्धे
नरकान्तक नरपालक परिपालितजलधे
हरिसेवकशिवनारा- यणतीर्थपरात्मन्
मधुसूदन मधुसूदन हर मामकदुरितम् ॥4॥

## கீதம்–7

### ஸௌராஷ்ட்ரம்—ஆதி

1. சரணம் பவ கருணாம் மயி குரு தீனதயாளோ
கருணாரஸவருணாலய கரிராஜக்ருபாளோ
அதுநா கலு விதிநா மயி ஸுதியாSஸுரபரிதம்
மதுஸூதன மதுஸூதன ஹர மாமகதுரிதம் ||

2. வரநூபுரதர ஸுந்தர– கரசோபிதவலய
ஸுரபூஸுரபயவாரக தரணீதர க்ருபயா
த்வரயா ஹர பரமீச்வர ஸுரவர்ய மதீயம்
மதுஸூதன மதுஸூதன ஹர மாமகதுரிதம் ||

3. க்ருணிமண்டலமணிகுண்டல பணிமண்டலசயன
அணிமாதிஸுகுணபூஷண மணிமண்டபஸதன
விநதாஸுதகனவாஹன முனிமானஸபவன
மதுஸூதன மதுஸூதன ஹர மாமகதுரிதம் ||

4. அரிபீகர ஹலிஸோதர பரிபூர்ணஸுகாப்தே
நரகாந்தக நரபாலக பரிபாலிதஜலதே
ஹரிஸேவகசிவநாரா– யணதீர்த்தபராத்மன்
மதுஸூதன மதுஸூதன ஹர மாமகதுரிதம் ||

## கீர்த்தனம்—7

1. *தயையாகிற ரஸத்திற்கு கடலாக இருப்பவரே, ஏழைகள் மீது இரக்கம் உள்ளவரே, முதலையிடம் கஷ்டப்பட்ட கஜேந்திரனிடம் மிகவும் கருணை காட்டியவரே, தாங்கள் எனக்கு அடைக்கலமாக இருக்கவேண்டும். என் விஷயத்திலும் தயவு செய்ய வேண்டும். மது என்னும் அசுரனை அழித்தவரே, தாங்கள் என்னுடைய முன்வினைப் பயனாய் என்மீது வாழ்கின்ற கொடிய அசுரர்களுடைய சுமையாகிற என்னுடைய பாபத்தை இப்பொழுது என்மீது நல்லெண்ணம் கொண்டு அகற்ற வேண்டும்.*

2. *அழகிய காற்சிலம்புகளை அணிந்திருப்பவரே, அழகிய திருக்கரங்களில் விளங்குகின்ற வளையல்*

களை உடையவரே: விண்ணுலக, மண்ணுலக மக்களின் அச்சத்தை ஒழித்தவரே, இந்த மண்ணுலகத்தைத் தாங்கியவரே, தேவர்களுக்கெல்லாம் சிறந்தவரே, என் தலைவனே, ஹே மதுஸூதன, தயவுடன் மிகவிரைவிலே எனக்கு இருக்கும் அசுரர்களாகிய சுமையென்கிற பாபத்தை அகற்ற வேண்டும்.

3. சூரிய மண்டலம் போன்று பிரகாசிக்கின்ற இரத்தின மயமான குண்டலங்களை அணிந்தவரே, வளைந்து சுற்றப் பட்டிருக்கின்ற ஆதிசேஷனுடைய உடலில் படுத்திருப்பவரே, அணிமா[1] முதலிய எட்டு நற்குணங்கள் ஆகிற அணிகளை அணிந்திருப்பவரே, இரத்தினமயமான மண்டபத்தில் வீற்றிருப்பவரே, விநதையின் சிறந்த மகனான கருடனை வாகனமாகக் கொண்டவரே, முனிவர்களுடைய உள்ளங்களாகிற வீட்டில் வசிப்பரே, ஹே மதுஸூதனா, என் பாபத்தை அகற்ற வேண்டும்.

**(விளக்கம்–1)** அணிமா முதலிய குணங்கள் எட்டு வகைப்படும்;

*1. அணிமா – மிகச் சிறியதாக ஆவது; 2. மஹிமா – மிகப் பெரியதாக இருத்தல்; 3. கரிமா – மிகப் பளுவாக இருப்பது; 4. லகிமா – மிக லேசாக ஆவது; 5. ப்ராப்தி – தான் விரும்பிய இடம் போய்ச் சேருதல்; 6. ப்ராகாம்யம் – தான் இஷ்டப்பட்டதை நடத்துதல்; 7. ஈசித்துவம் – அனைவருக்கும் தலைமையாக இருத்தல்; 8. வசித்வம் – அனைத்தையும் தனக்கு அடிமையாகும் படிச் செய்தல்.*

4. பகைவர்களுக்கு அச்சத்தை அளிப்பவரே, கலப்பையை ஆயுதமாகக் கொண்ட பலராமருக்கு உடன் பிறந்தவரே, துன்பம் கலக்காத நிறைந்த பேரானந்தத்திற்குக் கடலாய் இருப்பவரே, நரகாசுரனைக் கொன்றவரே, மாந்தர்களைக் காப்பாற்றுகின்றவரே, கடலைக் காப்பாற்றினவரே,

நாராயணனை வழிபடுகின்ற சிவ நாராயண தீர்த்தருக்குச் சிறந்த ஆத்மஸ்வரூபியாய் விளங்கு பவரே, ஹே, மதுஸூதனா, என்னுடைய பாபத்தை இல்லாமல் செய்வீராக.

श्लो ॥

इति विविधवचोभिः प्रार्थयन्त्यां धरण्यां
सकलभुवनमित्रं शत्रुहन्तारमीशम् ।
विधिमुखसुरवर्यास्तुष्टुवुर्विष्णुमाद्यम्
निखिलनिगमवेद्यं स्वार्थसंसिद्धिहेतुम् ॥18॥

क्षीराब्धिमध्यभुजगेन्द्रमहासनाय
देवाय नाभिकमलोदितपङ्कजाय ।
योगीन्द्रभाव्य गगनामल नित्यबोध
भूमाभिधाय पुरुषाय नमः परस्मै ॥19॥

**ச்லோ—18–19**

இதி விவித வசோபி: ப்ரார்த்தயந்த்யாம் தரண்யாம்
ஸகலபுவனமித்ரம் சத்ருஹந்தாரமீசம் |
விதிமுகஸுரவர்யாஸ்துஷ்டுவுர்விஷ்ணுமாத்யம்
நிகிலநிகமவேத்யம் ஸ்வார்த்தஸம்ஸித்திஹேதும் ||

க்ஷீராப்திமத்யபுஜகேந்த்ரமஹாஸநாய
தேவாய நாபிகமலோதிதபங்கஜாய |
யோகீந்த்ரபாவ்ய ககனாமல நித்யபோத
பூமாபிதாய புருஷாய நம: பரஸ்மை ||

**செ—18–19**

இவ்விதம் பலவிதமான புகழ்ந்து கூறும் சொற்களால் பூமிதேவியானவள் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும் பொழுது, பிரம்மதேவன் முதலிய சிறந்த தேவர்கள் அனை வரும் உலகம் அனைத்திற்கும் ஒப்புயர்வற்ற நண்பனும்,

பகைவர்களை அழிக்கின்றவரும், மறைகள் அனைத்தாலும் அறியத்தகுந்தவரும், தங்களுடைய இஷ்டத்தை நிறைவேற்று வதற்கான காரணமாய் இருப்பவரும், தலைவனும், முதல்வனுமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் துதித்தனர்.

சிறந்த யோகிகள் உள்ளத்தில் பாவனை செய்யப் படுபவரே ஆகாசம் போன்று நிர்மலமான அழியாத அறிவு வடிவமாக இருப்பவரே, பாற்கடலின் நடுவே அரவரச னான சேஷனை இருக்கையாக அடைந்தவரும், தனது நாபியில் இருக்கும் தாமரையில் தோன்றிய பிரம்மதேவனை உடையவரும், பூமா (பேரானந்தம்) என்று பெயர் தாங்கிய வரும் தேவனும் பரமபுருஷனுமான உமக்கு நமஸ்காரம்.

## गीतं-8 ॥

### आनन्दभैरवी - त्रिपुट ॥

प । नारायणाय नमो माधवाय ।

अनु । नागेन्द्रशयनाय नन्दिताखिललोकाय ॥ (नारायणाय)

नाभिकमलजनितविधिमुखाय
नूतनजलधराभाय
नानाचराचरनारीनररूपाय
नारदादिमुनिवन्द्यानन्दघनमयाय ॥1॥ (नारायणाय)

अगणितगुणगणाय आगमगेयाय
विगळितभयशोकाय
गगननिर्मलबोधगम्भीरभावाय
भगवद्भक्तहृदयपद्मभानुरूपाय ॥2॥ (नारायणाय)

करधृतरथचरणकम्बुपङ्कज-
कौमोदकीशार्ङ्गाय

निरवद्यगळशोभिनिजकौस्तुभभूषाय
परिहृतपरपक्षपक्षिराजवाहाय ॥3॥ (नारायणाय)

आमयादिविरहिताखिलमयाय
कामकोटिसुन्दराय
नामरूपरहितभूमैकरूपाय
सोमसूर्यनयनसामगानगेयाय ॥4॥ (नारायणाय)

जगदेकनाथाय जातमदनाय
जितवैरिमण्डलाय
निगमनिश्वासाय नित्यानन्दरूपाय
निरुपमगोकुलनीतनवनीताय ॥5॥ (नारायणाय)

वारिजलोचनाय वासुदेवाय
वरमुनिपारिजाताय
करुणाकरभक्तकारुण्यसाराय
नारायणतीर्थनतचरणाब्जाय ॥6॥ (नारायणाय)

## கீதம்—8

**ஆனந்தபைரவி—த்ருபுட**

ப. நாராயணாய நமோ மாதவாய |
அனு. நாகேந்த்ரசயநாய நந்திதாகிலலோகாய | (நாராயணாய)

1. நாபிகமலஜனிதவிதிமுகாய
நூதனஜலதராபாய
நாநாசராசரநாரீநரரூபாய
நாரதாதிமுனிவந்த்யாநந்தகனமயாய | (நாராயணாய)

2. அகணிதகுணகணாய ஆகமகேயாய
விகளிதபயசோகாய
ககனநிர்மலபோதகம்பீரபாவாய
பகவத்பக்தஹ்ருதயபத்மபானுரூபாய | (நாராயணாய)

3. கரத்ருதரதசரணகம்புபங்கஜ–
கௌமோதகீசார்ங்காய
நிரவத்யகளசோபிநிஜகௌஸ்துபபூஷாய
பரிஹ்ருதபரபக்ஷபக்ஷிராஜவாஹாய | (நாராயணாய)

4. ஆமயாதிவிரஹிதாகிலமயாய
காமகோடிஸுந்தராய
நாமரூபரஹிதபூமைகரூபாய
ஸோமஸூர்யநயன ஸாமகானகேயாய | (நாராயணாய)

5. ஜகதேகநாதாய ஜாதமதனாய
ஜிதவைரிமண்டலாய
நிகமநிச்வாஸாய நித்யானந்தரூபாய
நிருபமகோகுலநீதநவநீதாய | (நாராயணாய)

6. வாரிஜலோசனாய வாஸுதேவாய
வரமுனிபாரிஜாதாய
கருணாகர பக்தகாருண்யஸாராய
நாராயணதீர்த்தநதசரணாப்ஜாய | (நாராயணாய)

## கீர்த்தனம்—8

ப. *ஆதிசேஷனில் படுத்திருப்பவரும், உலகங்கள்*
அனு. *அனைத்தையும் இன்புறச் செய்பவரும், லக்ஷ்மியின் பதியுமான நாராயணனுக்கு நமஸ்காரம்.*

1. *நாபிக்கமலத்தில் தோன்றிய பிரம்ம தேவனால் துதிக்கப்பட்டவரும், மழைகாலத்தில் நீர் நிறைந்த கார்மேகத்தை ஒத்திருக்கும் திருமேனியை உடையவரும், பலவிதமான அசையும், அசையாப் பொருள்களாகவும் ஆண்பெண் வடிவம் உடையவராகவும் இருக்கிறவரும், நாரதர் முதலிய சிறந்த முனிவர்களால் வணங்கப்பட்டவரும், பூர்ணமான ஆனந்தத்தின் வடிவமுடையவருமான,*
*(நாராயணனுக்கு நமஸ்காரம்.)*

2. *கணக்கில் அடங்காத கல்யாண குணங்கள் நிறைந்தவரும், மறைகளால் போற்றத் தகுந்தவரும்,*

அச்சம், மனவருத்தம் ஆகிய குறையற்றவரும், வானம் போன்று மாசற்றதும், அடைவதற்கு அரிதானதுமான உண்மை அறிவையுடையவரும் தன்னை வழிபடும் அடியார்களுடைய உள்ளத் தாமரைக்கு கதிரவனாய் இருக்கிறவருமான,

(நாராயணனுக்கு நமஸ்காரம்.)

3. சுதர்சனம் எனப்படும் சக்ராயுதம், பாஞ்ச ஜன்யம் எனப்படும் சங்கம், கௌமோதகி எனப்படும் கதாயுதம், சார்ங்கம் எனப்படும் வில் இவற்றைக் கரங்களால் தாங்கி நிற்கிறவரும், குற்றமற்ற ஒளி மிகுந்த கௌஸ்துபம் எனப்படும் உயர்ந்த ஆபரணத்தைத் தன் திருக்கழுத்தில் அணிந்திருக் கிறவரும், பகைவர்களை அழித்தவனும், பறவைகளின் அரசனுமான கருடனை வாகனமாகக் கொண்டவருமான,

(நாராயணனுக்கு நமஸ்காரம்.)

4. பிணி முதலிய துன்பங்கள் அற்றவரும், காணும் உலகம் அனைத்துமாய் இருக்கிறவரும், கோடி மன்மதன் போன்று மிக்க அழகு வாய்ந்தவரும், பெயர், உருவம் இன்றி பூமா என்று உபநிஷத்தில் அழைக்கப்படும் எங்கும் நிறைந்த ஆனந்த ஸ்வரூபமாய் இருக்கிறவரும், சூரியனையும் சந்திரனையும் கண்களாகக் கொண்டவரும், கானம் செய்யப்படும் சாம வேத மந்திரங்களால் போற்றத் தகுந்தவருமான,

(நாராயணனுக்கு நமஸ்காரம்.)

5. உலகம் அனைத்திற்கும் ஒரே தலைவரும், காமனுக்குத் தந்தையும், பகைவர்களின் கூட்டத்தைப் போரில் வெற்றி கொண்டவரும், வேதங்களையே மூச்சுக்காற்றாய் உடையவரும், அழியாத பேரின்ப

வடிவுடையவரும், இணையற்ற கோகுலத்தில் கிருஷ்ணனாகத் தோன்றி வெண்ணெயை அபகரித்தவருமான,

(நாராயணனுக்கு நமஸ்காரம்.)

6. தாமரை இதழ் போன்ற விழிகளையுடையவரும், வஸுதேவரின் அருமைப் புதல்வரும், சிறந்த முனிவர்களுக்கு பாரிஜாதம் எனப்படும் கல்பக விருக்ஷம் போன்று இருக்கிறவரும், தன்னை வழிபடும் அடியார்களுக்கு வர்ஷிக்கின்ற கருணைரஸத்திற்கு கடலாக இருக்கிறவரும், நாராயணதீர்த்தரால் வணங்கப்பட்ட திருவடித் தாமரைகளையுடைய வருமான,

(நாராயணனுக்கு நமஸ்காரம்.)

ஶ்லோ ||

इति स्तुत्वा जगन्नाथं कृताञ्जलिपुटास्सुराः ।
मुहुर्मुहुर्नमन्तस्त मूचूश्चात्महितं वचः ॥20॥

भगवानपि तानाह भक्तिनम्रानसौ सुरान् ।
अवतीर्य यदोर्वंशे करिष्यामि हितन्तु वः ॥21॥

**ச்லோ—20–21**

இதி ஸ்துத்வா ஜகந்நாதம் க்ருதாஞ்ஜலிபுடாஸ்ஸுரா: |
முஹுர்முஹுர்நமந்தஸ்தமூசுச்சாத்மஹிதம் வச: ||

பகவானபி தானாஹ பக்திநம்ரானஸௌ ஸுரான் |
அவதீர்ய யதோர்வம்சே கரிஷ்யாமி ஹிதந்து வ: ||

**செ—20–21**

கூப்பிய கைகளுடன் கூடியவர்களான வானவர்கள் இவ்விதம் உலகத்தின் தலைவரான நாராயணனைப் புகழ்ந்து ஸ்தோத்திரம் செய்து, மீண்டும் மீண்டும் அவரை

வணங்கி, தங்களுக்கு நலம் செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

பூஜிக்கத் தகுந்த நாராயணனும், பக்தியால் வணங்கி நிற்கும் பிரம்மதேவன் முதலிய தேவர்களை நோக்கி, "யது மஹாராஜாவின் குலத்தில் நான் தோன்றி, உங்களுக்கு நன்மையைச் செய்கிறேன்" என்று கூறினார்.

## गद्यं-7 ॥

इत्येवं भगवतो वासुदेवस्य वदन-सुधानिधि-गळितां स्फुटतर-पदरस-मनोहरां वचन-सुधा-धारां सुर-भूसुर-बलाधारां श्रवणा-ञ्जलि-पुटैः पायं पायं शनैश्शनैः स्वस्व-भवनाभि-मुखा-स्तच्चरण-स्मरण चन्द्रिका-पनोदित-शोक-मोहानला-न्धकाराः चतुराननादय-स्सर्वे च गीर्वाणाः करतल - कलित-कपित्थो-पमं स्वकार्यं मन्वानाः संपूर्ण-मनोरथाः स्वस्व-भवन-माविविशुः ॥

**கத்யம்—7**

இத்யேவம் பகவதோ வாஸுதேவஸ்ய வதன-ஸுதாநிதி-களிதாம் ஸ்புடதர-பதரஸ-மனோஹராம் வசன-ஸுதா-தாராம் ஸுர-பூஸுர-பலாதாராம் ச்ர வணாஞ்ஜலி-புடை: பாயம் பாயம் சனைச்சனை: ஸ்வஸ்வ-பவநாபிமுகா-ஸ்தச்சரண-ஸ்மரண-சந்த்ரிகா-ப நோதித-சோக-மோஹாநலா-ந்தகாரா: சதுரானனா தய-ஸ்ஸர்வே ச கீர்வாணா: கரதல-கலித- கபித்தோ- பமம் ஸ்வகார்யம் மன்வானா: ஸம்பூர்ண-மனோரதா: ஸ்வஸ்வ-பவன-மாவிவிசு: ||

**சூர்ணிகை—7**

பிரம்மதேவன் முதலிய வானவர் அனைவரும் இவ்விதம் பூஜிக்கத் தகுந்த வாஸுதேவன் என்று புகழ்ந்து

கூறப்படும் நாராயணனுடைய திருமுகமாகிற சந்திரனி லிருந்து வெளிவந்ததும், மிகத் தெளிவான சொற்களின் அழகால் மனதைக் கவருகின்றதும், வானவர்களுக்கும், அந்தணர்களுக்கும் மிகுந்த ஆறுதலை அளிக்கின்றதுமான உபதேச வசனமாகிற அமுதப் பெருக்கை, குவித்த கரங்களால் போன்று செவிகளால் மிகுந்த உத்ஸாஹத் துடன் பருகிப் பருகி மெல்லத் தங்கள் தங்கள் வீடுகளை நோக்கியவர்களாகவும், நாராயணன் திருவடிகளை ஸ்மரணம் செய்வதாகிற நிலவால் தங்கள் உள்ளத்தில் இருக்கும் சோகம், மோஹம், ஆகிற தீயையும், இருட்டையும் போக்கிக் கொண்டவர்களாகவும், உள்ளங்கையிலுள்ள விளாம்பழம் போன்று, தங்களுக்கு இஷ்டமான காரியம் நிறைவேறியதாகவே எண்ணிவிட்டனர். தங்களுடைய மனோரதம் நிறைவேறியதாகவே கருகின்றவர்களாக தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றனர்.

श्लो ॥

ददौ कंसाय देवक्याः शिशुं प्रथमजं नृपः ।
अष्टमं स रिपुं मत्वा ददौ कंसः पुनश्शिशुम् ॥22॥

तद्वृत्तं नारदो ज्ञात्वा त्वरया कंसमन्दिरम् ।
समागतो निमित्तज्ञश्शिशूनां मरणं प्रति ॥23॥

**ச்லோ—22–23**

தெளை கம்ஸாய தேவக்யா: சிசும் ப்ரதமஜம் ந்ருப: |
அஷ்டமம் ஸ ரிபும் மத்வா ததௌ கம்ஸ: புனச்சிசும் ||

தத்வ்ருத்தம் நாரதோ க்ஞாத்வா த்வரயா கம்ஸமந்திரம் |
ஸமாகதோ [1]நிமித்தக்ஞச்சிசூநாம் மரணம் ப்ரதி ||

**செ—22–23**

வஸுதேவர் என்ற வேந்தனும் தேவகியிடம் முதலாவதாகப் பிறந்த குழந்தையை (தான் முன்பு கூறியபடி)

கம்ஸனிடம் கொடுத்தார். கம்ஸனும் தேவகியின் எட்டாவது பிள்ளையைத் தனக்கு பகைவன் என்று எண்ணி அந்தக் குழந்தையை வஸுதேவரிடம் திருப்பி அளித்து விட்டான்.

தேவகியிடமிருந்து தோன்றும் குழந்தைகளுடைய இறப்பின்[1] காரணத்தையறிந்தவரான நாரத முனிவர், கம்ஸன் முதலாவது குழந்தையைக் கொல்லாமல் வஸுதேவரிடம் திருப்பிக் கொடுத்த விஷயத்தை அறிந்தவுடன் கம்ஸனுடைய இல்லத்திற்கு விரைந்து வந்தார்.

**(விளக்கம்–1)** நாரதமுனிவர் அறிந்த தேவகியிடம் முதலாவதாகத் தோன்றிய ஆறு குழந்தைகளின் இறப்பின் காரணம்: – (இவ்விஷயம் பாகவதம் 10–வது ஸ்கந்தம், 85–வது அத்தியாயம் பார்க்க.)

தேவகியிடம் பிறந்த முதலாவதான ஆறு குழந்தைகளின் வரலாறு: ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் ஊர்னா என்பவளிடம், மரீசி முனிவருக்கு ஆறு குழந்தைகள் பிறந்தனர். அவர்கள் ஒரு சமயம் பிரும்ம தேவனை நோக்கி பரிகசித்துச் சிரித்தனர். சினம் கொண்ட பிரும்ம தேவனால் சபிக்கப்பட்ட இவர்களும் இரண்யகசிபுவிற்கு மக்களாகப் பிறந்து அவர்கள் பகவானுடைய மாயையால் தேவகியிடம் புதல்வர்களாகத் தோன்றினர். அவர்கள் கம்ஸனால் கொல்லப்பட்டவுடன் பாதாளத்தில் பலிச் சக்ரவர்த்தியிடம் இருந்து வளர்ந்து வந்தனர். நீண்ட காலத்திற்குப் பின் தன்னிடம் பிறந்து இறந்துபோன ஆறு குழந்தைகளையும் காண்பதற்கு விருப்பம் கொண்ட தேவகி தேவியானவள் தன்னுடைய புதல்வனான ஸ்ரீ கிருஷ்ணனிடம் கூறினாள். ஸ்ரீ கிருஷ்ணனும் அக்குழந்தைகளை பலிச் சக்ரவர்த்தியிடமிருந்து அழைத்து வந்து தன் அன்னையாகிய தேவகியிடம் அளித்தார். தேவகியும் தன் குழந்தைகளைக் கண்டு பேரானந்தம் அடைந்து, அக்குழந்தைகளை மடியில் வைத்து, ஸ்தன்யபானம் செய்து வைத்தாள். அக்குழந்தைகள் கிருஷ்ணன் குடித்தபின் அந்த ஸ்தனத்திலேயே பாலைக் குடித்ததால், சாபம் நீங்கி அசுரத் தன்மையை விட்டு, தேவத் தன்மையை அடைந்து சொர்க்கத்தை அடைந்தனர்.

अथ नारदागमनम् ॥

दरु-9

दरु - सौराष्ट्रं - आदि ॥

नारायण नारायण नारायणेति सततम् ।
वारं वारं गायं गायं ध्यायन्नारदोऽयं विराजते ॥

அத நாரதாகமனம் ||

தரு—9

தரு—ஸௌராஷ்ட்ரம்—ஆதி ||

நாராயண நாராயண நாராயணேதி ஸததம் |
வாரம் வாரம் காயம் காயம் த்யாயந்நாரதோSயம் விராஜதே ||

தரு—9

பின்னர் நாரதர் வருகை

*நாராயண! நாராயண! நாராயண!* என்று எப்பொழுதும் இடைவிடாமல் பாடிக்கொண்டும் உள்ளத்தால் த்யானம் செய்து கொண்டும், தேவ முனிவரான நாரதர் விளங்குகிறார்.

अथ कंसं प्रति नारदवचनं ॥

श्लो ॥

अष्टानामष्टमत्वे तु न विशेषोऽस्ति कश्चन ।
उपेक्षसे कथं मूढ यत्कर्तव्यं कुरुष्व तत् ॥24॥

एवमुक्तो नारदेन षट् सुतानवधीत्खलः ।
सङ्कर्षणस्तु रोहिण्यामानीतो योगमायया ॥25॥

அத கம்ஸம் ப்ரதி நாரதவசனம் |

## ச்லோ—24–25

அஷ்டானாமஷ்டமத்வேது ந விசேஷோஸ்தி கச்சன |
உபேக்ஷஸே கதம் மூட யத்கர்த்தவ்யம் குருஷ்வ தத் ||
ஏவமுக்தோ நாரதேன ஷட் ஸுதானவதீத்கல: |
ஸங்கர்ஷ்ணஸ்து ரோஹிண்யாமாநீதோ யோகமாயயா ||

**பின்னர் கம்ஸனைக் குறித்து நாரதர் கூறியது.**

## செ—24–25

ஹே, அறிவில்லாதவனே, கம்ஸா! தேவகியினிடம் தோன்றும் குழந்தைகள் அனைவரையும் எட்டாவது குழந்தை என்று கூறலாம். (உதாரணம்) இரண்டாவது குழந்தையை 'ஒன்று' என்று ஆரம்பித்தால், முதலில் பிறந்த குழந்தை எட்டாவது குழந்தையாகலாம். எனவே, ஆகாச வாணியானது எந்தக் குழந்தையை ஒன்று என்று கணக்கிட்டு எட்டாவது குழந்தையால் மரணம் என்று கூறியதோ நம்மால் தெரிந்துகொள்ள முடியாது. எனவே முதலாவது குழந்தையை விட்டு விடவேண்டாம். எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்துவிடு என்று நாரதர் கூறினார்.

இவ்விதம் நாரதமுனிவர் அவர்களால் கூறப்பட்டவனும், மிகக் கொடியவனுமான அந்தக் கம்ஸன் ஆறு குழந்தைகளையும் கொன்று விட்டான். தேவகியின் ஏழாவது கர்ப்பமானது நாராயணனுடைய யோக மாயையால் கோகுலத்தில் வாழும் வஸுதேவனின் மனைவியாகிய ரோகிணியிடம் வைக்கப்பட்டது.

**अथ भगवदाविर्भावः ॥**

## दरुः - 10 ॥

**दरु - नाथनामक्रिया - आदि ॥**

**शङ्खी चक्री गदी पद्मी शार्ङ्गी किरीटकुण्डली**
**श्रीवत्सकौस्तुभी दिव्यपीताम्बरो विराजते ॥**

அத பகவதாவிர்பாவ: ||

## தரு—10

தரு—நாதநாமக்ரியா—ஆதி ||

சங்கீ சக்ரீ கதீ பத்மீ சார்ங்கீ கிரீடகுண்டலீ |
ஸ்ரீவத்ஸகௌஸ்துபீ திவ்யபீதாம்பரோ விராஜதே ||

## தரு—10

**பின்னர் ஆறுவிதமான கல்யாண குணங்கள் நிறைந்த ஸ்ரீ வாஸுதேவனின் பிறப்பு.**

*பாஞ்சஜன்யம் என்ற சங்கு, சுதர்சனம் என்ற சக்ரம், கௌமோதகீ என்ற கதை, தாமரை மலர், சார்ங்கம் என்ற வில், பலவிதமான இரத்தினங்கள் இழைத்த கிரீடம், மகர குண்டலம், ஸ்ரீவத்ஸம் என்ற மச்சம், கௌஸ்துபம் என்ற உயர்ந்த ரத்தினம், அழகிய மஞ்சள் பட்டு இவற்றுடன் கூடியவராக ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீ கிருஷ்ணனாகத் தோன்றி விளங்குகிறார்.*

## श्लो ||

हरिरथ निजशक्त्या मूर्तिमास्थाय देवः
प्रकटितनिजरूपः [1] प्रादुरासीन्मुकुन्दः ।
यदुकुलवरगेहे देवकीगर्भवासा-
दुदितममरबृन्दं देवमस्तौदनन्तम् ॥26॥

## ச்லோ—26

ஹரிரத நிஜசக்த்யா மூர்த்திமாஸ்தாய தேவ:
ப்ரகடித நிஜரூப: [1]ப்ராதுராஸீன் முகுந்த: |
யதுகுல வரகேஹே தேவகீகர்ப்பவாஸா–
துதிதமமரப்ருந்தம் தேவமஸ்தௌதனந்தம் ||

## செ—26

மோக்ஷத்தை அளிப்பவரும், பாபத்தைப் போக்கு கின்றவரும் ஆகிய ஆதிநாராயணனான ஸ்ரீ வாஸுதேவன், தன்னுடைய மாயையின் மஹிமையால், அழகிய உருவத்தை அடைந்து, அடியார்கள் அனைவராலும் நன்கு பார்ப்ப தற்கு ஏற்ற உருவத்தை வெளியே [1]தோன்றும்படிச் செய்தார். யது வம்சத்தில் பிறந்தவரும், சிறந்தவருமான வஸுதேவ ருடைய வீட்டில் (அதாவது சிறையில்), தேவகியின் கர்ப்பத்தில் வசித்துவிட்டு, வெளித் தோன்றியவரும், அழிவற்றவருமான அந்த வாஸுதேவனை, பிரம்மன் முதலிய தேவர்களின் கூட்டம் துதிசெய்தது.

**(விளக்கம்–1)** प्रादुरासीत् 'வெளியில் தோற்றம் அளித்தார்' என்ற சொல்லால், ஹரியைக் குறிப்பிடுகிறார் ஸ்ரீநாராயண தீர்த்தர். 'எவ்விதம் பூர்ண சந்திரன் கிழக்குத் திக்கில் தோன்றுகின்றானோ (எங்கு பிறப்பது இல்லையோ), அங்ஙனமே ஸ்ரீ கிருஷ்ண பகவானும் எங்கும் நிறைந்திருப்பவராக இருந்துகொண்டே தேவகியிடம் தோன்றினாரே யன்றி, சாதாரண மனிதர்கள் போன்று கர்ப்பவாஸம் செய்து பிறப்பை அடையவில்லை' என்று ஸ்ரீமத் பாகவதம் 10–வது ஸ்கந்தம், 3–வது அத்யாயத்தில் கூறியபடி, ஸ்ரீ நாராயணதீர்த்தரும் கூறியுள்ளார்.

**देवक्यां देवरूपिण्यां विष्णुः सर्वगुहाशयः ।**
**आविरासीद्यथा प्राच्यां दिशीन्दुरिव पुष्कलः ॥**

श्लो ॥

कल्याणं वितनोतु कौस्तुभमणिं कण्ठे दधानश्शिशुः
कल्याणीमपि मे करोतु शुभदां वाणीं प्रवीणां धियम् ।
[1]देवक्या वसुदेवयादवपतेश्शङ्खी रथाङ्गी गदी
पद्मी नन्दकशार्ङ्गचापमकुटी पीताम्बरः कुण्डली ॥27॥

## ச்லோ—27

கல்யாணம் விதநோது கௌஸ்துபமணிம்
கண்டே ததானச்சிசு:
கல்யாணீமபி மே கரோது சுபதாம்
வாணீம் ப்ரவீணாம் தியம் |
[1]தேவக்யா வாஸுதேவயாதவ–
பதேச்சங்கீ ரதாங்கீ கதீ
பத்மீ நந்தகசார்ங்கசாபமகுடீ
பீதாம்பர: குண்டலீ ||

## செ—27

*சங்கம், சக்ரம், கதை, தாமரைப்பூ, கத்தி, (சார்ங்கம் என்ற) வில், பலவிதமான ரத்தினம் இழைத்த கிரீடம், மகர குண்டலம், மஞ்சள்பட்டு, கழுத்தில் கௌஸ்துபமணி இவற்றுடன் கூடியவரும், யாதவ குலத்தின் தலைவனான வஸுதேவருடையவும் தேவகிதேவியினுடையவும் குழந்தை யாகத் தோன்றியவருமான ஸ்ரீ கிருஷ்ணன், எல்லாவிதமான மங்களங்களையும் அளிக்கட்டும். என்னுடைய சொல்லை யும் எல்லாவிதமான நன்மைகளைத் தரக்கூடியதாகச் செய்யட்டும். அவ்விதமே என்னுடைய புத்தியையும் நல்லறிவு உள்ளதாகச் செய்யட்டும்.*

**(விளக்கம்–1)** தேவகி வஸுதேவர்களுக்கு ஸ்ரீகிருஷ்ண *பரமாத்மா அவருடைய இயற்கையில் உள்ள, ஆடை, ஆபரணம், ஆயுதம் ஆகியவற்றைத் தாங்கிக் கொண்டு சிறிய குழந்தை வடிவத்தில் தேவகியின் அருகாமையில் தோன்றினாரேயன்றி, உலகத்தில் சாதாரணமாக ஒரு குழந்தை தோன்றுவது போன்று தோன்றவில்லை, என்பதை பாகவதத்தில், 10-வது ஸ்கந்தத்தில், 3-வது அத்யாயத்தில் ஸ்ரீகிருஷ்ணருடைய பிறப்பை, வியாஸ முனிவர் வர்ணிப்பது போலவே ஸ்ரீநாராயணதீர்த்தரும் இங்கு வர்ணித்திருக்கிறார்.*

**तमद्भूतं बालकमम्बुजेक्षणम् चतुर्भुजं शङ्खगदार्युदायुधम् ।**
**श्रीवत्सलक्ष्मं गलशोभिकौस्तुभम् पीताम्बरं सान्द्रपयोदसौभगम् ॥**

**महार्हवैदूर्यकिरीटकुण्टलत्विषा परिष्वक्तसहस्रकुन्तलम् ।**
**उद्दामकाञ्चङ्गदकङ्कणादिभिर्विरोचमानं वसुदेव ऐक्षत ॥**

## गीतं-9 ॥

**कल्याणी - त्रिपुट ॥**

प ॥ जय जय श्रीनिवास जय जीमूताभ
जय जय श्रीनिवास ॥

अनु ॥ भयकारणविनाश भक्तमानसनिवास ॥ ॥ जय जय ॥

कमलदळनयन कनकमयवसन
रमणीयचन्द्रानन रञ्जितभुवन
कमलावल्लभ दीन- कामितफलनिदान
कामकोटिसम मोहन
मञ्जुलकञ्जवदन महामोहमथन
मङ्गळफलदान मुनीन्द्रवृन्दाधीन ॥1॥ ॥ जय जय ॥

सुन्दरचरणार- विन्द मणिनूपुर
मञ्जुळमुक्ताहार मन्दरधर
कुन्दरदन सुर- वन्दित मनोहर
चन्द्रिकासमस्मेर बाल
नीरदघननील पारावारविहार
परिपालितभूरादिलोकनिकर ॥2॥ ॥ जय जय ॥

विपुलपुण्डरीकाक्ष विश्वसन्त्राणदक्ष
अपहृतासुरपक्ष आर्तसंरक्ष
तापसजनरक्ष तारणाध्वरदीक्ष
आपदुद्धारवीक्षामोक्षा-

7

शेषदुष्टशिक्ष नानानिगमालक्ष्य
नारायणतीर्थपक्ष श्रीगोकुलसंरक्ष ॥3॥ ॥ जय जय ॥

## கீதம்–9

**கல்யாணி—த்ருபுட**

ப. ஜய ஜய ஸ்ரீநிவாஸ ஜய ஜீமூதாப
ஜய ஜய ஸ்ரீநிவாஸ |

அனு. பயகாரணவிநாச பக்தமானஸநிவாஸ || (ஜய ஜய)

1. கமலதளநயன கனகமயவஸன
ரமணீயசந்த்ரானந ரஞ்ஜிதபுவன
கமலாவல்லப தீன– காமிதபலநிதான
காமகோடிஸம மோஹன
மஞ்சுளகஞ்ஜவதந மஹாமோஹமதன
மங்களபலதான முநீந்த்ரப்ருந்தாதீன || (ஜய ஜய)

2. ஸுந்தர சரணார– விந்த மணிநூபுர
மஞ்ஜுளமுக்தாஹார மந்தரதர
குந்தரதன ஸுர– வந்தித மனோஹர
சந்த்ரிகாஸமஸ்மேர பால
நீரதகனநீல பாராவாரவிஹார
பரிபாலிதபூராதிலோகநிகர || (ஜய ஜய)

3. விபுலபுண்டரீகாக்ஷ விச்வஸந்த்ராணதக்ஷ
அபஹ்ருதாஸுரபக்ஷ ஆர்த்தஸம்ரக்ஷ
தாபஸஜனரக்ஷ தாரணாத்வரதீக்ஷ
ஆபதுத்தாரவீக்ஷாமோக்ஷா–
சேஷதுஷ்டசிக்ஷ நாநாநிகமாலக்ஷ்ய
நாராயணதீர்த்தபக்ஷ ஸ்ரீகோகுலஸம்ரக்ஷ || (ஜய ஜய)

## கீர்த்தனம்—9

ப. *லக்ஷ்மி தேவிக்கு இருப்பிடமாய் இருப்பவரே! நீருண்ட மேகம் போன்ற நீல நிறம் கொண்டவரே! வெற்றியுடன் விளங்குவீராக! வெற்றியுடன் விளங்குவீராக!*

அ. *(அடியார்களுடைய) அச்சத்திற்குக் காரணமாக இருப்பவற்றை அழிப்பவரே, (தன்னை வழிபடும்) பக்தர்களின் உள்ளத்தில் வசிப்பவரே, (வெற்றியுடன் விளங்குவீராக! வெற்றியுடன் விளங்குவீராக!)*

1. *தாமரை இதழ் போன்ற அழகிய விழிகளையுடையவரே, தங்கமயமான மஞ்சள் பட்டை உடுத்தியிருப்பவரே, அழகிய சந்திரன் போன்ற முகத்தையுடையவரே, இவ்வுலகங்களை ஆனந்திக்கும்படி செய்பவரே, லக்ஷ்மீ தேவியின் கணவரே, ஏழைகளால் விரும்பப்படும் நலங்கள் அனைத்திற்கும் மூலகாரணமாக இருப்பவரே, கோடி மன்மதர்களுக்கு இணையான அழகு வாய்ந்தவராக இருந்துகொண்டு, உலகமனைத்தையும் மயக்கமுறச் செய்கின்றவரே, மிகவும் அழகிய தாமரை மலர் போன்ற முகத்தையுடையவரே, மஹாமோஹம்[1] எனப்படும் அக்ஞானத்தால் ஏற்படும் துன்பத்தை வேருடன் அறுப்பவரே, சிறந்த நன்மைகளை அளிப்பவரே, சிறந்த பக்தி செய்யும் முனிவர்களின் கூட்டத்திற்கு அடிமையாய் இருப்பவரே, (வெற்றியுடன் விளங்குவீராக! வெற்றியுடன் விளங்குவீராக!)*

**(விளக்கம்–1)** *'மஹாமோஹம்' - அக்ஞானத்தின் ஐந்து பிரிவுகளில் ஒன்றாகும் என்று பாகவதம் 3-வது ஸ்கந்தம், 12-வது அத்யாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.*

**ससर्जाग्रेऽन्धतामिस्रमथ तामिस्रमादिकृत् ।**
**महामोहं च मोहं च तमश्चाज्ञानवृत्तयः ॥**

2. *இரத்தினங்களால் செய்யப்பட்ட பாதஸரம் எனப்படும் அணியால் அழகு வாய்ந்த அழகிய திருவடித் தாமரைகளையுடையவரே, உள்ளத்தைக் கவரும் முத்து மாலையை அணிந்திருப்பவரே, (தேவர்களும் அசுரர்களும் அமுதத்திற்காக பாற்கடலில் மந்திர மலையைக் கடலினுள் மத்தாக*

வைத்து கடைந்தபோது) மந்தர மலையை (கடலினுள் செல்லாமல்) தாங்கியவரே, ஆம்பல் பூ போன்ற (அழகிய வெண்மையான) பற்களையுடையவரே, வானவர்களால் வணங்கப்பட்டவரே, மனதைக் கவரும் நிலவுக்கு இணையான புன்சிரிப்பை யுடையவரே, சிறிய குழந்தை வடிவம் தாங்கியவரே, மழை பொழியும் மேகம் போன்று கருத்த நிறமுடையவரே, பாற்கடலில் ஸந்தோஷமாக வசிப்பவரே, பூமி முதலான பதிநான்கு உலகங் களையும் திறமையுடன் காப்பாற்றுகின்றவரே, (வெற்றியுடன் விளங்குவீராக! வெற்றியுடன் விளங்குவீராக!)

3. அகன்று அழகிய தாமரை இதழ் போன்ற விழிகளையுடையவரே, உலகங்கள் அனைத்தையும் நன்கு காப்பாற்றுவதில் திறமை வாய்ந்தவரே, அசுரர்களுடைய கூட்டத்தை அழித்தவரே, துன்புற்ற அடியார்களை நன்கு காப்பாற்றுகின்றவரே, கடுந்தவம் புரியும் முனிவர்களைக் காப்பாற்று கின்றவரே, (பிறப்பு இறப்பு ஆகிய ஸம்ஸாரக் கடலில் துன்புற்று இருக்கும் அடியார்களை மோக்ஷம் என்னும்) கரைக்குக் கொண்டு போதல் என்ற வேள்வியில் கங்கணம் கட்டியிருப்பவரே, துன்பங் களால் தவிக்கும் மாந்தர்களைக் காப்பதற்கு அவர்களைத் தயவுடன் பார்க்கின்றவரே, தீயவர்கள் அனைவரையும் தண்டிப்பவரே, பலவிதமான மறைகளால் அறியத் தகுந்தவரே, லக்ஷ்மிக்கு இருப்பிடமான கோகுலத்தை நன்கு காப்பாற்று கிறவரே, ஸ்ரீ நாராயணதீர்த்தருக்கு அருள் பாலிப்பவரே, (வெற்றியுடன் விளங்குவீராக! வெற்றியுடன் விளங்குவீராக!)

ச்லோ ||

देवक्याश्शिशुभावमेत्य भगवान्नारायणः श्रीपतिः
सर्वज्ञानमहाविभूतिसहितस्तत्प्राक्तनैः कर्मभिः ।
आदित्येन्दुसहस्रकोटिसदृशा भासा गृहं भासयन्
पित्रोः स्नेहसुधामहोदधिशशांकोऽयं हरिर्गीयते ॥28॥

**ச்லோ—28**

தேவக்யாச்சிசுபாவமேத்ய பகவான் நாராயண: ஸ்ரீபதி
ஸர்வக்ஞானமஹாவிபூதிஸஹிதஸ்தத்ப்ராக்தனை:[1] கர்மபி: |
ஆதித்யேந்துஸஹஸ்ரகோடிஸத்ருசா பாஸா க்ருஹம் பாஸயன்
பித்ரோ: ஸ்னேஹஸுதாமஹோததிசசாங்கோऽயம் ஹரிர்கீயதே ||

**செ—28**

ஆறுவிதமான கல்யாண குணங்கள் நிறைந்தவரும், லக்ஷ்மிதேவியின் கணவரும், உலகம் அனைத்தையும் நன்கு அறியும் திறமையுடன் கூடியவரும் ஆகிய, ஸ்ரீமந் நாராயணன், வஸுதேவரும் தேவகியும் முற்பிறவியில் செய்துள்ள புண்ணிய கர்மங்களின் பயனாக[1], தேவகிக்கு, குழந்தையாய்த் தோன்றி, ஆயிரம் கோடி சூரியன், சந்திரன் போன்று மிக்கப் பிரகாசமானதும், குளிர்ந்ததுமான தன்னுடைய திருமேனியின் ஒளிகளால் தேவகி வஸுதேவர்களுடைய இருப்பிடத்தை ஒளிமிகுந்ததாகச் செய்து கொண்டு, தாய் தந்தையர் அன்பாகிற அமுதக் கடலுக்கு, சந்திரன்போல் விளங்குகிற ஸ்ரீகிருஷ்ண பகவான், துதித்துப் பாடப்படுகிறார்.

**(விளக்கம்–1)** तत्प्राक्तनैः कर्मभिः — ஸ்வாயம்புவ மனுவின் காலத்தில், 'ப்ருச்னி' என்ற மனைவியுடன் 'ஸுதபா:' என்ற முனிவர் பிரும்ம தேவனுடைய உத்தரவின் பேரில் நல்ல பிள்ளையை அடைவதற்காக பனிரண்டாயிரம் தேவ வருஷங்கள்

கடும் தவம் புரிந்தார். தவத்திற்குரிய வரனை அளிக்க விஷ்ணு அவர்கள் முன் தோன்றினார். அப்பொழுது அந்த தம்பதிகள், 'விஷ்ணுவைப் போன்ற புத்திரனையே' வரமாக வேண்டினர். விஷ்ணுவிற்குச் சமமான வேறு ஒருவர் இல்லாததால், விஷ்ணுவே அவர்களுக்கு 'ப்ரச்னி கர்ப்பன்' என்ற பெயருடன் பிறந்தார். பின்னர், அந்த தம்பதிகளே, அதிதியாகவும், கச்யபராகவும், தோன்றினர். அப்பொழுது அவர்களுடைய புண்ணியங்களுக்கு இணங்கி, விஷ்ணுவே 'உபேந்திரன்' (வாமனன்) என்ற பெயருடன் பிறந்தார். மூன்றாவதாக, அத்தம்பதிகளே தேவகி வஸுதேவர் களாகத் தோன்றினர். இப்பிறவியிலும் அவர்களுடைய புண்ணியங்களுக்கு ஏற்ப விஷ்ணுவானவர் ஸ்ரீகிருஷ்ணனாகப் பிறந்தார்.

இந்த விஷயம் ஸ்ரீமத் பாகவதத்தில் 10-வது ஸ்கந்தம் 3-வது அத்யாயத்தில் 32-45 வரை உள்ள சுலோகங்களால் விவரிக்கப் பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட விஷயத்தை तत्प्राक्तनैः कर्मभिः என்ற சொற்றொடரால் ஸ்ரீநாராயணதீர்த்தரும் குறிப்பிட்டுள்ளார்கள்.

## गीतं ॥10॥

### केदारगौळं - चापु

प । मङ्गलालय मामव देव ॥

अनु । पङ्कजासनभावितभाव ॥ ॥ मङ्गलालय ॥

देवकीवसुदेववरतनूज
दिव्यकिरीट दलितभवबीज
सर्वयोगिविचिन्त्यपदाब्ज
सङ्गताशेषसाधुसमाज ॥1॥ ॥ मङ्गलालय ॥

अपरिमितानन्दबोधस्वरूप
अतिकरुणाविधृताद्भुतरूप

कपटराक्षसहर खण्डितपाप
कनकाम्बरधर कपटदुराप ॥2॥ ॥ मङ्गळालय ॥

मकरकुण्डलकेयूरादिविभूष
मनसिजशतकोटिमञ्जुळवेष
विकचकमलदळसदृशायताक्ष
विमलगोकुलगोपाखिलरक्ष ॥3॥ ॥ मङ्गळालय ॥

कलितश्रीकौस्तुभकमनीयकण्ठ
करुणारसभर मिलितवैकुण्ठ
परिपालय भूरिभाग्यवितरण
गुरुभक्तशिवनारायणतीर्थशरण ॥4॥ ॥ मङ्गळालय ॥

## கீதம்–10

### கேதாரகௌளம்—சாபு

ப. மங்களாலய மாமவ தேவ |

அனு. பங்கஜாஸனபாவிதபாவ | (மங்களாலய)

1. தேவகீவஸுதேவவரதநூஜ
திவ்யகிரீட தளிதபவபீஜ
ஸர்வயோகிவிசிந்த்யபதாப்ஜ
ஸங்கதாசேஷஸாது ஸமாஜ | (மங்களாலய)

2. அபரிமிதாநந்தபோதஸ்வரூப
அதிகருணாவித்ருதாத்புதரூப
கபடராக்ஷஸஹர கண்டிதபாப
கநகாம்பரதர கபடதுராப | (மங்களாலய)

3. மகரகுண்டலகேயூராதிவிபூஷ
மனஸிஜசதகோடிமஞ்ஜுளவேஷ
விகசகமலதளஸத்ருசாயதாக்ஷ
விமலகோகுலகோபாகிலரக்ஷ | (மங்களாலய)

4. கலிதஸ்ரீகௌஸ்துபகமநீயகண்ட
கருணாரஸபர மிளிதவைகுண்ட

பரிபாலய பூரிபாக்யவிதரண
குருபக்தசிவநாராயணதீர்த்தசரண | (மங்களாலய)

## கீர்த்தனம்—10

ப. ஸகல நலன்களுக்கும் இருப்பிடமாக இருப்பவரே, ஹே, தேவா, என்னைக் காப்பாற்றுவீராக!

அ. தாமரை மலர் மீது வீற்றிருக்கும் பிரம்மதேவனால் உள்ளத்தில் எப்பொழுதும் தியானம் செய்யப்படுகின்றவரே, (காப்பாற்றுவீராக)

1. தேவகிக்கும் வஸுதேவருக்கும், நிகரற்ற மிகச் சிறந்த புதல்வனாகத் தோன்றியவரே, அழகிய கிரீடம் அணிந்தவரே, சம்சாரத்தின் மூலகாரணமான அக்ஞானத்தை அழிப்பவரே, யோகிகள் அனைவராலும் உள்ளத்தில் தியானம் செய்யத் தகுந்த திருவடித் தாமரையை உடையவரே, சிறந்த மகான்களுடைய கூட்டங்கள் அனைத்திலும் சேர்ந்து இருப்பவரே, (காப்பாற்றுவீராக)

2. அளவிடமுடியாத பேரின்பம், உண்மையறிவு இவைகளின் வடிவமானவரே, அடியார்களிடம் மிகுந்த தயவினால் அநேகவிதமான ஆச்சரியத்தை[1] அளிக்கும் (மத்ஸ்யம்) முதலான உருவங்களை ஏற்றவரே, மாயாவிகளான (ராவணன் முதலிய) அரக்கர்களை அழித்தவரே, குற்றம் புரிந்தவர்களைத் தண்டித்தவரே, மஞ்சள் நிறமுடைய பட்டாடை உடுத்தியவரே, கள்ளம் நிறைந்த உள்ளத்தினரால் அடைய முடியாதவரே, (காப்பாற்றுவீராக)

**(விளக்கம்–1)** ஸ்ரீமத் பாகவதத்தில் வியாஸமுனிவர், கிருஷ்ணாவதாரம், ராமாவதாரம், ந்ருஸிம்மாவதாரம் முதலிய அவதாரங்களைக் குறிப்பிடும்போது, ஸ்ரீமந்நாராயணன் எல்லையற்ற கருணையாலேயே அப்படிச் செய்கிறார் என்று குறிப்பிடுவதற்காக, ஒவ்வொரு அவதாரத்தைக் கூறும்போதும் अद्भुत (அத்புத) என்ற அடைமொழியைச் சேர்த்திருக்கிறார்.

இவ்விஷயத்தையே अतिकरुणा विधृताद्भुतरूप என்ற சொற்றொடரால் ஸ்ரீநாராயணதீர்த்தர் கூறியுள்ளார்கள்.

3. மகர குண்டலம் என்ற காதணி, கேயூரம் என்ற தோள்வளைகள் முதலிய அணிகளை அணிந்திருப்ப வரே, நூறு கோடி மன்மதர்களுக்கு இணையான அழகுடனும், அழகிய அலங்காரங்களுடனும் கூடியவரே, மலர்ந்த தாமரை இதழ் போன்ற அகன்ற விழிகளை உடையவரே, தூய்மையான கோகுலத்தில் வாழும் இடையர்கள் அனைவரையும் காப்பாற்றிய வரே, (காப்பாற்று வீராக)

4. அழகிய திருக்கழுத்தில் ஒளிமிகுந்த கௌஸ்துப மணியை அணிந்திருப்பவரே, அளவற்ற தயாரஸம் நிறைந்தவரே, வைகுண்டத்தில் வசிப்பவரே, அடியார்களுக்கு அபீஷ்டங்களை நிரம்ப வாரி வழங்குபவரே, குருபக்தரான சிவநாராயண தீர்த்தருக்கு புகலிடமாக இருப்பவரே, (காப்பாற்று வீராக)

श्लो ॥

**अलौकिकमिदं रुपमालोक्यानकदुन्दुभिः[1] ।**
**हरेस्सभार्यः प्रोवाच कंसाद्भीतस्त्वधीरधीः ॥29॥**

**सर्वाधार रमापतेऽथ भगवम्स्त्वचिन्तनीयं विभो**
**यत्कर्तव्यमशेषलोकविभुना ब्रह्मण्यरक्षाविधौ ।**
**एवं रूपममानुषं मुनिवरध्येयं समाच्छादय**
**स्वामिन्मानुषबालभावमधुना सन्दर्शयास्मान्प्रति ॥30॥**

**ச்லோ—29–30**

அலௌகிகமிதம் ரூபமாலோக்யானகதுந்துபி:[1] |
ஹரேஸ்ஸபார்ய: ப்ரோவாச கம்ஸாத்பீதஸ்த்வதீரதீ: ||

ஸர்வாதார ரமாபதேSத பகவம்ஸ்த்வத்சிந்தனீயம் விபோ
யத்கர்த்தவ்யமசேஷலோகவிபுநா ப்ரஹ்மண்யரக்ஷா–விதௌ |
ஏவம் ரூபமமாநுஷம் முனிவரத்யேயம் ஸமாச்சாதய
ஸ்வாமின் மாநுஷபாலபாவமதுநா ஸந்தர்சயாஸ்மான் ப்ரதி ||

## செ—29–30

*'ஆனகதுந்துபி'*[1] *என்ற புகழ் பெற்ற வஸுதேவர் தன் மனைவியோடு கூட ஸ்ரீமந்நாராயணனுடைய, மிக ஆச்சரிய மான அந்த உருவத்தைப் பார்த்து விட்டு, கம்ஸனிடமிருந்து பயந்தவராகவும், தைரியமற்றவராகவும் கூறினார்.*

*உலகமனைத்தையும் தாங்கி நிற்பவரே, லக்ஷ்மி தேவியின் கணவரே, பூஜிக்கத் தகுந்தவரே, என் தலைவா, மறைகள், அந்தணர்கள் முதலிய உலகத்திற்கு க்ஷேமத்தை அளிக்கக் கூடியவைகளைக் காப்பாற்றும் விஷயத்தில் உலகம் அனைத்திற்கும் தலைவனான தங்களால், யாதொன்று செய்யப்பட வேண்டுமோ அதை நிச்சயிக்க வேண்டும். சிறந்த முனிவர்களால் உள்ளத்தில் த்யானம் செய்யத் தகுந்ததும், மனிதர்கள் வாழும் உலகில் காணமுடியாததும், (திவ்யமான ஆயுதங்கள், ஆபரணங்கள், நான்கு கைகள் இவற்றுடன் கூடிய) இந்த உருவத்தை மறைத்து விடுங்கள். எங்கள் தலைவா, மானிடர்களுக்கு இயல்பான சிறிய குழந்தை வடிவத்தை அடைந்து இப்பொழுது எங்களுக்கு தரிசனம் தந்து அருள்வீராக.*

**(விளக்கம்–1)** *ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிற்குத் தந்தையாகப் போகின்றவர் என்ற காரணத்தால் வஸுதேவருடைய பிறப்பின் போதே மங்கள வாத்யங்களை தேவர்கள் முழங்கினர். அதன் காரணமாகவே அவருக்கு* आनकदुन्दुभिः *(ஆனகதுந்துபி) என்ற பெயர் ஏற்பட்டது. (பாகவதம், 9–வது ஸ்கந்தம், 24–வது அத்யாயம்.)*

## गीतं-11 ॥

**मुखारि - चापु ॥**

प । रक्ष रक्षासुरशिक्ष राजीवदलायताक्ष
अक्षीणकृपाकटाक्ष आश्रितपक्षसंरक्ष ॥ रक्ष रक्ष ॥

सर्वमनोरथाध्यक्ष सर्वलोकावनदक्ष
सर्ववेदान्तैकलक्ष्य सर्वयोगीन्द्रसंरक्ष
अप्रमेयबलवीर्य अनुपममहौदार्य
अपरिमितगाम्भीर्य अव्ययाखण्डितैश्वर्य ॥1॥
॥ रक्ष रक्ष ॥

पतितजनपावन पङ्कजसुन्दरानन
पतगपतिवाहन पण्डितपरिपालन
अच्युतानन्तगोविन्द अत्यन्तनिर्मलान्द
विच्युतसम्सारकन्द विश्वमङ्गळ मुकुन्द ॥2॥
॥ रक्ष रक्ष ॥

तावकरूपमुदारं धारय शान्तसंसारम्
दर्शय मानुषाकारं देव बालकशरीरम्
चिन्तयाथ यद्विधेयं चेतसा चिरानुभाव्य
अन्तरायो मा भूदद्य आगमबृन्दसुवेद्य ॥3॥
॥ रक्ष रक्ष ॥

अद्य मे जन्मसाफल्यं अद्य मे वंशवैमल्यम्
सद्य एव समजनि सम्भूते त्वयि भूमनि
कलिकल्मषनाशनं कामितफलनिदानम्
नारायणीयचरितं नारायणतीर्थगीतम् ॥4॥
॥ रक्ष रक्ष ॥

**கீதம்–11**

முகாரி—சாபு

ப. ரக்ஷ ரக்ஷாஸுரசிக்ஷ ராஜீவதளாயதாக்ஷ
அக்ஷீணக்ருபாகடாக்ஷ ஆச்ரிதபக்ஷஸம்ரக்ஷ ||
|| ரக்ஷ ரக்ஷ ||

1. ஸர்வமனோரதாத்யக்ஷ ஸர்வலோகாவனதக்ஷ
ஸர்வ வேதாந்தைகலக்ஷ்ய ஸர்வயோகீந்த்ரஸம்ரக்ஷ
அப்ரமேயபலவீர்ய அனுபமமஹௌதார்ய
அபரிமிதகாம்பீர்ய அவ்யயாகண்டிதைச்வர்ய ||
|| ரக்ஷ ரக்ஷ ||

2. பதிதஜனபாவன பங்கஜஸுந்தரானன
பதகபதிவாஹன பண்டிதபரிபாலன
அச்யுதாநந்தகோவிந்த அத்யந்தநிர்மலாநந்த
விச்யுதஸம்ஸாரகந்த விச்வமங்களமுகுந்த ||
|| ரக்ஷ ரக்ஷ ||

3. தாவகரூபமுதாரம் தாரய சாந்தஸம்ஸாரம்
தர்சய மானுஷாகாரம் தேவ பாலகசரீரம்
சிந்தயாத யத்விதேயம் சேதஸா சிரானுபாவ்ய
அந்தராயோ மா பூதத்ய ஆகமப்ருந்த ஸுவேத்ய ||
|| ரக்ஷ ரக்ஷ ||

4. அத்ய மே ஜன்மஸாபல்யம் அத்ய மே வம்சவைமல்யம்
ஸத்ய ஏவ ஸமஜனி ஸம்பூதேத்வயி பூமநி
கலிகல்மஷநாசனம்[1] காமிதபலநிதானம்
நாராயணீயசரிதம் நாராயணதீர்த்தகீதம் ||
|| ரக்ஷ ரக்ஷ ||

## கீர்த்தனம்—11

ப. *அசுரர்களை அழிப்பவரே, தாமரை இதழ் போன்ற அகன்ற விழிகளை உடையவரே, குறைவற்ற தயை நிறைந்த கடைக்கண் பார்வை உடையவரே, தன்னை வழிபடும் அடியார்களின் கூட்டத்தை நன்கு காப்பாற்றுகின்றவரே, என்னைக்காத்தருளும், காத்தருளும்.*

1. *உலகத்தினர் அனைவருடைய உள்ளங்களிலும் ஏற்படும் கற்பனைகளை நேரடியாகக் கவனிப்பவரே, உலகங்கள் யாவற்றையும் (துன்பங்களிலிருந்து) காப்பதில் மிகத் திறமை வாய்ந்தவரே, வேதாந் தங்கள் அனைத்திற்கும் ஒரே குறிக்கோளாக*

இருப்பவரே, உள்ளத்தை ஒடுக்கிய சிறந்த யோகிகளை நன்கு காப்பாற்றுபவரே, ஒருவராலும் அளவிட்டு அறியமுடியாத பலத்தையும், வீர்யத்தையும் அடைந்தவரே, (கர்ணன் முதலிய) கொடையாளிகளோடும் ஒப்பிட முடியாத அளவுக்கு நிகரற்ற கொடையளிப்பவரே, சிறந்த அறிவாளி களாலும் அறிந்து கொள்வதற்கு இயலாத உள்ளத்தைக் கொண்டவரே, அழிவற்றவரே, ஒருவராலும் நாசம் செய்யப்படாத எல்லாவிதமான செல்வச் சிறப்பும் பெற்றவரே, (என்னைக் காத்தருளும், காத்தருளும்).

2. பாவம் செய்த மாந்தர்களையும் தூய்மையாக்கு கின்றவரே, தாமரையைப் போன்ற அழகிய திருமுகத்தோனே, பறவைகளுக்கு அரசனான கருடன் மீது ஏறிச் செல்பவரே, ஆத்மஞானம் நிறைந்த பிரம்மஞானிகளைப் பாதுகாப்பவரே, தான் அறியாமல் இருந்து கொண்டு தன்னை வழிபடும் அடியார்களையும் அழியாமல் செய்பவரே காலத் தாலும் தேசத்தாலும் பொருளாலும் முடிவில்லாத வரே, வேதங்களாலும் பசுக்களாலும் பூஜிக்கப் பட்டவரே, மிகவும் தூய்மையான பேரானந்தத்தை அடைந்தவரே, பிறப்பு இறப்பு ஆகிற ஸம்ஸாரத்தின் மூல காரணமான அக்ஞானத்தை அழிப்பவரே, உலகத்திற்கு எப்பொழுதும் நன்மையை அளிப்பவரே, (அடியார்களுக்கு) மோக்ஷத்தை அளிப்பவரே, (என்னைக் காத்தருளும், காத்தருளும்).

3. ஹே, தேவா, ஸம்ஸார துக்கத்தை ஒழிக்கின்றதும், மிகச் சிறந்ததும், சாதாரண மானிடர்போல் சிறிய குழந்தையின் உடலுடன் கூடியதுமான தங்களுடைய அழகிய ரூபத்தை அடைந்து, (பின்னர்) எங்களுக்கு காக்ஷி அளிக்க வேண்டும். உள்ளத்தால் நீண்ட

காலம் த்யானம் செய்யத் தகுந்தவரே, நாங்கள் எதைச் செய்ய வேண்டுமோ அதையும் ஆலோசித்துக் கூறுவீர்களாக. வேதங்கள் அனைத்தாலும் நன்கு அறியத்தகுந்தவரே, இப்பொழுது ஒரு இடையூறும் வராமல் இருக்க வேண்டும்.

4. எங்களுக்குப் புதல்வனாகத் தாங்கள் தோன்றிய பொழுதான இன்றைய தினமே என்னுடைய பிறவியானது பயனுள்ளதாக ஆயிற்று. இன்றே என்னுடைய குலம் தூய்மை பெற்றது. அடியார்களுக்கு விரும்பிய பயனை அளிப்பதற்கு மூல காரணமாக இருப்பதும், கலிதோஷங்களை[1] இல்லாமல் செய்வதுமான, ஆதிநாராயணனுடைய சரித்திரம், நாராயண தீர்த்தரால் புகழ்ந்து பாடப் பட்டது.

**(விளக்கம்–1)** கலிஸந்தரண உபநிஷத்தில், கலிதோஷம் நீங்குவதற்கு 'ஹரி', 'ராம', 'கிருஷ்ண' என்ற மூன்று நாமங்களை எப்பொழுதும் ஜபம் செய்ய வேண்டும் என்று பிரம்மதேவன், நாரதமுனிவருக்குக் கூறியிருப்பதையனுசரித்து இங்கு, ஸ்ரீநாராயண தீர்த்தர் कलिकल्मषनाशनम् என்ற சொற்றொடரை உபயோகித்துள்ளார்கள்.

श्लो ॥

इति निगदति तस्मिन् यादवेन्द्रे सभार्ये
भवभयतिमिरारिर्देवकीभागधेयम् ।
सकलनिगमगुह्यं दर्शयन्स्वीयभावम्
परमकरुणया तौ सान्त्वयन्नेवमाह ॥31॥

**ச்லோ—31**

இதி நிகததி தஸ்மின் யாதவேந்த்ரே ஸபார்யே
பவபயதிமிராரிர்தேவகீபாகதேயம் |

ஸகலநிகமகுஹ்யம் தர்சயந்ஸ்வீயபாவம்
பரமகருணயா தௌ ஸாந்த்வயந்நேவமாஹ ||

**செ—31**

இவ்விதம் மனைவி தேவகியுடன் கூட, சிறந்தவரான வஸுதேவர் கூறிய பொழுது, ஸம்ஸாரத்தில் ஏற்படும் அச்சமாகிற இருளை அழிப்பவரும், தேவகியின் புண்ணிய பயனாய்த் தோன்றியவருமான ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, வேதங்கள் அனைத்திலும் மிக ரகசியமாகக் கூறப்பட்டுள்ள தன்னுடைய மஹிமையை, தேவகி, வஸுதேவர்களைக் காணும்படிச் செய்து கொண்டு, மிகுந்த தயவுடன் அவர்களுக்கு ஆதரவு அளித்துப் பின் வருமாறு கூறினார்.

## गीतं - 12 ॥

**सावेरि - आदि ॥**

**प॥ अवधारय मामीश्वरं देवादिदेवं**
**अवधारय मामीश्वरम् ॥**

**अनु ॥ तव तात तपसा सन्तोषितोऽहं**
**तावकतनयात्मनाऽवनिं समवतीर्णोऽखिलसारम् ।**
**॥ अवधारय ॥**

**आगमान्तैकमानकमनन्यभावमगणितलोकनायकम्**
**विगळितमोहमेकं विमलयोगितारकम्**
**गगनाकारमनेकं गतागतनिवारकम् ॥1॥ ॥ अवधारय ॥**

**मधुरापुरं समानय मामकयोगमायामिह निधापय**
**अथ गोकुले नय मां अनवद्यनन्दालयम्**
**विधिना कृतविनयं विविधयोगिसुगेयम् ॥2॥ ॥ अवधारय ॥**

सङ्कर्षणाख्यमव्ययं साधुविधेयं सम्भूतमाश्रिताभयम्
शृङ्गारादिनिलयं श्रीरामनामधेयम्
सङ्गतं मत्सहायं सर्वलोकाभ्युदयम् ॥3॥ ॥ अवधारय ॥

सुरवैरिभूरिसङ्कुलं धरणीतलमिदमासुरहरणोद्यमम्
परिभावय मामिति परमार्थगीतमिह
वरनारायणतीर्थविचितमेतदिति ॥4॥ ॥ अवधारय ॥

## கீதம்—12

**ஸாவேரி—ஆதி**

ப. அவதாரய மாமீச்வரம் தேவாதிதேவம்
அவதாரய மாமீச்வரம் ||

அனு. தவ தாத தபஸா ஸந்தோஷிதோSஹம்
தாவகதனயாத்மனாSவனிம்
ஸமவதீர்ணோSகிலஸாரம் || (அவதாரய)

1. ஆகமாந்தைகமானகமனன்யபாவமகணித லோகநாயகம்
விகளிதமோஹமேகம் விமலயோகிதாரகம்
ககனாகாரமநேகம் கதாகதநிவாரகம் || (அவதாரய)

2. மதுராபுரம் ஸமாநய மாமகயோகமாயாமிஹ நிதாபய
அத கோகுலே நய மாம் அநவத்யநந்தாலயம்
விதினா க்ருதவிநயம் விவிதயோகிஸுகேயம் || (அவதாரய)

3. ஸங்கர்ஷணாக்யமவ்யயம் ஸாதுவிதேயம்
ஸம்பூதமாச்ரிதாபயம் |
ச்ருங்காராதிநிலயம் ஸ்ரீராமநாமதேயம்
ஸங்கதம் மத்ஸஹாயம் ஸர்வலோகாப்யுதயம் || (அவதாரய)

4. ஸுரவைரிபூரிஸங்குலம் தரணீதலமிதமாஸுர ஹரணோத்யமம் |
பரிபாவய மாமிதி பரமார்த்தகீதமிஹ
வரநாராயணதீர்த்தவிரசிதமேததிதி || (அவதாரய)

## கீர்த்தனம்—12

ப. *(ஹே, வஸுதேவரே)* என்னைத் தேவர்களுக் கெல்லாம் முதலாவது தேவனாகவும், இவ்வுலகங்கள்

அனைத்திற்கும் நிகரற்ற தலைவனாகவும், என்னை அறிந்து கொள்வீராக.

அ. தந்தையே, உங்களுடைய (முற்பிறவியில் செய்துள்ள) தவத்தால் மிக்க மகிழ்ச்சியடைந்தவனான நான், தங்கள் இருவர்களுக்கும் புதல்வனாகத் தோன்றி, இம்மண்ணுலகில் அவதரித்துள்ளேன். எல்லா வற்றிற்கும் மூலகாரணமாக, (என்னை அறிந்து கொள்வீராக).

1. மறைகளின் முடிவுகளால் மட்டுமே அறியப்படக் கூடியவன், இரண்டற்றவன், இவ்வுலகின் தலைவர் களான இந்திரன் முதலானவர்களுக்கும் மேலானவன், அறியாமை அற்றவன், ஒன்றாக இருப்பவன், தூய்மை வாய்ந்த யோகிகளை ஸம்ஸாரத்திலிருந்து காப்பாற்றுகின்றவன், வானம் போன்று எங்கும் நிறைந்தவன், எல்லாமாக இருப்பவன், (அடியார்களுடைய) மீண்டும் மீண்டும் நிகழ்கின்ற பிறப்பு இறப்பு என்கின்ற போக்குவரத்தை நிறுத்துபவன் என்று, (என்னை அறிந்து கொள்வீராக).

2. கோகுலத்தில் குற்றமற்ற நந்தகோபரின் கிருகத்திற்கு என்னை எடுத்துச் செல்வீராக; பிறகு என்னைச் சேர்ந்த யோகமாயை (இப்பொழுது நந்த கோகுலத்தில் தோன்றியிருப்பவளை) இந்த மதுரா நகரத்திற்கு எடுத்து வந்து இங்கு வைப்பீராக; பிரும்ம தேவனால் வணங்கப்பட்டவராகவும் யோகிகள் பலராலும் புகழ்ந்து பாடத் தகுந்தவராகவும், (என்னை அறிந்து கொள்வீராக).

3. அழிவில்லாதவரும், அண்டியவர்களின் அச்சத்தை அகற்றுகிறவரும், சிறந்த மகான்களுக்கு அடிமையாய் இருப்பவரும், தெய்வத்தால் கோகுலத்திற்குக் கொண்டு போகப்பட்டவரும், ஸங்கர்ஷனன் என்று பெயர் உள்ளவருமான பலபத்ரனை (அறிந்து

கொள்வீராக); ச்ருங்காரம் முதலிய ரஸங்களுக்கு இருப்பிடமானவரும், ஸ்ரீராமன் என்று திருநாமம் உடையவரும், உலகங்கள் அனைத்திற்கும் மங்களங்களைச் செய்பவரும், என்னுடன் சேர்ந்து எனக்கு ஸகாயமாக இருப்பவருமாக (பலபத்ரனை அறிந்து கொள்வீராக).

4. வானவர்களின் பகைவர்களான அசுரர்களுடைய கூட்டங்களால், (துஷ்டர்களான வேந்தர்களால்) இந்த மண்ணுலகமானது நலிந்து விட்டது; அத்தகைய அசுரர்களை வேருடன் அழிப்பதற்கு முயற்சி யுடையவனாக என்னை அறிந்து கொள்வீராக என்ற உண்மையானது சிறந்த பக்தரான நாராயணதீர்த்தர் அவர்களால் இங்கு இவ்விதம் பாடலாகச் செய்யப் பட்டது. (இவ்விதம் என்னை அறிந்து கொள்வீராக).

**श्लो ॥**

सुप्तेषु कंसदूतेषु द्वारेषूद्घाटितेषु च ।
मदाज्ञया यमुनया दत्तमार्गेण मां नय ॥32॥

इति कथितवतीश्वरे तथैव
प्रणयवशादकरोद्यदुप्रवीरः ।
सुखमधिवसति स्म गोकुलाख्यम्
हरिरखिलान्तरचित्प्रभोऽपि मायी ॥33॥

**ச்லோ—32–33**

ஸுப்தேஷு கம்ஸதூதேஷு த்வாரேஷூத்காடிதேஷு ச |
மதாக்ஞயா யமுநயா தத்தமார்கேண மாம் நய ||

இதி கதிதவதீச்வரே ததைவ
ப்ரணயவசாதகரோத்யதுப்ரவீர: |
ஸுகமதிவஸதி ஸ்ம கோகுலாக்யம்
ஹரிரகிலாந்தரசித்ப்ரபோऽபி மாயீ ||

## செ—32–33

(ஹே, வஸுதேவரே) இந்த நள்ளிரவில் கம்ஸனுடைய பணியாட்கள் தூங்கும்பொழுது, சிறைச்சாலையின் வாயில் கதவுகள் திறந்தவுடன், (என்னைச் சுமந்து செல்கிற உமக்கு) என் உத்தரவால் யமுனா நதியால் அளிக்கப்பட்ட வழியோடு சென்று, என்னைக் கோகுலத்தில் கொண்டு சேர்ப்பீராக.

ஸர்வேச்வரரான பகவான் ஸ்ரீகிருஷ்ணன் இவ்விதம் கூறிய பொழுது, யாதவ ச்ரேஷ்டரான வஸுதேவர் அப்படியே மிக்க அன்புடன் கிருஷ்ணனைக் கொண்டு கோகுலத்தில் சேர்த்தார். உலகத்தாருடைய உள்ளங்களில் ஞான ஒளிகளுடன் பிரகாசிப்பவரும், அடியார்களுடைய பாபத்தையும், துன்பத்தையும் இல்லாமல் செய்கின்றவரு மான மாயாவியான கிருஷ்ணன் கோகுலம் என்னும் சிறந்த புண்ணிய பிரதேசத்தில் சுகமாக வாழ்ந்து வந்தார்.

### अथ मधुरायां यद्वृत्तं तदुपवर्ण्यते ॥

## गद्यं - 8 ॥

स खलु नरपते-रुग्रसेनस्या-ग्रिमसूनुः समधिगता-सुर-प्रकृतिकः कंसा-सुर-नामा विख्यातो दुर्विनय-दुर्वीर्य-गर्व-मदान्धकार-परिभूत-विवेक-दर्शनः परिवृत-कालनेमि-कलेबरो-ऽपि अपरिवृत-तद्वासनाजाल-परिवेष्टितः निज-परिजनै-स्सत्वरा-वबोधित-स्सन्-अतिमन्द-मतिरपि अमन्दगतिः देवक्या-स्तु अष्टमो गर्भः कंस-मृत्यु-रिति अशरीर-वाक्यं श्रुत-मनुसन्दधानो वेपमानो वसुदेव-मन्दिरं इन्दिरा-सुन्दरं आजगाम ॥

**அத மதுராயாம் யத்வ்ருத்தம் ததுபவர்ண்யதே ||**

**கத்யம்—8**

ஸ கலு நரபதே-ருக்ரஸேனஸ்யா-க்ரிமஸூநு: ஸமதி-கதா-ஸுர-ப்ரக்ருதிக: கம்ஸாஸுர-நாமா விக்யாதோ

துர்-வினய-துர்வீர்ய-கர்வ-மதா-ந்தகார-பரிபூத-விவேக-தர்சன: பரிவ்ருத-காலநேமி-கலேபரோ஽பி அபரிவ்ருத-தத்வாஸனா- ஜால-பரிவேஷ்டித: நிஜ-பரிஜனை-ஸ்ஸத்வரா-வபோதி த - ஸ்ஸந்-அதிமந்த - மதிரபி அமந்தகதி: தேவக்யா-ஸ்த்வஷ்டமோ கர்ப: கம்ஸம்ருத்யு-ரித்யசரீர-வாக்யம் ச்ருத-மனுஸந்ததானோ வேபமானோ வஸுதேவ மந்திரம் இத்திரா-ஸுந்தரம்-ஆஜகாம ||

## சூர்ணிகை—8

உக்ரஸேன மகாராஜாவினுடைய முதலாவது புதல்வன், அசுரர்களின் இயற்கை குணங்களை அடைந்தவனும், கம்ஸாஸுரன் என்று பெயர் பூண்டவனும், மிக்க புகழ் பெற்றவனும், தீய குணம், பிறருக்குத் துன்பத்தை விளைவிக்கும் மிக மட்டமான பலம், இறுமாப்பு, கொழுப்பு ஆகிய இருளால் மறைக்கப்பட்ட பகுத்தறிவையுடையவனும், காலநேமி எனப்படும் தன் முற்பிறவியிலுள்ள உடலை மறைத்தவன் எனினும், காலநேமியிடம் இருந்துள்ள கெட்ட குணங்களும் அதன் தன்மைகளும் நிறைந்து இருப்பவனும், தன்னுடைய பணியாட்களால் (தேவகீ தேவிக்கு எட்டாவது குழந்தை பிறந்திருப்பது) உடனே தெரிவிக்கப் பட்டவனாய் இருந்துகொண்டு, மிக மட்டமான அறிவுடையவன் எனினும், (இந்த சந்தர்ப்பத்தில்) மட்டமில்லாத (தடங்கலில்லாத) வேகமாக நடை உள்ளவனாகவும் இருந்து கொண்டு "தேவகீ தேவிக்குப் பிறக்கும் எட்டாவது குழந்தையானது கம்ஸனைக் கொல்லும் சத்ரு" என்று அசரீரமான சப்தத்தைக் கேட்டதை நினைவுபடுத்திக் கொண்டவனாகவும், அச்சத்தால் நடுங்கியவனாகவும், லக்ஷ்மிதேவி வசிப்பதனால், மிக அழகு பொருந்தியதான, வஸுதேவர் இருக்கும் இடத்தை வந்தடைந்தான்.

श्लो ।।

भागिनेयीमसौ दृष्ट्वा दुष्टात्मा तत्र मन्दिरे ।
गृहीत्वा पादमेतस्याः क्षेप्तुं भूमौ मनो दधे ।।34।।

पदा सन्ताड्य कंसं सा योगमाया सुदुर्नयम् ।
अन्तरिक्षं गता विष्णोर्दुर्गाऽभूत्संस्तुतामरैः ।।35।।

**ச்லோ—34–35**

பாகிநேயீமஸௌ த்ருஷ்ட்வா துஷ்டாத்மா தத்ர மந்திரே |
க்ருஹீத்வா பாதமேதஸ்யா: க்ஷேப்தும் பூமௌ மநோ ததே ||

பதா ஸந்தாட்ய கம்ஸம் ஸா யோகமாயா ஸுதுர்நயம் |
அந்தரிக்ஷம் கதா விஷ்ணோர் துர்காSபூத்ஸம்ஸ்துதாமரை: ||

**செ—34–35**

*மிகக் கெட்ட உள்ளம் படைத்த அந்த கம்ஸன், அந்த வஸுதேவர் வாழும் இடத்தில் தன் சகோதரி தேவகிக்கு எட்டாவதாகப் பிறந்திருக்கும் பெண் குழந்தையைப் பார்த்தவுடன், அப்பெண் குழந்தையினுடைய கால்களைப் பிடித்து பூமியில் தூக்கி எறிவதற்கான எண்ணம் கொண்டான்.*

*(பெண் குழந்தையாகத் தோற்றமளிக்கும்) மஹா விஷ்ணுவின் யோக மாயையானவள், மிகத் தீய குணம் படைத்தவனும், தன் காலைப் பிடித்தவனுமான அந்த கம்ஸனைத் தனது காலாலேயே உதைத்துத் தள்ளி விட்டு வானத்தை அடைந்தாள்; துர்க்கா தேவியாகக் காக்ஷியளித்தாள்; வானவர் அனைவராலும் துதிக்கப்பட்டாள்.*

गीतं - 13 ।।

आहिरी - चापु ।।

प ।। जय जय दुर्गे जितवैरिवर्गे ।

अनु ॥ वियदनिलादि- विचित्रसर्गे ॥ ॥ जय जय ॥

सुन्दरतरचरणारविन्दे
सुखपरिपालितलोकबृन्दे
नन्दसनन्दनादियोगिवन्द्ये
नारायणसोदरि परमानन्दे ॥1॥ ॥ जय जय ॥

सरसमणिनूपुरसङ्गतपादे
समधिगताखिलसाङ्गवेदे
नरसुरकिन्नरबहुगीते
नन्दसुते निखिलानन्दचरिते ॥2॥ ॥ जय जय ॥

कनकपटावृतघनतरजघने
कल्याणदायिनि कमनीयवदने
इनकोटिसङ्काशदिव्याभरणे
इष्टजनाभीष्टवरदाननिपुणे ॥3॥ ॥ जय जय ॥

अनुदयालयसच्चिदानन्दलतिके
आलोलमणिमयताटंकघनिके
नरनारीरूपादिकार्यसाधनिके
नारायणतीर्थभावितफलके ॥4॥ ॥ जय जय ॥

**கீதம்–13**

ஆஹிரீ—சாபு

ப. ஜய ஜய துர்கே ஜிதவைரிவர்கே |

அனு. வியதநிலாதி– விசித்ரஸர்கே || (ஜய ஜய)

1. ஸுந்தரதரசரணாரவிந்தே
ஸுகபரிபாலிதலோகப்ருந்தே
நந்தஸநந்தநாதியோகிவந்த்யே
நாராயணஸோதரி பரமாநந்தே | (ஜய ஜய)

2. ஸரஸமணிநூபுரஸங்கதபாதே
ஸமதிகதாகிலஸாங்கவேதே
நரஸுரகிந்நரபஹுகீதே
நந்தஸுதே நிகிலாநந்தசரிதே | (ஜய ஜய)

3. கனகபடாவ்ருதகநதரஜகனே
கல்யாணதாயினி கமநீயவதனே
இனகோடிஸங்காசதிவ்யாபரணே
இஷ்டஜனாபீஷ்டவரதானநிபுணே | (ஜய ஜய)

4. அனுதயாலயஸச்சிதாநந்தலதிகே
ஆலோலமணிமயதாடங்ககனிகே
நரநாரீரூபாதிகார்யஸாதனிகே
நாரயணதீர்த்தபாவிதபலகே | (ஜய ஜய)

## கீர்த்தனம்—13

ப. *பகைவர்களின் கூட்டத்தை அழித்து வெற்றி கொண்டவளே! ஹே! துர்கா தேவியே! வெற்றிக் கொடியுடன் விளங்குவாயாக!*

அனு. *வானம், காற்று முதலிய ஐந்து பூதங்கள், அவற்றா லான விசித்திர உலகங்கள், இவற்றைப் படைத்த வளே! (வெற்றிக் கொடியுடன் விளங்குவாயாக!)*

1. *மிக்க அழகு வாய்ந்த திருவடித் தாமரைகளை உடையவளே! சிறிதும் சிரமமின்றி தனது அடியார் களுடைய கூட்டத்தைக் காப்பாற்றுபவளே! பிரும்மானந்தம் நிறைந்த, ஸநக, ஸநந்தன, ஸநாதன யோகிகளால் வணங்கத் தகுந்தவளே! நாராயண னின் உடன் பிறந்தவளே! பரமானந்த வடிவத்தை யுடையவளே! (வெற்றிக் கொடியுடன் விளங்கு வாயாக!)*

2. *மிகவும் மனதைக் கவரும் இரத்தினங்களாலான காற்சிலம்புகளால் அலங்கரிக்கப்பட்ட திருவடிகளை யுடையவளே! சீக்ஷை, கல்பம், வியாகரணம், சந்தஸ், நிருத்தம், ஜ்யோதிஷம் ஆகிய ஆறு அங்கங்கள், ருக்,*

யஜுஸ், ஸாம, அதர்வணம் ஆகிய நான்கு வேதங்கள், இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்திருப்பவளே! மனிதர்கள், தேவர்கள், கின்னரர்கள் ஆகியவர்களால் பலமுறை புகழ்ந்து துதிக்கப்பட்டவளே! நந்த கோபரின் அருமைப் புதல்வியே! அடியார்கள் அனைவருக்கும் இன்பத்தை அளிக்கும் லீலைகளைப் புரிகின்றவளே! (வெற்றிக் கொடியுடன் விளங்கு வாயாக!).

3. தங்க மயமான பட்டு அணிந்து மிக அழகுடன் விளங்கும் இடையை உடையவளே! மங்களங்களை அளிப்பவளே, மிக்க அழகிய திருமுகத்தினளே! கோடி கதிரவர்களுக்கு இணையான ஒளிகளை யுடைய திவ்யமான அணிகளை அணிந்திருப்பவளே! தன்னை வழிபடும் பக்த ஜனங்களுக்கு விரும்பிய வற்றை அளிப்பதில் மிகத் திறமை வாய்ந்தவளே! (வெற்றிக் கொடியுடன் விளங்குவாயாக!).

4. தோன்றி மறையும் இயல்பு இல்லாமல், எப்பொழுதும் இருக்கும் தன்மை வாய்ந்த இருப்பு, அறிவு, ஆனந்தம் ஆகிய உயர்ந்த கனிகளுக்குக் கொடி போன்று இருப்பவளே! அசைகிறதும், இரத்தினங் களால் இழைக்கப்பட்டதுமான மிகவும் கெட்டியான காதோலைகளை அணிந்திருப்பவளே! புருஷர்களும், பெண்களுமாக நிறைந்திருக்கும் இவ்வுலகத்தி னுடைய செயல்கள் அனைத்திற்கும் உறுதுணையாக இருப்பவளே! ஸ்ரீ நாராயண தீர்த்தரால் விரும்பப் படும் பயனை அளிப்பவளே! (வெற்றிக் கொடியுடன் விளங்குவாயாக!).

श्लो ॥

दुर्गे दुर्गतिहारिणि त्रिजगतां सर्गादिसिद्धार्तके
स्वर्गादीष्टफलप्रदाननिपुणे त्रायस्व नश्शंकरि ।

सा त्वं सर्वजनान्तरान्तरचिदंशानन्यसिद्धात्मिका
सारासारविवेकदृष्टिविदिता सर्वैकसाक्ष्यात्मिका ॥36॥

इत्यादिगीर्भिर्गीर्वाणगणैर्गीता प्रसाद्य तान् ।
सा वैष्णवीति विख्याता त्रिषु लोकेषु पूज्यते ॥37॥

दुरन्तचिन्ताग्राहेण ग्रस्तोऽयं कंसकुञ्जरः ।
अलब्धशरणोऽस्वस्थो नीडं स्वीयमुपागतः ॥38॥

**ச்லோ—36–38**

துர்கே துர்கதிஹாரிணி த்ரிஜகதாம் ஸர்காதி-
ஸித்தார்தகே
ஸ்வர்காதீஷ்டபலப்ரதானநிபுணே த்ராயஸ்வ
நச்சங்கரி |
ஸா த்வம் ஸர்வஜநாந்தராந்தரசிதம்சாநந்ய-
ஸித்தாத்மிகா
ஸாராஸாரவிவேகத்ருஷ்டிவிதிதா ஸர்வைக-
ஸாக்ஷ்யாத்மிகா ||

இத்யாதி கீர்பிர்கீர்வாண-
கணைர்கீதா ப்ரஸாத்ய தான் |
ஸா வைஷ்ணவீதி விக்யாதா
த்ரிஷு லோகேஷு பூஜ்யதே ||

துரந்தசிந்தாக்ராஹேண
க்ரஸ்தோऽயம் கம்ஸகுஞ்ஜர: |
அலப்தசரணோऽஸ்வஸ்தோ
நீடம் ஸ்வீயமுபாகத: ||

**செ—36–38**

மூன்று உலகங்களின் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய காரியங்களைச் செய்து முடித்தவளே, அடியார்களின் கஷ்டங்களை அழிப்பவளே, (அடியார்களுக்கு) சொர்க்கம் முதலிய விரும்பிய பயனை அளிப்பதில் மிகத் திறமை வாய்ந்தவளே, ஹே, துர்கே, சங்கரரின் மனைவியே, எங்களைக் காப்பாற்றுவாயாக. பெருமை வாய்ந்த நீ ஸகல

ஜீவராசிகளுடையவும் உள்ளே இருக்கும் ஜீவாத்மாவிற்கும் ஸ்வரூபமாய் விளங்கும் சித் ரூபமான பரமாத்ம வஸ்துவிலிருந்து வேறுபடாது இருப்பவள்; எது உண்மை எது பொய், எது அழிவு உள்ளது, எது அழிவில்லாதது என்று பாகுபாடு செய்து ஆராய்ந்து ஏற்படும் பகுத்தறிவுள்ள சிறந்த பெரியோர்களாலேயே நீ அறியப்படுபவள். மேலும், உயிர்கள் அனைத்தினுடையவும் உள்ளத்தில் வீற்றிருந்து, அவற்றின் அனைத்துச் செயல்களையும் நேராகக் கண்டு கொண்டிருக்கும் சாக்ஷி வடிவமாய் இருப்பவள்.

இவ்விதம் அழகிய சொற்களால் வானவர்களின் கூட்டங்களால் புகழ்ந்து துதிக்கப்பட்ட துர்கா தேவியானவள் அந்த தேவர்களை அருள்பாலித்தாள். மூன்று உலகங்களிலும் அத்தகைய துர்கா தேவியே, வைஷ்ணவீ என்றும் புகழ் பெற்றவளாய் மாந்தர்கள் அனைவராலும் வணங்கி பூஜிக்கப்படுகின்றாள்.

முடிவில்லாத கவலையாகிற முதலையால் பீடிக்கப் பட்ட அந்த கம்ஸன் என்ற யானை, புகலிடம் ஒன்றையும் அடைய முடியாமல் தன் வீட்டை வந்தடைந்தது.

**इति श्रीनारायणतीर्थविरचितायां श्रीकृष्णलीलातरङ्गिण्यां**
**श्रीकृष्णप्रादुर्भाववर्णनं नाम**
**प्रथमस्तरङ्गः ॥**

**இதி ஸ்ரீநாராயணதீர்த்தவிரசிதாயாம்**
**ஸ்ரீகிருஷ்ணலீலாதரங்கிண்யாம்**
**ஸ்ரீகிருஷ்ணப்ராதுர்பாவவர்ணனம் நாம**
**ப்ரதமஸ்தரங்க: ||**

இவ்விதமாக ஸ்ரீநரராயணதீர்த்தரால் இயற்றப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணீ என்ற நூலில், ஸ்ரீகிருஷ்ண பகவானின் தோற்றத்தை வர்ணிக்கும் முதலாவது தரங்கமும், வேங்கடேச ப்ரியை எனப்படும் அதனுரையும் முற்றிற்று..

# फलश्रुतिः ॥

श्रीगोपालघनादपारकरुणापीयूषधारास्सृताः
या नारायणतीर्थभूधरपरिक्षिप्तास्समस्ताश्च ताः ।
संभूयाच्युतभक्ततभूमिषु वहत्यानन्दयन्ती जगत्
पावित्र्यं वितनोतु कृष्णविलसल्लीलातरङ्गिण्यसौ ॥

ஸ்ரீகோபாலகனாதபாரகருணாபீயூஷதாராஸ்ஸ்ருதா:
யா நாராயணதீர்த்தபூதரபரிக்ஷிப்தாஸ்ஸமஸ்தாச்ச தா: |
ஸம்பூயாச்யுதபக்தபூமிஷு வஹத்யானந்தயந்தீ ஜகத்
பாவித்ரியம் விதநோது க்ருஷ்ணவிலஸல்லீலாதரங்கிண்யஸௌ ||

இந்த நூல், கண்ணனாகிற கார்மேகத்திலிருந்து தோன்றிய எல்லையற்ற கருணாரஸப் பெருக்குகள் ஸ்ரீநாராயணதீர்த்தர் என்கிற மலையில் எவ்வளவு விழுந்தனவோ, அவ்வளவும் ஒன்று சேர்ந்து, "கிருஷ்ணலீலா தரங்கிணீ" என்ற திருநாமம் பூண்ட ஆறாகத் தோன்றியது. இந்நூல், ஸ்ரீகிருஷ்ணனை வழிபடும் பக்தர்களாகிற வயல்களில் பாய்ந்து ஓடி, இவ்வுலகத்தை இன்புற்றிருக்கும் படிச் செய்து கொண்டு, உலகம் அனைத்தையும் தூய்மைப் படுத்தட்டும்.

कामदा कामिनामेषा मुमुक्षूणाञ्च मोक्षदा ।
शृण्वतां गायतां भक्त्या कृष्णलीलातरङ्गिणी ॥

காமதா காமினாமேஷா முமுக்ஷூணாஞ்ச மோக்ஷதா |
ச்ருண்வதாம் காயதாம் பக்த்யா க்ருஷ்ணலீலா தரங்கிணீ ||

ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணீ என்ற பக்தி நூல், இதை மிகுந்த பக்தியுடன் பாடுகின்றவர்களுக்கும், ஆதரவுடன் கேட்கின்றவர்களுக்கும், அவரவர்களின் விருப்பத்திற்கேற்ப, அறம், பொருள், இன்பம், வீடு முதலியவற்றை அளிப்பதாக இருக்கிறது.

(இவை 12-ம் தரங்கத்தின் முடிவிலுள்ள செய்யுட்கள்.)

## पद्यसूची ॥


| | |
|---|---|
| अमृतकलश | 43 |
| अलौकिकमिदम् | 107 |
| अष्टानाम् | 94 |
| आदौ कृष्णावतारः | 60 |
| इति कथितवति | 116 |
| इति निगदति | 112 |
| इति विविधवचोभिः | 85 |
| इति स्तुत्वा | 90 |
| इत्यादि गीर्भिः | 123 |
| इत्येवं सङ्ग्रहेण | 61 |
| उग्रसेनस्ततः | 61 |
| एवमुक्तो | 94 |
| कल्याणं वितनोतु | 97 |
| कृष्ण कृष्ण | 56 |
| गिरिराजसुता | 38 |
| गोकुले कृष्ण | 61 |
| तद्वृत्तं | 92 |
| ददौ कंसाय | 92 |
| दुर्गे दुर्गति | 122 |
| दुरन्तरचिन्ता | 123 |
| देवक्याः | 103 |
| दृष्ट्वासुरेन्द्रम् | 72 |
| नारदस्योपदेशेन | 61 |
| पदा सन्ताड्य | 119 |
| ब्रह्मासुरेन्द्रो | 61 |
| भगवानपि | 90 |
| भागिनेयीं | 119 |
| रोहिणेयस्य | 61 |
| वसुदेव | 68 |
| वासुदेवे | 60 |
| वैनतेयम् | 44 |
| शरणमुपगता | 81 |
| सर्वज्ञान | 52 |
| सर्वाधार | 107 |
| सुसेषु | 116 |
| हरिरथ | 96 |
| हिमगिरि | 38 |
| क्षीराब्धि | 85 |


## गीतसूची ॥


| | |
|---|---|
| अवधारय मां | 113 |
| जय जय स्वामिन् | 40 |
| जय जय रमानाथ | 53 |
| जय जय श्रीनिवास | 99 |
| जय जय दुर्गे | 119 |
| नारायणाय नमो | 86 |
| मङ्गलालय | 104 |
| मत्स्यकूर्म | 56 |
| रक्ष रक्षासुर | 108 |
| रामकृष्णगोविन्देति | 75 |
| शरणं भव करुणां | 82 |
| श्रीनारायणवाहन | 47 |

## गद्यसूची ॥


| | |
|---|---|
| अथ देवकी | 67 |
| अथ भगवान् | 73 |
| अथ वसुदेव | 70 |
| अथ सनकादीनाम् | 74 |
| इत्येवं भगवति | 81 |
| इत्येवं भगवतो | 91 |
| एवं सनकादिभिः | 79 |
| स खलु नरपतेः | 117 |


## செய்யுள் அட்டவணை


| | |
|---|---|
| அம்ருதகலச | 44 |
| அலௌகிகம் | 107 |
| அஷ்டானாம் | 95 |
| ஆதௌ க்ருஷ்ணாவதார: | 61 |
| இதி கதிதவதி | 116 |
| இதி நிகததி | 112 |
| இதி விவிதவசோபி: | 85 |
| இதி ஸ்துத்வா | 90 |
| இத்யாதி கீர்பி: | 123 |
| இத்யேவம் ஸங்க்ரஹேண | 62 |
| உக்ரஸேன: | 62 |
| ஏவமுக்தோ நாரதோ | 95 |
| கல்யாணம் விதநோது | 98 |
| கிரிராஜ | 38 |
| கோகுலே க்ருஷ்ண | 62 |
| க்ருஷ்ண க்ருஷ்ண க்ருபா | 56 |
| சரணமுபகதா | 81 |
| ததௌ கம்ஸாய | 92 |
| தத்வ்ருத்தம் | 92 |
| துரந்தரசிந்தா | 123 |
| துர்கே துர்கதி | 123 |
| தேவக்யா: | 103 |
| த்ருஷ்ட்வா | 73 |
| நாரதஸ்யோப | 62 |
| பகவானபி | 90 |
| பதா ஸந்தாட்ய | 119 |
| பாகிநேயீம் | 119 |
| ப்ரும்ஹா | 62 |


ரௌஹிணேயஸ்ய 61
வஸுதேவ 68
வாஸுதேவே 60
வைநதேயம் 44
ஸஸர்வ்க்ஞான 53
ஸர்வாதார 108
ஸுப்தேஷு 116
ஹரிரத 96
ஹிமகிரி 38
க்ஷீராப்தி 85


## சூர்ணிகை அட்டவணை

அத தேவகீ 67
அத பகவான் 73
அத வஸுதேவ 70
அத ஸநகாதீனாம் 74
இத்யேவம் பகவதி 81
இத்யேவம் பகவதோ 91
ஏவம் ஸநகாதிபி: 79
ஸகலு நரபதே: 117

## கீர்த்தனம் அட்டவணை

அவதாரய மாம் 114
சரணம் பவ கருணாம் 83
நாராயணாய நமோ 87
மங்களாலய 105
மத்ஸ்யகூர்ம 57
ரக்ஷரக்ஷாஸுர 109
ராம க்ருஷ்ண கோவிந்தேதி 76
ஜயஜய துர்கே 120
ஜயஜய ரமாநாத 54
ஜயஜய ஸ்வாமின் 41
ஜயஜய ஸ்ரீநிவாஸ 100
ஸ்ரீநாராயணவாஹன 48





வரஹூர் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள்